We Shine Academy™

guiding you to get through

# CURRENT AFFAIRS

## MAY 2017

# தேசிய செய்திகள்

## மே – 1

- குழந்தைகளைத் தத்தெடுக்க விரும்பும் பெற்றோர் இனி பல குழந்தைகளில் இருந்து ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுக்க முடியாது. தாங்கள் அளிக்கும் குழந்தையை பெற்றோர்களால் ஏற்கவோ, மறுக்கவோ மட்டுமே முடியும் என்று தேசிய தத்தெடுப்பு வள ஆணையம் (சிஆர்ஏ) தெரிவித்துள்ளது. மேலும் இந்த விதிமுறை இன்று முதல் அமலுக்கு வருகிறது.

- தில்லியில் மாசுக் கட்டுப்பாட்டு சான்றிதழ் இல்லாமல் லட்சக்கணக்கான வாகனங்கள் இயங்குவதாக, சுற்றுச்சூழல் மாசுத் தடுப்பு, கட்டுப்பாட்டு ஆணையம் (இபிசிஏ) மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

- வீடு மற்றும் மனைகள் விற்பனையில் நடைபெறும் முறைகேடுகளை தடுப்பதற்காக இயற்றப்பட்ட மனை வணிகச் சட்டம், இன்று (மே 1) முதல் அமலுக்கு வருகிறது.

- வாகனங்களின் காலாவதித் தேதியை நிர்ணயிக்கும் உரிமை மத்திய அரசுக்கு மட்டுமே உள்ளதாக மத்திய கனரக தொழிற்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- மத்திய ஆசிரியர் நியமன தகுதிக்கான தேர்வு (சி.டெட்) முறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 2 முறை நடத்தப்பட்டு வரும் இந்தத் தேர்வை ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே நடத்த சிபிஎஸ்இ அமைப்பு முடிவு செய்துள்ளது. மேலும் இந்த தகவலை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்திட்டம் சிபிஎஸ்இ அமைப்பு தெரிவித்துள்ளது.

- ரியல் எஸ்டேட் துறையில் வீடுகள் வாங்குவோரின் நலன்களைப் பாதுகாக்கவும், ரியல் எஸ்டேட் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தவும் ஏற்ற வகையில் மத்திய அரசு, 'ரியல் எஸ்டேட்

- (ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி) சட்டம்' என்ற பெயரில் ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது. பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ள இந்த சட்டம் இன்று முதல் அமலுக்கு வருகிறது.

## மே – 2

- ஜூலை 1ம் தேதி முதல் பான் எண் பெறுவதற்கும், ஆதார் எண்ணை கட்டாயம் தெரிவிக்க வேண்டும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. போலிகளை தடுப்பதற்காகவே நிரந்தர கணக்கு எண் (பான்) பெறுவதற்கு ஆதார் எண் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- காயமடைந்த மற்றும் நோயுற்ற பசுக்களைக் காக்கும் நோக்கத்தில் உத்திரப்பிரதேசத்தில் ஆம்புலன்ஸ் சேவை தொடங்கப்பட்டுள்ளது. இந்த சேவையை அம்மாநிலத்தின் துணை முதல்வர் கேசவ் பிரசாத் மவுர்யா மே.1 அன்று கொடியசைத்துத் துவங்கி வைத்தார்.

- ஹெச் 1 பி விசா சிக்கலால் அவுட் சோர்ஸிங் முறையில் இந்தியாவிலிருந்து பொறியாளர்களை அனுப்புவதில் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்காவிலேயே நிறுவனங்கள் தொடங்கி அங்குள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குவதில் இன்போசிஸ் நிறுவனம் முன்னிரிமை வழங்கி வருகின்றன.

- உலக வெப்பமயமாதல் மற்றும் பசுமை இல்லா வாயுக்கள் காரணமாக உலக அளவில் கடலின் வெப்பநிலை உயர்ந்து கடல்களின் மட்டம் உயர்ந்து கடல்களின் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகரித்து வரும் வெப்பநிலை காரணமாக சில கடல்களின் மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளதாக பதிவாகியுள்ளது. ஆனால் இந்தியப் பெருங்கடலை பொறுத்தவரை இது சற்று வேறுபட்டு காணப்படுகிறது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- பினாமி சொத்துக்களை பறிமுதல் செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.

- மத்திய ரயில்வேயின் கேட்டரிங் துறையின் உணவுக் கிடங்கில் வைக்கப்படும் தயிர் உள்பட பல தரப்பட்ட உணவுகள் பல மடங்கு அதிக விலைக்கு வாங்கப்பட்டிருப்பதாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரிய வந்துள்ளது.

- ஜம்மு-காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டம் கிருஷ்ணகாட்டியில் உள்ள எல்லைப் பாதுகாப்புப் படையினர் (பிஎஸ்எ.்.ப்) முகாம்கள் மீது பாகிஸ்தான் படையினர் அத்துமீறி தாக்குதல் நடத்தினர். இதில் சிக்கிய படைப்பிரிவைச் சேர்ந்த 2 வீரர்கள் பலியாகினர். உயிரிழந்த ராணுவ வீரர்களின் உடல்கள் அவர்களது சொந்த ஊருக்கு கொண்டு செல்லப்பட்டன.

## மே – 3

- ஆதார் அட்டையில் உள்ள தகவல்களை யாரும் எளிதில் எடுத்துவிட முடியாத வகையில் புதிய சட்டத்திருத்தங்களை கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- உத்திரப்பிரேதசத்தில் அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் முறையாகப் பள்ளிக்கு வருவதில்லை என புகார்கள் எழுந்துள்ளன. இந்த முறைகேடுகளை தடுக்க அனைத்து அரசு பள்ளிகளின் சுவர்களிலும் ஆசிரியர்களின் படங்களை ஒட்ட முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் படத்தில் உள்ள ஆசிரியர்கள் முறையாக பள்ளிக்கு வருகிறார்களா எனவும் அவர்கள்

எவ்வாறு பாடம் நடத்துகிறார்கள் எனவும் மாணவர்களிடம் விசாரித்து அறிய கல்வித் துறை அதிகாரிகளை அவர் அறிவுறுத்தியுள்ளார்.

- திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக சாம்பசிவ ராவ் என்பவர் கடந்த இரண்டரை ஆண்டாக பொறுப்பேற்று வந்தார். இவர் ஆந்திர மாநில வருவாய் துறை முதன்மை செயலராக பணியமர்த்தப்பட்டுள்ளார். இதையடுத்து புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக மூத்த ஐஏஎஸ் அதிகாரி அனில் குமார் சிங்கால் நியமிக்கப்பட்டுள்ளார்.

- பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட பணியிடங்களில் பயிற்சி அளிப்பது தற்போது கல்வி நிறுவனங்களின் சொந்த முடிவாக உள்ளது. மேலும் கெமிக்கல், மெக்கானிக்கல், சிவில் போன்ற ஒரு சில பாடப்பிரிவு மாணவர்களுக்கு மட்டுமே பணியிடப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பணியிடப் பயிற்சியை அனைத்து பொறியியல் மாணவர்களுக்கும் கட்டாயமாக்க வேண்டும் என ஏஐசிடிஇ முடிவு செய்துள்ளது.

- ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில், கோடை காலத்தில் சுற்றுலாப்பயணிகள் வருகையை அதிகரிக்க பல்வேறு சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் படகு திருவிழா தொடங்கியுள்ளது.

- தரையில் இருந்து கிளம்பிச் சென்று தரையில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் 3ம் வரிசை பிரமோஸ் ஏவுகணை சோதனையை இந்திய ராணுவம் நேற்று அந்தமான் நிக்கோபார் தீவுகளில் நடத்தியது. ராணுவம் நடத்திய அந்த ஏவுகணை சோதனை வெற்றியை அடைந்தது.

## மே – 4

- உத்திரப்பிரதேசத்தில் மாநிலம் ஜலாவுன் மாவட்டத்துக்குட்பட்ட மடோரா கிராமத்தில் பொது இடங்களில் செல்போன் பயன்படுத்தினால் ரூ.21 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என உத்திரப்பிரதேசப் பஞ்சாயத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

- நான்காவது முறையாக நடத்தப்பட்ட பிரம்மோஸ்-3 ஏவுகணை சோதனை தனது துல்லியமான திறனை வெளிப்படுத்தி உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தானியங்கி இயக்கி (மொபைல் லாஞ்சர்) மூலம் இயக்கப்பட்ட ஏவுகணை துல்லியமாகச் சென்று இலக்கைத் தாக்கியது.

- விமான பயணத்துக்காக பயணிகள் டிக்கெட் முன்பதிவு செய்கிறபோது, ஆதார் எண் தெரிவிக்க வேண்டும் மற்றும் விமான நிலையத்தின் நுழைவு முனைகளில் வைக்கப்பட்டுள்ள எந்திரம் மூலம் பயணிகள் தங்களது கையை 'ஸ்கேன்' செய்ய வேண்டும் என்று புதிய திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டம் இப்போது சோதனைரீதியில் ஐதராபாத் விமான நிலையத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த திட்டம் விரைவில் நாடு முழுவதும்

உள்ள அனைத்து விமான நிலையங்களுக்கும் கொண்டுவரப்படும் என்று சிவில் விமான போக்குவரத்து அமைச்சக அதிகாரி கூறினார்.

- பொது வினியோக திட்டத்தில் வழங்கப்படும் சர்க்கரைக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வந்தது. இந்த மானியத்தை ரத்து செய்ய கடந்த மார்ச் மாதம் மத்திய அரசு முடிவு செய்தது. இதனால் அதிருப்தி அடைந்த சில மாநில அரசுகள், 'அந்தியோதயா அன்ன யோஜனா' (பரம ஏழைகள்) திட்ட பயனாளிகளுக்கு மட்டுமாவது மானியத்தை வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கூறியது. இந்நிலையில், அந்தியோதயா அன்ன யோஜனா திட்ட பயனாளிகளுக்கு சர்க்கரைக்கான மானியத்தை மீண்டும் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- தமிழ்நாடு கவர்னராக இருந்த கே.ரோசய்யா, கடந்த ஆண்டு ஆகஸ்டு 30ம் தேதி ஓய்வு பெற்றார். அதையடுத்து, மராட்டிய மாநில கவர்னர் சி.வித்யசாகர் ராவ், தமிழ்நாடு கவர்னர் பொறுப்பையும் கூடுதலாக கவனிப்பார் என்று அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் கவர்னர் இல்லாத தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு விரைவில் புதிய கவர்னரை நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- தெற்காசிய நாடுகள் பயன்பெறுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஜிசாட்-9 செயற்கைக்கோள் நாளை விண்ணில் செலுத்தப்படுவதை ஒட்டி ராக்கெட்டை ஏவுவதற்கான 28 மணி நேர கவுண்டவுன் இன்று பிற்பகல் தொடங்குகிறது. தெற்காசிய நாடுகளுக்கு சேவையளிக்கும் வகையில் ஜிசாட்-9 செயற்கைக்கோளை இஸ்ரோ விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மே – 5

- ஆதார் எண் பிழையற்றது, விவரங்கள் கசிய முடியாதது என்று மத்திய அரசு உச்சநீதிமன்றத்தில் வாதிட்டதை எதிர்த்து ஆதார் எண்-ஐ மத்திய அரசு சர்வரோக நிவாரணி மூலிகை மருந்து போல் விற்று வருகிறது என்று மூத்த வழக்கறிஞர் அர்விந்த் தத்தர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

- தில்லியில் இதுவரை இல்லாத அளவில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட காற்று மாசு பிரச்சனையின் போது, உயிரிழப்புகள் வழக்கத்தை விட அதிகமானதாக இருந்திருக்கலாம் என்று நிபுணர்கள் கணித்துள்ளனர்.

- மூன்று வருடங்களாக மழை பொய்த்து விட்டதால் வைகை ஆற்றில் தண்ணீர் இல்லாத அளவில் வறண்டு வெறும் பாறையாக காட்சியளிக்கிறது. இந்நிலையில் வைகை கரையோரத்தில் இருந்த தென்னை, வாழை, மா போன்ற மரங்கள் வறட்சியினால் கருகி வருகின்றன.

- தெற்காசிய நாடுகளுக்கான ஜிசாட் 9 செயற்கைக் கோள் இன்று மாலை விண்ணில் ஏவப்படுகிறது. ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜிஎஸ்எல்வி எ∴ப் 9

ராக்கெட் மூலம் ஜிசாட் செயற்கைக்கோளை விண்ணில் நிறுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. தெற்காசிய நாடுகளின் பயன்பாட்டிற்காக ஜிசாட் 9 செயற்கைக்கோளை இஸ்ரோ விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

- ➢ வராக்கடன்களை வசூலிப்பதற்கான அவசரச் சட்டத்துக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்துள்ளார். மேலும் வங்கிகளில் வராக்கடன்களை வசூலிக்க புதிய நடைமுறைகள் அமலாக்கப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

- ➢ மாநில மொழிகளில் படித்த அரசு ஊழியர்கள், உயர் நீதிமன்ற நீதிபதிகள் இந்தி பேசும் மாநிலங்களில் பணியாற்றும் போது அவர்களால் இந்தியை படிக்கவும், எழுதவும் முடியவில்லை. அதனால் பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை இந்தியைக் கட்டாயமாக்க மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் இந்த மனுவை மறுத்துவிட்டது.

- ➢ தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்த ஆண்டுக்கான தூய்மையான நகரங்கள் குறித்த பட்டியலை மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு நேற்று வெளியிட்டார். இப்பட்டியலில் மத்தியப் பிரதேசத்தில் உள்ள 'இந்தூர்' இந்தியாவிலேயே தூய்மையான நகரங்கள் பட்டியலில் முதலிடத்தையும் அதே மாநிலத்தை சேர்ந்த போபால் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளது.

- ➢ முல்லைப் பெரியாறு அணையின் பராமரிப்பு பிரச்சனை தொடர்பாக தமிழக அரசு தாக்கல் செய்துள்ள மனுவுக்கு 4 வாரங்களில் பதில் மனு தாக்கல் செய்யுமாறு கேரள அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது.

## மே – 6

- ➢ தெற்காசிய நாடுகளுக்கு இந்தியா பரிசாக வழங்கியுள்ள 'ஜிசாட் 9' செயற்கைக் கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து ஜிஎஸ்எல்வி – எஃப்09 ராக்கெட் மூலம் நேற்று மாலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

- ➢ காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பாக தமிழகம், கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு இடையே பிரச்சனை நிலவுகிறது. இந்நிலையில் காவிரி நதியின் குறுக்கே மேகேதாட்டுவில் புதிய அணை கட்டுவதற்கான திட்ட வரைவு இறுதி அறிக்கை இன்னும் ஒரு சில தினங்களில் இறுதி செய்யப்படும் என்று முதல்வர் சித்தராமையா கூறியுள்ளார்.

- ➢ வராக்கடன்களை கையாளுவதில் ரிசர்வ் வங்கிக்கு கூடுதல் அதிகாரம் அளிக்க வகை செய்யும் அவசர சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார்.

- ➢ விமானத்தில் தகராறு செய்யும் பயணிகள், விமானத்தில் பயணம் செய்ய 3 மாதங்கள் முதல் வாழ்நாள் வரை தடை விதிப்பதற்கான புதிய வரைவு

விதிமுறைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

- ஆந்திர அரசு திருப்பதியை உலகத் தரம் வாய்ந்த மருத்துவ மையமாக மாற்ற பல மருத்துவமனைகளை ஏற்படுத்தி வருகிறது. அதன்படி டாடா குழுமம் திருப்பதியில் புற்றுநோய் மருத்துவமனையை ஏற்படுத்த உள்ளது. இதில், ரூ.100 கோடி டாடா நிறுவனமும், ரூ.40 கோடியை நன்கொடை மூலம் வசூல் செய்ய உள்ளதாகவும் தேவஸ்தான செயல் அதிகாரி சாம்பசிவ ராவ் தெரிவித்தார்.

## மே – 7

- நாடு முழுவதும் உள்ள உயர் நீதிமன்றங்களில் முதல் பெண் தலைமை நீதிபதியாக பணியாற்றிய லீலா சேத் (86) டெல்லியில் நேற்று காலமானார்.

- இந்திய விமானப்படையில் பெண்கள் எளிதில் இணைய வேண்டும் என்பதற்காக புதிய விதி அமல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி தேசிய சாரணர் படையில் (என்சிசி) பயிற்சி பெற்று சி சான்றிதழ் வைத்திருந்தால் நேரடியாக நேர்முகத் தேர்வில் பங்கேற்க முதல் முறையாக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

- உத்தரகாண்ட் மாநிலத்தில் உள்ள பிரசித்தி பெற்ற பத்ரிநாத் கோயிலுக்கு சென்ற குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி நாட்டின் நலனுக்காக சிறப்பு பிரார்த்தனை செய்தார்.

- திருமலை திருப்பதி தேவஸ்தான தலைமை நிர்வாக அதிகாரி சாம்பசிவ ராவ் பதவிக்காலம் முடிவடைந்ததால், வட இந்தியாவைச் சேர்ந்த மூத்த ஐஏஎஸ் அதிகாரி அனில்குமார் சிங்கால் அந்த பதவிக்கு பணியமர்த்தப்பட்டார்.

- புதிய ரயில் பாதை நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்று பேசிய ரயில்வே துறை அமைச்சர் சுரேஷ் பிரபு பயணியர் குறைகளைத் தீர்க்க புதிய செயலி ஒன்று உருவாக்கப்படும் என்று கூறினார்.

- காஷ்மீர் பிரச்சனைக்குத் தீர்வு காண பிரதமர் நரேந்திர மோடியால் மட்டுமே முடியும் என்று ஜம்மு-காஷ்மீர் மாநில முதல்வர் மெஹபூபா மு.ஃப்தி தெரிவித்துள்ளார்.

- அகில இந்திய அளவிலான நீட் தேர்வு நாடு முழுவதும் இன்று நடைபெறவுள்ளது. மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் நடத்தும் இந்தத் தேர்வை நாடு முழுவதும் 11.35 லட்சம் மாணவர்கள் எழுதுகின்றனர்.

## மே – 8

- உத்திரப்பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் பெயரில் புதிய மாம்பழம் ஒன்றை அம்மாநிலத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் அறிமுகப்படுத்தியுள்ளார். இவர் அந்த மாம்பழத்துக்கு "யோகி மாம்பழம்" எனப் பெயர் சூட்டியுள்ளார்.

- மனிதர்களை உடல்ரீதியாக சித்திரவதை செய்வதற்கு எதிரான ஐ.நா உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளிக்க இந்தியா முடிவு செய்துள்ளது.

- தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் வந்து விடாமல் தடுப்பதற்காக நடுக்கடலில் இலங்கை எல்லைப் பலகை ஒன்றை வைத்துள்ளது. இலங்கையில் இருந்து 5வது மணல் திட்டில் இலங்கை கொடியுடன் இது வைக்கப்பட்டுள்ளது.

- குஜராத் மாநிலத்தில் தனது உடலை ரப்பர் போல் வளைக்கும் இளைஞர் ஒருவர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

- ஐந்தாம் தலைமுறை போர் விமானத்தை பல்லாயிரம் கோடி ரூபாய் செலவில் கூட்டாக வடிவமைப்பது தொடர்பாக இந்தியா-ரஷ்யா இடையே, 2007 ம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் பிறகு பல்வேறு விஷயங்கள் தொடர்பாக எழுந்த கருத்து வேறுபாடுகளால், இந்த பணி தாமதமானது. இந்நிலையில் அனைத்து கருத்து வேறுபாடுகளும் தீர்க்கப்பட்டு விட்டதால், இந்த போர் விமான வடிவமைப்பு தொடர்பாக இரு நாடுகளிடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகிறது.

## மே – 9

- தமிழகத்தில் விவசாயிகளின் நலனைக் காக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள செயல் திட்டங்கள் குறித்து சுப்ரீம் கோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

- சத்தீஷ்கர் மாநிலம் சுக்மா மாவட்டத்தில் 2 வாரங்களுக்கு முன்பு சாலை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மத்திய ரிசர்வ் போலீஸ் படைவீரர்கள் 25 பேரை நக்சலைட்டுகள் சுட்டுக் கொன்றனர். இதையடுத்து நக்சலைட்டுகளை ஒடுக்க மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முதல் மந்திரிகள் கூட்டத்தில் உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங் கூறினார்.

- சென்னை டெல்லி இடையே விமானத்தில் பயணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அதிக அகலமும், கூடுதல் இருக்கைகளும் கொண்ட பி.777 என்ற புதிய நவீன ரக விமானத்தை ஏர் இந்தியா அறிமுகம் செய்துள்ளது. இந்த விமான சேவை நேற்று தொடங்கி வைக்கப்பட்டது.

- ராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகிய முப்படையினருக்கு ஊதிய உயர்வு மற்றும் அங்க ஊனம் அடைந்தவர்களுக்கான முந்தைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் கொண்டு வருதல் போன்ற பல்வேறு கோரிக்கைகளை மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. அதன்படி 7வது சம்பள கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில் இந்த மாதம் (மே) முதல் பாதுகாப்பு படையினருக்கு ஊதிய உயர்வை அளிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- மத்திய நேரடி வரி வாரியத்தின் தலைவராக பதவி வகித்து வரும் சுஷில் சந்திரா சென்ற ஆண்டு நவம்பர் மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து இப்பதவியில் இருந்து வருகிறார். புதவி நீட்டிப்பு அடுத்தாண்டு மே 31 ஆம் தேதி வரை நிலைத்திருக்கும். வரும் ஜுன் மாதம் ஒன்றாம் தேதியிலிருந்து இந்த நீட்டிப்பு அமலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

- திரிபுராவின் குர்கானாகர் கிராமத்தில் மண்ணில் புதைக்கப்பட்டிருந்த 127 குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த குண்டுகள் அனைத்தும் 1971 ம் ஆண்டில் நடந்த போரில் பயன்படுத்தப்பட்ட கையெறி குண்டுகளாக இருக்கலாம் என்று அங்கு வசிக்கும் மக்கள் கூறியுள்ளனர்.

## மே – 10

- குழந்தை பருவ உடல் பருமன் மற்றும் அது சார்ந்த நோய்கள் அதிகரித்து வருவதால் மகாராஷ்டிராவில் பள்ளி கேன்டீன்களில் நொறுக்கு தீனிகளை விற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

- தமிழ்மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தில் சிறந்து விளங்கும் தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் செம்மொழி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் கடந்த 2013-14, 2014-15 மற்றும் 2015-16 ஆண்டுக்கான செம்மொழி விருதுகள் வழங்கும் விழா டெல்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்று நடந்தது. இதில் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தமிழறிஞர்களுக்கு விருதுகளை வழங்கி கவுரவித்தார்.

- ராஜஸ்தான் மாநிலம், பாலி மாவட்டத்தில் மேவார் மன்னர் ராணா பிரதாப் சிலையை ராஜ்நாத் சிங் நேற்று திறந்து வைத்தார். அப்போது அவர் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் தான் இந்தியா வலுவான நாடாக உருவாகியுள்ளது என்று கூறினார்.

- முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் தன் மனைவியின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் அவரை விவகாரத்து செய்ய முடியாது என்று அலகாபாத் உயர் நீதிமன்றம் முக்கியத்துவம் வாய்ந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

- கேரள மாநிலம், திருவனந்தபுரத்தில் உள்ள ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயிலுக்கு ஜுன் 18ம் தேதிக்குள் புதிய செயல் அலுவலரை நியமிக்க வேண்டும் என்று கேரள அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- ஏல்-நினோ நிலையின் தாக்கம் தற்போது குறைந்திருப்பதால் நிகழாண்டில் 100 சதவீத பருவமழை பெய்ய வாய்ப்பிருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- கேரளாவில் ஒரு வருட இடைவெளியில் மாவோயிஸ்ட்கள் மீண்டும் தாக்குதல்

நடத்த திட்டமிட்டுள்ளனர். இதற்காக தமிழக, கேரள மாநில எல்லை பகுதியான அடர்ந்த காட்டில் புதிதாக ரகசிய தளம் ஒன்றை அமைத்துள்ளனர்.

- பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் மின்வசதி இல்லாத 13 ஆயிரம் கிராமங்களுக்கு மின்வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## மே – 11

- கேரளாவைச் சேர்ந்த ஆன்மீக தலைவர் மாதா அமிர்தானந்த மயிக்கு மத்திய அரசு 'இசட்' பிரிவு பாதுகாப்பு வழங்கி உள்ளது. இதன்மூலம் யோகா குரு பாபா ராம்தேவுக்கு அடுத்தபடியாக இவ்வகை பாதுகாப்பு பெற்ற 2-வது ஆன்மீக தலைவர் என்ற பெருமை இவருக்குக் கிடைத்துள்ளது.

- உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பான தகவல்களை 'ஆன்லைனில்' அறியும் வசதியை பிரதமர் நரேந்திர மோடி நேற்று தொடங்கி வைத்தார்.

- இந்தியாவில் பருவமழை குறித்த முதல்கட்ட அறிக்கையை, இந்திய வானிலை ஆய்வு மையம் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிட்டது. அதில், கடந்த ஆண்டை விட இந்தாண்டு 99 சதவீதம் பருவ மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- நாடு முழுவதும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்புகளில் மாணவர் சேர்க்கைக்காக கடந்த 7ம் தேதி 'நீட்' என்ற தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வு நடத்தப்பட்டது. இந்திய மருத்துவ கவுன்சிலுக்காக சி.பிஎஸ்.இ இந்த தேர்வை நடத்தியது. இதற்கிடையே, 'நீட்' தேர்வு வினாத்தாளில் 4 தவறான கேள்விகள் இடம்பெற்றுள்ளதாக பாட நிபுணர்களும், தேர்வு எழுதிய மாணவர்களும் தெரிவித்துள்ளனர்.

- புத்த மதத்தினர் புத்தரின் பிறந்தநாள், ஞானோதயம் பெற்ற நாள், உயிர் நீத்த நாள் ஆகிய மூன்றையும் 'வெசாக்' (புத்த பூர்ணிமா) தினம் என்ற பெயரில் திருவிழாவாக கொண்டாடி வருகின்றனர். இந்த திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் சுற்றுப்பயணமாக இன்று இலங்கை செல்கிறார்.

- தென்கொரியாவின் முன்னாள் பெண் அதிபர் பார்க் குன் ஹை, ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து தென் கொரியாவில் நடந்த அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற மூன் ஜேயின்னுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

## மே – 12

- துணை ராணுவத்தினரின் குறைகளைத் தெரிவிக்க செல்லிடப்பேசி செயலியை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தில்லியில் நேற்று அறிமுகப்படுத்தினார். இந்தச் செயலியை சுமார் 9 லட்சம் துணை ராணுவப்படை

வீரர்களும் பயன்படுத்தி எந்த புகாரையும் அளிக்கலாம்.

- பிரான்ஸ் நாட்டுக்கான புதிய தூதராக வினய் மோகன் குவாத்ரா நியமிக்கப்பட்டுள்ளார். இந்திய வெளியுறவுப் பணியில் 1988 ஆம் ஆண்டு சேர்ந்த வினய் மோகன், ஐ.நாவின் சர்வதேச தொழிலாளர் இந்தியாவின் பிரதிநிதியாகப் பணியாற்றியுள்ளார். பயங்கரவாத தடுப்பு பிரிவின் கூடுதல் செயலாளராகவும் இருந்துள்ளார்.

- எஸ்பிஐ சேவை கட்டணங்களை மாற்றி அமைத்து அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதன்படி ஏடிஎம் வாயிலாக பணம் எடுக்கும்போது ரூ. 25 கட்டணம் வசூலிக்கப்படும் ரூபே அட்டை பயன்படுத்துபவர்கள் மட்டுமே இதிலிருந்து விலக்கு பெறுகிறார்கள். இது ஜீன் 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

- கேரளாவின் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஐ.எஸ் பயங்கரவாத வாட்ஸ் அப் குழுவில் இணைக்கப்பட்டுள்ளதாக தேசிய புலனாய்வு மையம் தெரிவித்துள்ளது.

- ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக் காலம் வரும் ஜீலை மாதம் நிறைவடைகிறது. எனவே புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தலில் மகாத்மா காந்தியின் பேரன் கோபாலக்கிருஷ்ண காந்தி பொது வேட்பாளராக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கோபாலக்கிருஷ்ண காந்தி 2004 முதல் 2009 வரை மேற்கு வங்க கவர்னராக பதவி வகித்துள்ளார். ஜனாதிபதியின் செயலாளராக பணியாற்றியவர் பல நாடுகளில் இந்திய தூதராக பணியாற்றி உள்ளார்.

- உத்தரகாண்ட் மாநிலத்தில் இமயமலை பகுதியில் கேதார்நாத் உள்ளிட்ட "சார்தாம் எனப்படும் நான்கு புனித தலங்களுக்கு ரயில்வே பாதை அமைக்கும் திட்டத்தை ரயில்வே துறை தொடங்கியுள்ளது. இதற்கான இறுதி ஆய்வு தொடக்கப்பணிக்கான அடிக்கல் நாட்டுவிழா மே 13-ல் நடைபெற உள்ளது.

- இந்தியாவின். வெளியுறவுத் துறை கொள்கையில் ரஷ்யாவுடனான உறவு முக்கிய தூணாக விளங்குகிறது. ரஷ்யாவில் வரும் ஜீன் மாதம் செயிண்ட பீட்டர்ஸ்பெர்க் நகரில் இந்திய ரஷ்யா இடையிலான உச்சமாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் பங்கேற்க பிரதமர் மோடி அடுத்த மாதம் ரஷ்யா செல்கிறார்.

- பிரதமர் மோடி தலைமையிலான மததிய அரசின் மூன்றாண்டு சாதனைகளை மக்களிடம் விளக்க வேண்டும் என அனைத்து மத்திய அமைச்சர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மே 26ம் தேதியுடன் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு மூன்றாண்டை நிறைவு செய்கிறது.

- வானில் உள்ள எதிரிகளின் இலக்குகளை தரையிலிருநது தாக்கவல்ல 'ஸ்பைடர்' ரக ஏவுகனைகளை இந்திய ராணுவம் வெற்றிகரமாக சோதித்தது. இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட 'ஸ்பைடர்' ரக ஏவுகணையானது வானில் பறக்கும்

எதிரிகளின் இலக்குகளை 15 கி.மீ தொலைவு வரை சென்று துல்லியமாக தாக்கும் திறனுடையது. ஒடிஸா மாநிலம் பலாசோரில் இந்த ஏவுகணையை இநதிய ராணுவம் சோதனை செய்தது.

## மே – 13

- காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் சமீபகாலமாக அத்துமீறி தாக்குதல் நடத்துவது அதிகரித்து காணப்படுகிறது. இந்நிலையில் எல்லையில் நவ்சேரா செக்டாரில் பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி நடத்திய தாக்குதலில் பொதுமக்களில் இருவர் உயிரிழந்தனர்.

- மராட்டிய மாநிலம் மும்பையில் உள்ள மலேகானில் கடந்த 2008ம் ஆண்டு நடந்த இரட்டை குண்டு வெடிப்பு வழக்கில் சாத்வி பிரக்யாவுக்கு எதிராக ஆதாரம் இல்லை என்று என்.ஐ.ஏ தெரிவித்துள்ளது.

- ஜி.எஸ்.எல்.வி மார்க் 3 ராக்கெட்டை அடுத்த மாதம் முதல் வாரம் ஏவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று இஸ்ரோ தலைவர் தெரிவித்துள்ளார்.

- பான் அட்டைக்கு விண்ணப்பிக்க ஆதார் எண் தேவையில்லை என மூத்த குடிமக்களுக்கு இதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

- ஜம்மு – காஷ்மீர் மாநிலம் ரஜோரி மாவட்டம் நௌஷேரா பகுதியில் உள்ள இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தி வருகிறது. பாகிஸ்தான் தாக்குதலை அடுத்து இந்திய ராணுவம் பதிலடி தாக்குதல் நடத்தி வருகிறது.

- காஷ்மீரில் சமீபகாலமாக பாதுகாப்புப் படையினருக்கும், வன்முறையாளர்களுக்கும் இடையே கடும் மோதல் நிகழ்ந்து வருகிறது. இதன் காரணமாக ஜம்மு – காஷ்மீரில் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புப் படைக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

## மே – 14

- ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் ட்ரால் என்ற இடத்தில் தீவிரவாதிகள் தாக்குதலைத் தொடங்கியுள்ளதால், பாதுகாப்புப் படையினர் அந்த இடத்தை சுற்றி வளைத்துள்ளனர். ராணுவப் படையினர் தீவிரவாதிகளைப் பிடிக்க தேடுதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

- பாதுகாப்பு பணிகளின் போது வீரமரணம் அடையும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினரின் (சி.ஆர்.பி.எப்) குடும்பத்தினருக்கு உதவ நன்கொடைகளை அளிக்குமாறு மத்திய உள்துறை அமைச்சகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. அதன்படி இந்தி நடிகர் விவேக் ஓபராய், 25 வீடுகள் கொண்ட 2 அடுக்குமாடி குடியிருப்பை வழங்கி உள்ளார்.


We Shine Academy™

- அரியானா மாநிலம் பரீதாபாத் நகரில் உள்ள மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மதிய உணவு வழங்கப்பட்ட போது அதில் செத்த பாம்பு ஒன்று இருந்தது. இதனால் முதல்-மந்திரி கட்டார் பறக்கும் படை ஒன்றை அமைத்தார். இந்த படையினர் அரியானா மாநில பள்ளிகளில் வழங்கப்படும் மதிய உணவை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

- நேஷனல் ஹெரால்டு பத்திரிக்கை வழக்கு தொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் அவருடைய மகன் ராகுல் காந்தி ஆகியோர்க்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

- மறைந்த பிரதமர் இந்திரா காந்தி, அனைவரும் ஏற்றுக் கொள்ளும் தீர்க்கமான அரசியல் தலைவர் என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். உறுதியான முடிவுகளை திறம்பட எடுப்பதில் வல்லவர் என்றும் இந்திரா காந்திக்கு அவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

- இந்தியா-பாகிஸ்தான் எல்லையான அட்டாரி-வாகா எல்லையில் 107 அடி உயர கம்பத்தில் மூவர்ண கொடியை மத்திய உள்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு நேற்று ஏற்றி வைத்தார்.

- உலகின் மிகப்பெரிய சிகரமான எவரெஸ்ட் சிகரத்தில் மலை ஏறுபவர்கள் ஏறி வருகிறார்கள். இந்த ஆண்டுக்கான பயணத்தில் எவரெஸ்ட் சிகரத்தை அடைந்து 6 இந்தியர்கள் சாதனை படைத்துள்ளனர்.

## மே – 15

- சீன எல்லை அருகே பிரம்மபுத்திரா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்தியாவிலேயே மிக நீளமான பாலத்தை 26ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார்.

- நாட்டில் மாவோயிஸ்டுகளால் பாதிக்கப்பட்ட 6 மாநிலங்களில் உள்ள 44 மாவட்டங்களில் சாலை இணைப்பு, பாதுகாப்பு மற்றும் தகவல் தொடர்பு திட்டத்துக்கு சிறப்பு நிதியாக ரூ.11 ஆயிரம் கோடியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்து உள்ளது.

- ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதிவிக்காலம் ஜூலை மாதம் முடிவடைகிறது. இதையடுத்து புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்பாளர்களை பரிசீலிக்கும் பணிகள் தொடங்கிவிட்டன.

- அந்தமான் கடல் பகுதியில் வழக்கமாக கோடை காலம் முடிந்து மே மாதம் 17ம் தேதி தென்மேற்கு பருவமழை தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு முன்னதாகவே தென்மேற்கு பருவமழை தொடங்கியுள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மைய டைரக்டர் ஜெனரல் கே.ஜி.ரமேஷ் கூறியுள்ளார்.

- காஷ்மீர் எல்லையில், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் ராணுவத்தினர் இந்திய நிலைகள் மீது அத்துமீறி தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

- காஷ்மீரில் தீவிரவாதிகள் கடத்தி கொலை செய்த ராணுவ வீரர் உமர் பயஸ் குடும்பத்துக்கு ரூ.75 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. மேலும் ராணுவப் பள்ளி ஒன்றுக்கு உமர் பயஸ் பெயர் சூட்டப்பட்டது.

- முறைகேடுகளை தடுக்க தற்போது நடைமுறையில் உள்ள ரூ.2000 நோட்டுக்களையும் தடை செய்ய வேண்டும் என்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு வலியுறுத்தியுள்ளார்.

- உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஆரம்பப் பள்ளிகளில் வழங்கப்படும் மதிய உணவை, அந்த பள்ளியில் படிக்கும் மாணவர்களின் தாய்மார்கள் அடங்கிய குழு கண்காணிக்கும் என மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

- வரலாற்றில் மறைக்கப்பட்ட தலைவர்களின் வாழ்க்கையையும் சேர்க்கும் வகையில், பாடத்திட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உத்திரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

## மே – 16

- 'ரேன்சம்வேர்' என்று அழைக்கப்படும் வைரஸ் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி வருகிறது. இந்தியாவிலும் சில இடங்களில் இந்த இணையதள தாக்குதல் நடத்தப்பட்டது. குறிப்பாக, ஆந்திர காவல் துறைக்கு சொந்தமான 25 சதவீத கணினிகள் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

- ஒவ்வொரு மாநிலத்துக்கும் ரயில் பாதைகள் அமைக்கும் திட்டத்தை மத்திய அரசு நிதி ஒதுக்கி வருகிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாக, மாநிலங்கள் கோரும் திட்டங்களை செயல்படுத்த முடிவதில்லை. இதனால் ரயில்வே – தமிழக அரசு இடையே சிக்கல் நீடித்து வருகிறது.

- பிரணாப் முகர்ஜியை 2வது முறையாக குடியரசுத் தலைவர் பதவியில் அமர்த்துவது சிறப்பான முடிவாக இருக்கும் என்று பிஹார் முதல்வர் நிதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

- மத்திய அரசின் ஊரக மின்மயமாக்கல் கழகம் (ஆர்.இ.சி) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்துக்கு (டான்ஜெட்கோ) ரூ.60 ஆயிரத்து 63 கோடியும், தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகத்துக்கு (டான்டிரான்ஸ்கோ) ரூ.25 ஆயிரத்து 660 கோடி நிதி உதவி வழங்கி இருப்பதாகவும், இது தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

- நாடு முழுவதும் மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பதற்காக, நீட் எனப்படும் தேசிய நுழைவுத்தேர்வு கடந்த 7ம் தேதி நடத்தப்பட்டது. இதில் இந்தி, ஆங்கிலம் மற்றும் 10 மொழிகளில் கேள்வித்தாள்கள் இருந்தன. இந்நிலையில், இந்தி, ஆங்கிலம் கேள்வித்தாளை விட மாநில மொழி கேள்வித்தாள்கள் கடினமாக இருந்ததாக மாணவர்கள் கூறியுள்ளனர். இதற்கு மத்திய அரசு சி.பி.எஸ்.இ யிடம் விளக்கம் கேட்டுள்ளது.

- ரூ.1000 கோடி நில மோசடி வழக்கில், 22 இடங்களில் வருமான வரித்துறையினர் இன்று அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

- உத்திரப் பிரதேச சட்டப்பேரவையில் சரக்கு, சேவை வரி (ஜிஎஸ்டி) மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

- ஒடிஸாவின் முன்னாள் நிதியமைச்சர் பிரதீப் அமித், மீண்டும் அந்த மாநில சட்டப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## மே – 17

- குல்பூஷன் ஜாதவுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றத்தை ரத்து செய்வது குறித்து 18ம் தேதி சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகின்றது.

- முதல் குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்கள் பயனடையும் வகையில் சிறப்பு மகப்பேறு நிதியுதவி திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி ஒரு கர்ப்பிணிக்கு ரூ.6000 நிதியதவி வழங்கப்படும்.அதில் ரூ.5 ஆயிரத்தை மத்திய மகளிர், குழந்தைகள் நலத்துறை அளிக்கும் என்று மத்திய மின் துறை அமைச்சர் பியூஸ் கோயல் கூறியுள்ளார்.

- பிரதமர் நரேந்திர மோடி வரும் 5 நாள் பயணமாக ஜெர்மனி, ஸ்பெயின், ரஷ்யா ஆகிய 3 நாடுகளுக்கு வரும் 29ம் தேதி புறப்படுகிறார்.

- உள்நாட்டிலேயே தயாரிக்கப்படும் அதி அழுத்த கனநீர் அணு உலைகளைத் தயாரிப்பதற்கான முன்மொழிவுக்கு மத்திய அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. ஒவ்வொரு அணு உலையும் 700 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். இது சுத்தமான எரிசக்தியை உற்பத்தி செய்ய உதவும் என்று மத்திய மின்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

- ஜம்மு-காஷ்மீரில் பாலாகோட் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி தாக்குதல் நடத்தியது.

- வறுமை என்பது அடிமைத்தனம், உரிமை மறுப்பு, கண்ணிய மறுப்பு இதனை மாற்ற குழந்தைகளுக்கான சிறார் நலத்திட்டங்களுக்கு அரசு அதிகமாக செலவிட வேண்டும் என்று நோபல் பரிசு பெற்ற சமூக ஆர்வலர் கைலாஷ் சத்யார்த்தி கூறியுள்ளார்.

- அமெரிக்காவில் உள்ள போர்ப்ஸ் பத்திரிக்கை நிறுவனம் உலகளவில் மாற்றங்கள் ஏற்படுத்தும் 25 சாதனையாளர்கள் கொண்ட பட்டியலை வெளியிட்டு வருகிறது. அந்நிறுவனம் வெளியிட்டுள்ள 2வது வருடாந்திர பட்டியலில் ரிலையன்ஸ் நிறுவன தலைவர் முகேஷ் அம்பானி இடம் பெற்றுள்ளார்.

- பிரதமர் நரேந்திர மோடி நவம்பர் மாதம் லட்சத்தீவு பயணம் மேற்கொள்வதாக கூறியுள்ளார்.

**மே – 18**

- சத்தீஸ்கரில் உள்ள சுக்மா, பிஜப்பூர் மாவட்டங்களில் நடத்தப்பட்ட கூட்டு தேடுதல் வேட்டையில் 15க்கும் மேற்பட்ட மாவோயிஸ்ட்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

- மரபணு மாற்றம் செய்யப்பட்ட கடுகு விதைகள் வணிக நோக்கில் பயன்படுத்திட அனுமதி வழங்கியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள், மாணவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் டெல்லியில் உள்ள மத்திய சுற்றுச்சூழல் அமைச்சக அலுவலகம் முன்பு நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

- நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் ரஷ்ய உதவியுடன் நிறுவப்பட்டுள்ள அணுமின்நிலையத்தில் தலா 1000 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் 2 அணு உலைகள் செயல்பட்டு வருகின்றன. இதேபோல் ரஷ்ய அதிபர் புதினும், மோடியும் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் கூட்டாக அடிக்கல் நாட்டிய 3,4வது அணு உலைகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

- ‘நீட்’ தேர்வின் போது மாணவ – மாணவிகளிடம் கெடுபிடி செய்து துன்புறுத்தப்பட்டதாக வந்த புகாரின் அடிப்படையில் சி.பி.எஸ்.இ 4 வாரங்களுக்குள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேசிய மனித உரிமை ஆணையம் சி.பி.எஸ்.இ -க்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

- யமுனை நதி நீரில் தில்லிக்கான பங்கினை ஹரியானா மாநில அரசு விநியோகிக்கத் தொடங்கியுள்ளது. இதனால், தலைநகரில் அடுத்த சில நாள்களில் தண்ணீர் தட்டுப்பாடு குறையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- பதவிக்காலம் முடிந்த பிறகும் அரசு ஒதுக்கிய இல்லங்களில் இருந்து வெளியேறாமல் குடியிருக்கும் எம்எல்ஏக்கள், எம்.பி.க்களை வெளியேற்ற உதவும் சட்டத் திருத்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- சென்னை சென்ட்ரலில் இருந்து அகமதாபாத், சாந்த்ராகாச்சி இடையே சுவிதா சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

- ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஹரியானா முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலா, 82 வயதில் பிளஸ் 2 தேர்வெழுதி வெற்றி பெற்றுள்ளார்.

## மே – 19

- நாடு முழுவதும் அனைத்து மறைமுக வரிகளுக்கு மாற்றாக சரக்கு மற்றும் சேவை வரியை (ஜி.எஸ்.டி) அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ஜூலை 1ம் தேதி முதல் இந்த வரி அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- டெல்லியில் மரணமடைந்த மத்திய மந்திரி அனில் தவே, தனது கடைசி ஆசையை உயிலில் எழுதியுள்ளார். அதில் நான் இறந்த பிறகு என்னுடைய நினைவாக எந்த நினைவுச்சின்னமோ, போட்டிகளோ, பரிசு அல்லது சிலையோ நிறுவக்கூடாது. என் நினைவாக மரங்கள் நட்டு அதை பாதுகாத்து வாருங்கள். அதைப்போல ஆறுகள் உள்ளிட்ட நீராதாரங்களை பேணி தண்ணீரை பாதுகாத்தால் நான் மகிழ்ச்சியடைவேன் என்று கூறியுள்ளார்.

- ரெயில் விபத்துகள் அடிக்கடி நடந்து வருவதால் விபத்து தவிர்ப்பு நடவடிக்கைகளை முழுவதுமாக கவனிக்க ரெயில்வே துறை முடிவு செய்துள்ளது. இதற்கு நடப்பு நிதியாண்டில் ரூ.5 ஆயிரம் கோடி கூடுதல் நிதி தேவைப்படுவதால் 'பாதுகாப்பு கூடுதல் வரி' என்ற பெயரில் ரெயில் டிக்கெட்டுகள் மீது புதிய வரி விதிப்பது பற்றி ரெயில்வே துறை பரிசீலித்து வருகிறது.

- இந்திய பசு இனங்கள் குறைந்து வருவதை தடுக்கும் வகையில், தேசிய கொள்கை உருவாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

- ரயில்களின் பாதுகாப்பை பலப்படுத்த நவீன தொழில்நுட்பம் மற்றும் புலனாய்வுத் துறையின் தகவல் சேகரிப்பு அவசியம் என்று ரயில்வே துறை அமைச்சர் சுரேஷ் பிரபு தெரிவித்துள்ளார்.

- காணாமல் போகும் குழந்தைகள் விவகாரம் தொடர்பான வழக்குகளில் பின்பற்ற வேண்டிய செயல்பாட்டு வழிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

- கேரளாவில் தென்மேற்கு பருவ மழை வருகிற 29ம் தேதி தொடங்கும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

- எல்லையில் பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டால் அவர்களுக்கு தகுந்த பதிலடி தரும் வகையில் படைகள் ஆயத்த நிலையில் இருப்பது திருப்தியளிப்பதாக மத்திய பாதுகாப்பு அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

- புனேவிலுள்ள கேலக்ஸி கேர் மருத்துவமனையில் இந்தியாவின் முதல் கருப்பை மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

- 2014ம் ஆண்டுக்கான இந்திரா காந்தி அமைதி விருது, இந்திய விண்வெளி

ஆய்வு நிறுவனத்துக்கு (இஸ்ரோ) நேற்று வழங்கப்பட்டது.

## மே – 20

- நாடு முழுவதும் சரக்கு, சேவை வரியில் இருந்து கல்வி, சுகாதாரத்துக்கு விலக்கு அளிக்கவும், சிகரெட், கார்களுக்கு கூடுதல் வரி விதிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதை ஜூலை 1ம் தேதி முதல் அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- பல்வேறு சமூக நலத்திட்டங்களின் பலன்களை அடைவதற்கு ஆதார் அடையாள எண்ணை இணைப்பது கட்டாயம் என்ற நிலைப்பாட்டை மத்திய அரசு எடுத்துள்ளது. அதன் படி அரசு நலத்திட்ட சலுகைகளைப் பெற ஆதார் எண்களை இணைப்பதற்கான தேதி நீட்டிக்கப்படாது என சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு திட்டவட்டமாக கூறியுள்ளது.

- உத்ரகாண்ட் மாநிலத்தில் பத்ரிநாத் யாத்திரை பாதையில் இடைவிடாத மழை காரணமாக திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

- சென்னையை சேர்ந்த வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சாமிநாதன், ‘இந்திய பசுமைப் புரட்சியின் 50 ஆண்டுகள்’ என்ற 2 பகுதி நூல்களை எழுதியுள்ளார். இந்த நூல்களை டெல்லியில் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ளார்.

- நாடு முழுவதும் முதன்முறையாக சூரிய ஒளி - இயற்கை வாயு – காற்று ஆகியவற்றை கொண்டு மின்சாரம் தயாரிக்கும் ஒருங்கிணைந்த தொழில்நுட்பத்திலான 10 அணு உலைகள் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதை குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி திறந்து வைத்தார்.

- இமாச்சலப் பிரதேச மாநிலம் சம்பா என்ற இடத்தில் மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவாகியுள்ளது.

- பொது இடங்களில் மாற்றுத் திறனாளிகள் எளிதாக சென்று வரும் வகையில் வசதிகளை அளிப்பதுடன் இது குறித்த தணிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என டெல்லி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மே – 21

- பயங்கரவாத மற்றும் நக்சலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது உயிரிழந்த துணை ராணுவ வீரர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி உதவித்தொகை வழங்கப்படும் என்று மத்திய உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

- நோயினால் ஏற்படும் விளைவுகள் குறித்த ஆய்வு லான்செட் என்ற மருத்துவ

ஆய்வு இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் பிறந்த குழந்தைகள் இறப்பு விகிதம் மற்ற நாடுகளை விட இந்தியாவில் அதிகம் இருப்பதாக தெரிய வந்துள்ளது.

- ‘தி இந்து’வின் ஆங்கில பதிப்பு திருப்பதியில் கடந்த 17ம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இதன் பிரதிகள் 18ம் தேதி முதல் வெளியாகியது. மேலும் இது ‘தி இந்து’வின் 19 வது அச்சக மையம் என்பது குறிப்பிடத்தக்கது.

- டெல்லியில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு நாளையொட்டி குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, ஹமீது அன்சாரி, மன்மோகன் சிங் ஆகிய தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

- இந்தியா முழுவதும் உள்ள இரயில் நிலையங்களில் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் கொண்டு தூய்மையான ரயில் நிலையங்கள் குறித்த பட்டியலை இந்தியாவின் தர கவுன்சில் வெளியிட்டுள்ளது. இதில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் 49வது இடத்தில் உள்ளது.

- மாநில மொழிகளில் அறிவியல் ஆய்வுக் கட்டுரைகளை எழுதும் நிலை உருவாக வேண்டும் என்று மத்திய உள்துறை இணையமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

- ஈரான் நாட்டு அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் ஹசன் ரௌஹானி மீண்டும் வெற்றி பெற்றுள்ளார்.

## மே – 22

- இந்திய கப்பல் படைக்கு 630 மில்லியன் டாலர் மதிப்புடைய தரையிலிருந்து விண்ணில் ஏவப்படும் நீண்ட தூர ஏவுகணை அமைப்பை தயாரிக்க ஒப்பந்தம் செய்துள்ளதாக இஸ்ரேலிய ஏரோ.ஃ.பேஸ் இண்டஸ்ட்ரீஸ் அறிவித்துள்ளது.

- உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவில் இரண்டு சக்கர வாகனங்கள் பயன்படுத்துவோர் ஹெல்மெட் அணியாவிட்டால் பெட்ரோல் வழங்கக்கூடாது என்று யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார். இந்த புதிய விதிமுறை நாளை முதல் அமலுக்கு வருகிறது.

- நிலப்பரப்பு மாற்றத்தை அறிவதற்கான மென்பொருளைப் பயன்படுத்தி இஸ்ரோ விஞ்ஞானிகள் காடுகளின் பரப்பளவு பற்றி ஆய்வு நடத்தினர். வரும் 2025ம் ஆண்டுக்குள் இந்தியா 2305 சதுர கிலோ மீட்டர் பரப்பளவிலான வனப் பகுதிகளை இழக்கும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

- பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக குஜராத்துக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார். மேலும் அங்கு பல்வேறு வளர்ச்சி திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

- இந்தியாவில் அதிவேக இன்டர்நெட் வசதி கிடைக்க மூன்று ஜிசாட் வகை தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. மேலும் இவற்றில் உள்ள சிறப்பு டிரான்ஸ்பாண்டர்களின் அதிக அலைவரிசை ஒலிக்கற்றைகள் (சிக்னல்) இன்டர்நெட் வேகத்தை அதிகமாக்கும் என்று இஸ்ரோ தலைவர் கிரண் குமார் கூறியுள்ளார்.

- சிக்கிம் மாநிலத்தில் 3 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ராஜ்நாத் சிங், சீன எல்லையில் பாதுகாப்பு பணியை மேற்கொள்ளும் இந்தோ-திபெத் எல்லை பாதுகாப்பு படை போலிசார், சாஸ்த்ர சீமா பால் ஆகிய துணை ராணுவப் படை வீரர்கள் தங்கள் புகார்களை தெரிவிக்க உள்துறை அமைச்சகம் தொடங்கிய 'மொபைல் ஆப்'-ஐ பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

- நாடு முழுவதும் அரசு கட்டிடங்களில் மின்தேவையை பூர்த்தி செய்ய, சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்கும் சோலார் மின்தகடுகளை பொருத்த மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. அந்த வகையில் நாட்டின் மிகப்பெரிய ரயில் நிலையமான கொல்கத்தாவின் ஹவுரா ரயில் நிலையத்திலும் சோலார் மின்தகடு பொருத்தும் பணிகள் நடைபெற உள்ளன.

- தொழில் பயிற்சி நிலையங்களுக்கு (ஐடிஐ) உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்குரிய அந்தஸ்தை வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

## மே – 23

- ஜி.எஸ்.டி வரி விதிப்பால், ஸ்மார்ட் போன், சிமெண்டு மற்றும் மருந்து பொருட்களின் விலை குறையும் என்று மத்திய அரசு கூறியுள்ளது.

- மத்திய உள்துறை செயலர் ராஜீவ் மெஹ்ரிஷி 'இந்தியா 2017' எனும் புத்தகத்தை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெளியிட்டார். மேலும் இப்புத்தகம் குடிமைப்பணிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று கூறினார்.

- குழந்தைகளை தத்தெடுப்பதற்கான கட்டணத்தை ரூ.15 ஆயிரம் வரை உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- ஜம்மு – காஷ்மீரில் தாக்குதலில் ஈடுபட்ட இளைஞரை பிடித்த பாதுகாப்பு அதிகாரிக்கு ராணுவத்தின் சிறப்பு விருது (கமெண்டேசன் கார்டு) வழங்கப்பட்டுள்ளது.

- இந்தியா அடுத்த போரை எதிர்கொள்ளும் சூழல் ஏற்பட்டால், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்களுடன் அந்த போரை எதிர்கொள்ள வேண்டும் என்று ராணுவ தலைமைத் தளபதி விபின் ராவத் தெரிவித்துள்ளார்.

- நவீன வசதிகளுடன் கூடிய தேஜாஸ் எனும் அதிவேக சொகுசு ரயில்

மும்பையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்த ரயில் மும்பையில் இருந்து கோவா மாநிலம் கர்மாலி வரை இயக்கப்படுகிறது.

## மே – 24

- பிரதமர் நரேந்திர மோடி ரஷ்யா, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய 4 நாடுகளுக்கு அரசு முறை பயணமாக செல்கிறார்.

- ஜம்மு காஷ்மீரின் ஷோபியான் மாவட்டத்தில் உள்ள காவல்துறை முகாம் மீது குண்டு வீசி பயங்கரவாதிகள் தாக்குதல் நிகழ்த்தினர்.

- ஜம்மு காஷ்மீரில் உள்ள அமர்நாத் குகைக்கோவிலில் பனிலிங்க தரிசனம் செய்ய, ஆண்டுதோறும் ஏராளமான பக்தர்கள் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர். இந்த ஆண்டிற்கான யாத்திரை ஜூன் 29ம் தேதி தொடங்க உள்ளது. இந்நிலையில் யாத்தீரிகர்கள் பாதுகாப்பிற்கு சுமார் 27000 ராணுவ வீரர்களை பயன்படுத்த ஜம்மு காஷ்மீர் அரசு முடிவு செய்துள்ளது.

- நாடு முழுவதும் சரக்கு மற்றும் சேவை வரியை வருகிற ஜூலை 1ம் தேதி முதல் அமல்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- காஷ்மீருக்குள் பயங்கரவாதிகளை ஊடுருவ உதவி வரும் பாகிஸ்தான் ராணுவ முகாம்கள் மீது இந்திய ராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தியது.

- 1990ம் ஆண்டுகளில் பெங்களூரு சாலைகளில் ஓடிய இரட்டை அடுக்கு (டபுள் டக்கர்) பேருந்துகள் மீண்டும் கட்டமைக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதிக்குள் சாலைகளில் இயக்கப்பட உள்ளது.

- கடந்த ஆண்டில் விசா காலம் முடிந்த பிறகும் 30000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் அமெரிக்காவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளதாக அந்நாட்டு உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

- மருத்துவ மேற்படிப்புக்கான கட் ஆ∴ப் மதிப்பெண்களை மத்திய அரசு குறைத்துள்ளது. மேலும் 2017 கல்வியாண்டு முதல் புதிய கட் ஆ∴ப் முறை கடைபிடிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

## மே – 25

- பிரிட்டனில் உள்ள மான்செஸ்டர் நகரில் மனித வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தீய சக்திகளை தோற்கடிக்க பிரிட்டன் மற்றும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயல்படுவதில் இந்தியா உறுதியாக உள்ளது என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

- டெல்லி தேசிய அருங்காட்சியகத்தில் சுற்றுலாவாசிகள் தூய்மை பராமரிப்பு பணிகள் குறித்த புகார்களை அரசுக்கு தெரியப்படுத்தும் வகையில் தூய்மை இந்தியா என்கிற செயலியை (ஆப்ஸ்) மத்திய கலாசாரத் துறை அமைச்சர்

அறிமுகம் செய்து வைத்தார்.

- டெல்லி, கிரேட்டர் நொய்டா, நொய்டா, மீரட், பாக்பத், மைன்புரி மற்றும் லக்னோ உள்ளிட்ட இடங்களில் ஐஏஎஸ் அதிகாரிகளின் வீடுகளில் வருமானத் துறை சோதனை நடத்தியது.

- தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தைச் சேர்ந்த மாணவன் மோகன் அப்யாஸ் ஐ.ஐ.டி கல்வி நிறுவனத்தில் படிப்பதற்கான ஜே.இ.இ நுழைவுத் தேர்வில் அகில இந்திய அளவில் 6 வது இடத்தை பிடித்து சாதனை படைத்துள்ளார்.

- இந்திய விமானப்படைக்கு சொந்தமான சுகோய்-30 போர் விமானம் அசாம் மாநிலம் தேஜ்பூரில் இருந்து புறப்பட்டு மாயமானது. இந்நிலையில் விமானத்தை தேடும் பணி இந்தியா-சீனா எல்லைப்பகுதியில் தொடங்கப்பட்டுள்ளது.

- ஜடிஓ-காஷ்மீர் கேட் இடையிலான மெட்ரோ சேவை பணிகள் முடிக்கப்பட்டு பாதுகாப்பு குறித்த ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

- எய்ம்ஸ் முன்னாள் இயக்குநர் எம்.சி.மிஸ்ராவுக்கு எடின்பரோ ராயல் மருத்துவக் கல்லூரியின் கவுர அறுவை சிகிச்சை பெலோஷிப் விருது அளிக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் சியாச்சின் மலை சிகரத்தையொட்டிய வான்வெளியில் பாகிஸ்தான் போர் விமானங்கள் அத்துமீறி பறந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## மே – 26

- இந்திய ரயில்வே 18 நவீனு ரக டீசல் என்ஜின்களை மியான்மருக்கு ஏற்றுமதி செய்ய உள்ளது. அவற்றின் மதிப்பு ரூ 200 கோடியாகும். மியான்மருக்கு மட்டுமின்றி இலங்கை, வங்கதேசம், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் இந்திய ரயில்வேயின் உற்பத்தி மையங்கள் தான் என்ஜின்களைத் தயாரித்து வழங்கி வருகின்றன.

- அஸ்ஸாம் மாநிலம் கவுகாத்தியில் அருகே இருக்கும் சாதியா என்ற இடத்தில் இருந்து அருணாச்சல பிரதேசத்தின் இட்டா நகரில் உள்ள தோலா இடையே பிரம்மபுத்திரா, லோஹித் ஆறுகளில் குறுக்கே சுமார் 9.2 கிமீ தொலையில் கட்டப்பட்டுள்ள பாலத்ஜ்த பிரதமர் மோடி இன்று திறந்து வைத்தார். 60 ரன் எடை கொண்ட ராணுவ பீரங்கி வாகனங்களை ஓட்டிச் செல்லும் அளவுக்கு வலிமை வாய்ந்தது. இந்தியாவில் உள்ள பாலங்களிலே மிக நீண்ட பாலம் இதுவாகும்.

- உலகளவில் சுற்றுலா பயணிகளை பெரிதும் கவர்ந்த 10 முன்னணி சுற்றுலா தலங்களின் பட்டியலில் காதல் சின்னமாகவும், உலக அதிசயமாகவும் திகமும் தாஜ்மஹால் 5வது இடத்தைப் பிடித்துள்ளது. கம்போடியா நாட்டிலுள்ள உலகிலேயே மிகப் பெரிய கோவிலான அங்கோர் வாட் முதலிடத்தைப்

பெற்றுள்ளது. ஆசிய அளவிலான சுற்றுலா தளங்களின் பட்டியலில் தாஜ்மஹால் 2வது இடத்தைப் பிடித்துள்ளது.

- சர்வதேச யோகா தினமாக ஜூன் 21ம் தேதியை ஐ.நா சபை அறிவித்தது. இதையொட்டி நாடு முழுவதும் புதிதாக 100 யோகா மையங்களை அமைக்கப் போவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. பாரிஸில் உள்ள ஈ.ஃபிள் டவர், நியூயார்க்கின் சென்ட்ரல் பார்க், லண்டனின் ட்ரா.ஃபல்கர் சதுக்கம் உள்ளிட்ட சர்வதேச அளவில் புகழ் பெற்ற இடங்களிலும் யோகா கொண்டாட்டங்கள் நடைபெற உள்ளது.

- உலகின் மக்கள் நெரிசல் மிகுந்த நகரங்கள் பட்டியலில் மும்பை 2வது இடத்திலும் வங்கதேசத் தலைநகர் டாக்கா முதலிடத்திலும் உள்ளதாக ஐநாவின் மக்கள் வாழ்விடம் குறித்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் உலக பொருளாதார அமைப்பு (டபிள்யூஇஎப்) அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கோட்டா நகரம் 7வது இடத்திலுள்ளது.

- மண்ணெண்ணெய் உபயோகப்படுத்தாத மாநிலமாக ஆந்திரா உருவாகி இருப்பதாக ஆந்திரா மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று அறிவித்தார்.

- ஆதார் பதிவுக்கு வயதுச் சான்றிதழ் அவசியமில்லை என்று இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யுஐடிஏஐ) நேற்று குறிப்பிட்டுள்ளது.

## மே – 27

- ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பு நாடாக நிலையான ஆதரவு அளிப்போம் என மொரிஷியஸ் பிரதமர் பிரவிந்த் ஜக்நத் தெரிவித்துள்ளார்.

- ஜம்மு காஷ்மீரில் பேஸ்புக் உள்ளிட்ட சமூக வலைதளங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

- அசாம்-அருணாச்சல பிரதேச மாநிலங்களை இணைத்து கட்டப்பட்டு உள்ள நாட்டிலேயே மிகவும் நீளமான ஆற்றுப் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.

- அசாமில் மாயமான போர் விமானத்தின் சிதைந்த பாகங்கள் தேஜ்பூர் நகரில் இருந்து வடமேற்கு பகுதியில் 60 கிலோ மீட்டர் தொலைவில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

- ஓடிசா முதல்வர் நவீன் பட்நாயக் மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக 166 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாநிலம் முழுவதும் சாலைகள் மேம்பாடு, பாலம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளார்.

- பிரதமர் நரேந்திர மோடி மிகச் சிறந்த தகவல் தொடர்பாளர் மற்றும் இந்தியப் பொருளாதாரத்துக்கு புதிய வழியைக் காட்டியவர் என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

- திருமணங்களைப் பதிவு செய்வதற்கு கணவன் மற்றும் மனைவியின் கடவுச் சீட்டு விவரங்களை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று தேசிய மகளிர் ஆணையம் மத்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.

## மே – 28

- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்காக (பி.எப்) ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் 12 சதவீதம் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது. இந்த பணத்தை 10 சதவீதமாக குறைக்க மத்திய அரசு திட்டமிட்டது. ஆனால் ஊழியர்கள், நிறுவனங்கள், அரசு பிரதிநிதிகள் இதனால் ஊழியர்களின் ஓய்வூதிய பலன்கள் குறைவதால் தற்போதைய முறைப்படி 12 சதவீதமே நீடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

- கால்நடை சந்தைகளில் இருந்து இறைச்சிக்காக மாடுகளை விற்கவோ, வாங்கவோ தடை விதித்து மத்திய அரசு புதிய விதிமுறைகளை வெளியிட்டுள்ளது. இதை 'அனிமல் ஈக்வாலிட்டி' என்ற விலங்குகள் நல அமைப்பு வரவேற்றுள்ளது.

- விமான சேவை வழங்கும் பொதுத் துறை நிறுவனமான ஏர்-இந்தியாவின் நிதிச் சிக்கலை ஒப்புக்கொண்ட மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி அதை தனியார்மயப்படுத்தும் யோசனைக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்துள்ளார்.

- கடலோர காவல் படை மற்றும் கடற்படை அதிகாரிகளின் பயிற்சி நிறைவு விழா அணிவகுப்பு கடற்படை அகாடமியில் நேற்று நடந்தது. இதில் இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னேவ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். இவர் சிறப்பாக பயிற்சி முடித்த அதிகாரிகளுக்கு பதக்கங்ளை வழங்கினார்.

- பொருளாதார வாய்ப்புகள் தொடர இந்தியபெருங்கடல் பகுதியில் நிலவும் பொதுவான மற்றும் மாறுபட்ட அபாயங்களை திறமையான நிர்வாகம் மூலம் எதிர்கொள்வது தொடர்பாக மொரிஷியஸ்-இந்தியா இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிலையில் மொரிஷியஸ் மேம்பாட்டுக்கு சுமார் ரூ.3300 கோடி கடனுதவி வழங்குவதாக இந்தியா அறிவித்துள்ளது.

- தில்லி, மும்பை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தாக்குதல் நடத்த லஷ்கர்-ஏ-தொய்பா பயங்கரவாத இயக்கம் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

- இலங்கையில் கன மழை, நிலச்சரிவு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக, கப்பல் மூலம் அந்நாட்டுக்கு மருந்துகள் மற்றும்

நிவாரணப் பொருள்களை அனுப்ப வெளியுறவுத் துறை, பாதுகாப்புத் துறைக்கு பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டார்.

## மே – 29

- அதிக எடை கொண்ட ஜிஎஸ்எல்வி மார்க்-3 ராக்கெட் ஜூன் 5ம் தேதி முதல் மாலை 5 மணிக்கு விண்ணில் ஏவப்படும் என்றும் மேலும் ராக்கெட் செலுத்தப்படுவதற்கான கவுண்ட்டவுன் ஜூன் 4ம் தேதி முதல் தொடங்கும் என்றும் இஸ்ரோ தகவல் அளித்துள்ளது.

- அசாமில் விழுந்து நொறுங்கிய சுகோய்-30 ரக போர் விமானத்தின் கருப்பு பெட்டி ராணுவ வீரர்களால் நேற்று மீட்கப்பட்டது.

- பிரதமர் நரேந்திர மோடி ஜெர்மனி, ஸ்பெயின், ரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு 6 நாட்கள் சுற்றுப்பயணம் செல்கிறார்.

- தெற்காசிய பிராந்தியத்தின் பிரச்சனை நிறைந்துள்ள பகுதியில் இந்தியா அமைந்துள்ளதால் 70 ஆண்டுகளுக்கும் மேல் அண்டை நாடு ஒன்று இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என மத்திய பாதுகாப்பு துறை மந்திரி அருண் ஜேட்லி கூறியுள்ளார்.

- ஜம்மு காஷ்மீரில் ராணுவத்திற்கு அதிகாரிகளுக்கு இணையான சில பதவிகளுக்கு ராணுவ நுழைவுத் தேர்வு இன்று நடைபெற்றது. இதில் காஷ்மீரைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் பங்கேற்று தேர்வெழுதினர்.

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் தன்பாத் ரயில்வே பிரிவின் கீழ் இயங்கும் சிச்சாக்கி மற்றும் கர்மபாந்த் ரயில் நிலையங்களுக்கு இடையே உள்ள ரயில் டிராக்கில் மாவோயிஸ்டுகள் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

- வங்க கடலில் 720கி.மீ தொலைவில் உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக புதுச்சேரி துறைமுகத்தில் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. மேலும் மோரா என பெயரிடப்பட்டுள்ள இந்த புயல் வலுவடைந்து 24 மணி நேரத்தில் வங்கதேசம் அருகே கரையை கடக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

- டெல்லி ஐடிஓ-காஷ்மீரி இடையேயான மெட்ரோ சேவை பணிகள் முடிக்கப்பட்டு பாதுகாப்பு குறித்த ஆய்வுப்பணிகள் சிஎம்ஆர்சி தரப்பில் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு பணிகள் நிறைவடைந்ததால், பாதுகாப்பு ஒப்புதல் சான்றிதழை மெட்ரோ ரயில்வே பாதுகாப்பு அமைப்பு வழங்கியது. இதையடுத்து, டெல்லி-காஷ்மீரி மெட்ரோ ரயில் சேவை நேற்று முதல் தொடங்கப்பட்டது.

## மே – 30

- கத்தரி வெயிலுக்குப் பிறகும் தமிழகத்தில் 12 இடங்களில் 100 டிகிரிக்கும் அதிகமான வெயில் பதிவானது.

- பாகிஸ்தானுடனான இரு தரப்பு கிரிக்கெட்டுக்கு மத்திய அரசு அனுமதி அளிக்காது என விளையாட்டுத் துறை அமைச்சர் விஜய் கோயல் கூறினார்.

- திரைத் துறையில் தன்னிகரற்ற சேவையாற்றி வரும் கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் தாதாசாகேப் பால்கே விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த வருடம் பிரபல பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ராவுக்கு தாதா சாகேப் பால்கே விருது வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இந்நிலையில் இந்த வருடம் முதல், சர்வதேச அளவில் புகழ் பெற்ற நடிகை என்கிற புதிய பிரிவு இதில் சேர்க்கப்பட்டுள்ளது. 2016ம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருது சர்வதேச அளவில் புகழ் பெற்ற பல திரைப்படங்களை இயக்கிய கே.விஸ்வநாத்துக்கு வழங்கப்பட்டது.

- மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இந்தியா திகழ்கிறது என ராய்ட்டர்ஸ் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது. கடந்த மார்ச் காலாண்டின் படி இந்திய பொருளாதாரம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது எனவும், உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளின் செயல்பாடுகள் நல்ல வளர்ச்சி அடைந்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

- கல்பாக்கம் அணுமின் நிலையத்தின் முதல் அலகில் மீண்டும் மின்உற்பத்தி தொடங்கியது. பராமரிப்பு பணிகள் முடிவடைந்து முதற்கட்டமாக இன்று 120 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது.

- கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் ராகிங்கை தடுக்க மத்திய மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாக ராகிங்கில் ஈடுபடுவோர் மீது உடனடி நடவடிக்கைக்கு வழிசெய்யும் புதிய செல்போன் செயலியை பல்கலைக் கழக மானியக்குழு அறிமுகப்படுத்தி உள்ளது.

## மே – 31

- இஸ்ரோ 3136கிலோ எடை கொண்ட ஜிசாட்-19 என்ற செயற்கைக்கோளை ஜிஎஸ்எல்வி மார்க்3 டி1 ராக்கெட் மூலம் ஜூன் 5ம் தேதி விண்ணில் செலுத்துகிறது. மேலும் இந்த செயற்கைக்கோள் ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவண் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து விண்ணில் ஏவப்படவுள்ளது.

- இந்திய ராணுவம் எந்நேரமும் விழிப்புடன் உள்ளது. எதற்கும் தயாராக உள்ளது என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜேட்லி பாகிஸ்தானுக்கு மறைமுகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

- கேரளாவில் மாவேலிக்கரை, வைக்கம் ஆகிய இடங்களில் தென்மேற்கு

பருவமழை தொடங்கியது.

- இறைச்சிக்காக மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளை விற்பனை செய்ய மத்திய அரசு விதித்த தடையை அமல்படுத்த இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவிட்டுள்ளது.

- காஷ்மீர் பள்ளத்தாக்கில் செயல்பட்டு வரும் 12 பயங்கரவாதிகளின் பெயர்கள் அடங்கிய பட்டியலை ராணுவம் வெளியிட்டுள்ளது. அந்தப் பட்டியலில் ரியாஸ் நைகூ (எ) சுபைர், ஜாகிர் ரஷீத் பட் (எ) ஜாகிர் மூஸா ஆகியோர் மிக முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

- நாட்டில் புதிய ஒரு ரூபாய் நோட்டுகள் விரைவில் புழக்கத்தில் விடப்படும் என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

- நமது ராணுவத்தின் ஆயத்த நடவடிக்கைகள் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யும் அரண் போன்று விளங்குவதாக மத்திய அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

## உலக செய்திகள்

### மே – 1

- பதவி ஏற்று 100 நாட்கள் ஆனதையொட்டி நடந்த கூட்டத்தில் அமெரிக்க அதிபர் டிரம்ப் பேசினார். அப்போது அவர் வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என உறுதிபட கூறினார்.

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையே எந்த ஒப்பந்தமும் கையெழுத்திடப்பட மாட்டாது என்று இலங்கை அதிபர் மைத்ரிபாலா சிறீசேனா தெரிவித்துள்ளார்.

- துருக்கியில் 4000க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இது தொடர்பான அரசு ஆணை அந்நாட்டு அரசு இதழில் வெளியாகியது. ஆதில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் அனைவரது பெயர்களும் வெளியிடப்பட்டுள்ளன. பாதுகாப்புத் துறையில் பணியாற்றிய அதிகாரிகளின் பெயர்களும், கல்வித் துறையைச் சேர்ந்தவர்களின் பெயர்களும் அதில் இடம் பெற்றுள்ளன.

- பாரீஸ் பருவநிலை ஒப்பந்தம் ஒருதலைபட்சமாக உள்ளது. அமெரிக்கா ஏகப்பட்ட பில்லியன் டாலர்கள் தொகையை செலவழிக்கிறது ஆனால் இந்தியா, சீனா, ரஷ்யா பங்களிப்பு ஒன்றுமேயில்லை என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் சாடியுள்ளார்.

- 2016-17 நிதியாண்டின் இறுதி அறிக்கை பட்டியல் ஒன்றை என்டிஎம்சி

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 244 344 www.weshineacademy.com

தயாரித்துள்ளது. இதில் தாஜ்பேலஸ், தில்லி கோல்∴ப் கிளப் உள்ளிட்ட தில்லியின் பல்வேறு 11 நட்சத்திச உணவகங்கள் பல கோடி ரூபாய் அளவுக்கு சொத்து வரி செலுத்தாமல் இருப்பதாக புது தில்லி முனிசிபல் கவுன்சில் (என்டிஎம்சி) தெரிவித்துள்ளது.

## மே – 2

- வடகொரியாவை கடுமையாக விமர்சித்து வரும் அமெரிக்க அதிபர் டிரம்ப், அதிரடி திருப்பமாக அந்நாட்டு அதிபர் கிம்ஜோங்கை சந்திக்க இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

- பால் மற்றும் பால் பொருட்களில் உள்ள பாலாடைக் கட்டி போன்ற தீங்கற்ற பொருட்களில் ஆன்ட்டி-பயாடிக்குகளை வேலை செய்ய விடாமல் தடுக்கும் வகையில் புதுவகை மரபணுக்கூறு இருப்பதாக சுவிட்சர்லாந்தில் உள்ள பெர்ன் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- அணு குண்டுகளை கைவிட வடிவமைக்கப்பட்ட ராக்வெல் பி1-பி என்னும் அமெரிக்காவின் போர் விமானம் உலகப் போருக்கு ஒத்திகை பார்க்கும் விதமாக வடகொரியா வான் பறப்பில் பறந்ததாக வடகொரியா அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

- உலகிலேயே இதுவரை வாழ்ந்தவர்களில் மிகவும் அதிக வயதானவராக கருதப்பட்ட 146 வயது சோடிமெட்ஜா மத்திய ஜாவாவில் உள்ள தனது கிராமத்தில் மரணமடைந்தார்.

- ஜப்பானிய கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும் கார்ல் வின்சன் உள்ளிட்ட அமெரிக்க போர் கப்பல்களுக்கு வடகொரியாவால் ஆபத்து ஏற்படலாம் என்பதால் பாதுகாப்பு அளிப்பதற்காக ஜப்பான் அரசாங்கம் இசுமோ என்னும் போர்க்கப்பலை அனுப்பியது. இது ஜப்பானின் மிகப்பெரிய போர்க்கப்பல் ஆகும்.

- வடகொரியாவுடன் மூன்றாம் உலகப் போர் ஆரம்பமாகலாம் என சீனாவில் அந்நாட்டு மக்களை எச்சரிக்கும் வகையில் அபாய சங்கு தொடர்ந்து ஊதப்பட்டு வருகிறது.

## மே – 3

- தென்கொரியாவில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்காவின் ஏவுகணை தடுப்பு சாதனத்தை உடனடியாக நீக்க வேண்டும் என்று சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

- தென்கொரியாவின் சியோங்ஜூ பகுதியில் அமெரிக்கா அமைத்துள்ள வான் பாதுகாப்பு ஏவுகணை தளவாடம் செயல்பாட்டுக்கு வந்தது. எதிரியின் சிறு ரக மற்றும் நடுத்தர ரக ஏவுகணைகளை நடுவானில் தடுக்கும் திறன் இந்த வான் பாதுகாப்பு தளவாடத்துக்கு உள்ளது.

- அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம் தென்கிழக்குப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா பகுதிகளில் திங்கள்கிழமை நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாகப் பதிவானது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- துபாயில் உடனடியாக விசா பெற்ற முதல் இந்தியருக்கு, துபாய் சர்வதேச விமான நிலைய ஊழியர்கள் உற்சாகமாக வரவேற்பளித்தனர்.

- இஸ்ரேல் நேற்று முன்தினம் தனது 69வது சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடியது. அதில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 19 வயதான சிமிட்டா என்ற பார்வைத் திறனற்ற பாடகி, 133 பேருடன் சேர்ந்து சுதந்திர தீபத்தை ஏற்றி வைக்கும் கவுரவத்தை பெற்றார்.

## மே – 4

- சிரிய போரை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பாக ட்ரம்ப் மற்றும் புதின் இடையே ஆரோக்கியமான உரையாடல் நடத்தப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

- உலகப்போர் ஏற்படாமல் தடுக்க பேச்சுவார்த்தைக்காக வடகொரியாவுக்கு அமெரிக்கா இறுதி அழைப்பு விடுத்துள்ளது.

- அமெரிக்கா ராணுவத்தில் போர் தொடர்பான புகைப்படங்களை எடுக்கும் பிரிவில் இருந்தவர் பெண் போட்டோகிராபர் ஹில்டா கிளைடோன் (வயது 22). இவர் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க மற்றும் ஆப்கானிஸ்தான் ராணுவப்படைகள் பயிற்சியின் போது மோட்டார் குண்டுவெடிப்பில் உயிரிழந்தார். அவர் தான் உயிரிழந்த குண்டுவெடிப்பையும் தன்னுடைய கேமராவில் புகைப்படம் எடுத்துள்ளார். இப்போது அந்த புகைப்படத்தை அந்நாட்டு ராணுவ பத்திரிக்கை வெளியிட்டுள்ளது.

- பருவநிலை மாற்றத்திலிருந்து தப்பித்து உயிர் வாழ அடுத்த 100 ஆண்டுகளில் உலகத்தை விட்டு மக்கள் வெளியேறி விட வேண்டும். வேற்றுகிரகத்துக்கு சென்று தான் வாழ வேண்டும் என உலகின் மிக மூத்த விஞ்ஞானியான இங்கிலாந்தின் ஸ்டீபன் ஹாக்கிங் எச்சரித்துள்ளார்.

- இந்திய புராண தொலைக்காட்சித் தொடர்களுக்கு சீனாவில் பெரும் வரவேற்பு இருப்பதாக அந்நாட்டின் அரசு நாளிதழ் தெரிவித்துள்ளது.

- உலகில் நடக்கும் பல்வேறு விஷயங்களை பற்றி ஆராய்ச்சி செய்யும் ஆஸ்திரேலியாவின் திங் டேங் நிறுவனம் வெளியிட்டுள்ள முக்கிய செய்தி குறிப்பில், வடகொரியா அணு ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகளை கப்பலில் கடத்துகிறது என்று திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

- அமெரிக்காவில் அடுத்த 2 ஆண்டுகளில் 10,000 அமெரிக்கர்களை ஐ.டி பணியில் அமர்த்த இன்ஃபோசிஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளது. இந்த புதிய முடிவானது அதிபர் டிரம்ப் நடவடிக்கைக்கு கிடைத்த வெற்றி என வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

- இந்திய பாஸ்போர்ட் மற்றும் அமெரிக்க விசாவுடன் ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு செல்லும் இந்தியர்களுக்கு அங்கு இறங்கியவுடன் விசா வழங்கும் சலுகை அமல்படுத்தப்பட்டுள்ளது.

## மே – 5

- அமெரிக்க அதிபரான பிறகு டொனால்டு ட்ரம்ப் மேற்கொள்ளவிருக்கும் முதல் வெளிநாட்டுப் பயண அட்டவணை தயாராகியுள்ளது. அதன்படி இஸ்ரேல், வாடிகன், சவுதி அரேபியாவுக்கு அவர் செல்லவிருக்கிறார். இந்த மாத இறுதியில் ட்ரம்பின் வெளிநாட்டுப் பயணங்கள் திட்டமிடப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

- பிஎம்எஸ்எஸ் டாஷ்த் மற்றும் பிஎன்எஸ் ஜுபிகர் ஆகிய இரு போர்க் கப்பல்களும் இலங்கை வந்துள்ளன. பாகிஸ்தான் மற்றும் இலங்கை நாடுகளுக்கிடையே நிலவும் அரசியல், பொருளாதார, கலாச்சார, பாதுகாப்பு நல்லுறவைப் பறைசாற்றும் விதமாக, தங்களது போர்க் கப்பல்கள் இலங்கை வந்துள்ளதாக, அந்த நாட்டுக்கான பாகிஸ்தான் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- சீனாவின் முன்பு மண்டியிடும் அமெரிக்காவை வேண்டுமானால் பலவீனமான நாடு என்று சொல்லலாம். ஆனால் ஜிம்பாப்வே பலவீனமான நாடோ, ஏழை நாடோ கிடையாது. தென்னாப்பிரிக்காவுக்கு அடுத்த படியாக ஜிம்பாப்வே தான் ஆப்பிரிக்காவின் பணக்கார நாடு என்று அந்நாட்டு அதிபர் ராபர்ட் முகாபே தெரிவித்துள்ளார்.

- இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் கணவர் இளவரசர் கோமகன் பிலிப், வரும் ஆகஸ்டு மாதம் பொது வாழ்வில் இருந்து ஓய்வு பெறப்போவதாக நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இதற்கான முடிவை அவரே எடுத்துள்ளதாகவும், அந்த முடிவுக்கு ராணி இரண்டாம் எலிசபெத் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் அரண்மனை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

- வடகொரியாவினால் கடந்த வாரம் பரிசோதிக்கப்பட்ட ஏவுகணை ரஷ்யாவை நோக்கி சென்றுள்ளது. ரஷ்யாவுக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்ற அச்சம் காரணமாக KN-17 என்ற இந்த ஏவுகணையை ரஷ்யா வெடிக்க செய்துள்ளதாக வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

## மே – 6

- தூய எரிவாயுக்காக ஐஸ்லாந்து நாடு அந்நாட்டின் மிக முக்கிய நகரான ரெய்க்ஜாலித் அருகிலுள்ள கிரா.்.ப்ளா எரிமலையைத் தோண்டும் பணி தொடங்கியுள்ளது. இந்த எரிமலைப் பகுதிகளில் நடத்தப்படும் இந்த பரிசோதனை திட்டம் வெற்றியடைந்தால் 10மடங்கு அதிக எரிவாயு அல்லது கச்சா எண்ணெய் எடுக்க முடியும் என்று ஐஸ்லாந்து எரிசக்தி நிறுவனமான HS ஓர்காவின் பொறியியலாளர் ஆல்பர்ட் அல்பெர்ட்ஸ்சன் தெரிவித்துள்ளார்.

- உள்நாட்டில் நிலவும் வறுமையும், பசியுமே அகதிகள் அதிகரிக்க காரணம் என்று ஐநா மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

- கடலில் கரைந்துள்ள பிராணவாயு அளவைக் கொண்டுதான் கடலின் ஆரோக்கியம் நிர்ணயிக்கப்படுகிறது. துருவங்களில் பனி உருகி வருவது மிக வேகமாக நடந்து வருவதால் கடல்களில் புதிய நீர் சேகரமாகிறது. இதனால் கடல்நீர் அதிகமாக வெப்பமடைந்து இது பிராணவாயுவை அழித்து வருகிறது என்று அமெரிக்க ஆய்வு எச்சரித்துள்ளது.

- சீனாவின் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் ஜெட் விமானம் பறக்கத் தயாராகிறது. 158 பேர் அமரக்கூடிய சி919 எனும் பெயர் கொண்ட இந்த விமானம் தனது சோதனை ஓட்டத்தை நடத்தியுள்ளது.

- அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், வெளிநாட்டு ஊழியர்கள் அமெரிக்காவுக்கு வருவதை கட்டுபடுத்த எச்1பி விசாவில் புதிய விதிமுறைகளை கொண்டு வந்தார். அதன் படி அமெரிக்கா விசாவை பெறுவதற்கு பேஸ்புக், டிவிட்டர், இ-மெயில், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களை விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என டிரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

- ரஷ்யா உலகின் மற்ற நாடுகளுக்கு எச்சரிக்கை தரும் வகையில் சதந் 2 என குறிக்கும் வகையில் உலகின் கனமான மற்றும் சக்தி வாய்ந்த ஏவுகணையை தயாரித்துள்ளது. இந்த ஏவுகணை 11,000 மைல்கள் சென்று தாக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- ஸ்மார்ட்போன், டேப்லட் உள்ளிட்ட மின்னனுக் கருவிகளை குழந்தைகள் பயன்படுத்துவதால் அவர்களின் பேசும் திறன் தாமதமாகலாம் என்று கனடா விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

- அமெரிக்க அதிபராக ஒபாமா பொறுப்பு வகித்த காலத்தில் இயற்றப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ரத்து செய்ய அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

## மே – 7

- உலகின் தலை சிறந்த விஞ்ஞானிகள் ஆல்பர்ட் ஐன்ஸ்டின், ஸ்டீபன் ஹாக்கிங் உள்ளிட்டோர் மென்ஸா நுண்ணறிவுத் திறன் போட்டியில் 160 மதிப்பெண்கள் பெற்றனர். இந்நிலையில் கடந்த மாதம் நடந்த மென்ஸா தேர்வில் பிரிட்டனைச் சேர்ந்த இந்திய வம்சாவளி சிறுமி ராஸ்கவுரி பவார் 162 மதிப்பெண்கள் பெற்று புதிய சாதனை படைத்துள்ளார்.

- இந்தியா-ரஷ்யா ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து 5-வது தலைமுறை போர் விமானத்தை தயாரிக்கவுள்ளன. இது தொடர்பான விரிவான வடிவமைப்புத் திட்டத்தை இறுதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் இரு நாடுகளும் விரைவில் கையெழுத்திட உள்ளன.

- பாகிஸ்தான் இன்டர்நேஷனல் ஏர்லைன்ஸ் நாளை முதல் கராச்சி – மும்பை இடையிலான விமானத்தை இயக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது. கராச்சி – மும்பை இடையிலான விமான சேவை நிறுத்தப்பட்டாலும் லாகூர் மற்றும் டெல்லி இடையிலான விமானங்கள் விமானங்கள் வழக்கம்போல் இயக்கப்படும் என பாகிஸ்தான் இன்டர்நேஷனல் ஏர்லைன்ஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

- பிரான்ஸ் நாட்டில் ஒல்லியான தேகவாகு கொண்ட மாடல் அழகிகளுக்கு தடை விதித்து சட்டம் இயற்றப்பட்டுள்ளது. அந்த சட்டம் இப்போது அமலுக்கு வந்துள்ளது. இந்த சட்டத்தின் படி மாடல் அழகிகள் மாடலிங் செய்வதற்கு டாக்டர்களிடம் உடல் தகுதி சான்றிதழ் பெற்று வழங்க வேண்டும் என கூறியுள்ளனர்.

- உலகின் முக்கிய பகுதிகளில் தண்ணீர் பற்றிய விழிப்புணர்வு குறித்து உலக தண்ணீர் கவுன்சில் சமீபத்தில் ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வில் இந்தியாவில் கடந்த 5 வருடங்களில் குடிநீரின் தரம் உயர்ந்துள்ளது என உலக தண்ணீர் கவுன்சில் தெரிவித்துள்ளது.

- பாலஸ்தீனிய போராளி இயக்கமான ஹமாஸ்சிற்கு புதிய தலைவராக ஹனியே தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## மே – 8

- ஜெர்மனியில் 2ம் உலகப் போரில் வீசப்பட்ட வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் ஹேனோவர் நகரிலிருந்து பொதுமக்கள் 50 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். லோயஸ் சாக்சன் மாகாணத்தில் உள்ள அந்த நகரில் 1943ம் ஆண்டு 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வெடிகுண்டுகள் வீசப்பட்டன. இவற்றில் வெடிக்காமல் புதைந்து போன சில வெடிகுண்டுகள் அவ்வப்போது கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

- இங்கிலாந்தில் உள்ள தி சண்டே டைம்ஸ் என்ற பத்திரிக்கை 2017ம் ஆண்டுக்கான பணக்காரர்கள் 100 பேர் அடங்கிய பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், இந்திய வம்சாவளியை சேர்ந்த சந்த் இந்துஜா மற்றும் கோபிசந்த் இந்துஜா சகோதரர்கள் முதலிடத்தை பிடித்துள்ளனர்.

- பிரான்ஸ் அதிபர் தேர்தலின் இறுதிச் சுற்றில் அமோக வெற்றி பெற்ற ஆன் மார்ச் கட்சியைச் சேர்ந்த இமானுவல் மேக்ரான் அந்நாட்டு அதிபராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## மே – 9

- உலக உணவு பாதுகாப்புக் குழுவின் உறுப்பினராக எம்.எஸ்.சுவாமிநாதன் அறக்கட்டளை தலைவர் டாக்டர் மதுரா சுவாமிநாதன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- பாகிஸ்தான் - ஈரான் நாட்டு எல்லையில் ஜெய்ஷ் அல் - அட் என்ற தீவிரவாத அமைப்ப செயல்படுகிறது. இந்த அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் ஈரானுக்குள் போதைப் பொருட்களைக் கடத்துகின்றனர். இதைக் கட்டுப்படுத்த ஈரான் ராணுவம் எல்லையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. மேலும் பாகிஸ்தானுக்கு ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

- வடக்கு ஆப்பிரிக்க நாடான தெற்கு சூடான் 2011-ம் ஆண்டு சூடானிலிருந்து பிரிந்தது. அதன் பின்னர் இனவாரியாக பிளவுப்பட்ட தெற்கு சூடான் உள்நாட்டுப் போர் காரணமாக கடும் பஞ்சம் நிலவுகிறது. இந்த நிலையில் தெற்கு சூடானில் நிலவும் உள்நாட்டுப் போர் காரணமாக 10 லட்சம் குழந்தைகள் அகதிகளாக உள்ளதாக ஐநா அறிவித்துள்ளது.

- இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதராக பணியாற்றி வரும் அப்துல் பாசித்தின் 3 ஆண்டு பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. இதையடுத்து இந்தியா – பாகிஸ்தான் இடையிலான புதிய தூதராக சொகைல் மக்மூத் நியமிக்கப்படுகிறார்.

- மலேசியா தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் 712 கிலோ அளவிலான எறும்புத்தின்னி செதில்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவற்றின் மதிப்பு 2 மில்லியன் அமெரிக்க டாலருக்கும் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.13 கோடி) அதிகமாக இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

- பிரான்ஸ் நாட்டின் புதிய அதிபராக ‘என் மார்ச்சே’ என்ற இயக்கத்தின் தலைவர் இமானுவேல் மேக்ரான் வெற்றி பெற்றார். மேலும் அவருக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.

## மே – 10

- இரண்டாம் உலகப்போரின் 72வது ஆண்டு வெற்றி தினம் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நேற்று கொண்டாடப்பட்டது. இதில் அந்நாட்டு அதிபர் நாடுகளிடையே ஏற்பட்ட பிரிவினையால் இரண்டாம் உலகப்போர் நடைபெற்றது.

இதைத் தவிர்க்க உலக நாடுகள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

- இலங்கையில் கடந்த 2009 ல் நடைபெற்ற இறுதிக்கட்ட உள்நாட்டுப் போரின் போது முள்ளிவாய்க்காலில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். இந்த படுகொலையை நினைவுகூறும் வகையில் வரும் 12ம் தேதி முதல் 18ம் தேதி வரை தமிழின படுகொலை வாரம் அனுசரிக்கப்பட உள்ளது.

- அமெரிக்க அதிபராக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு குடியேற்ற விதிகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதன்படி சட்டவிரோதமாக அமெரிக்காவில் குடியேறின குர்முக் சிங்கை அமெரிக்காவை விட்டு வெளியேற்றுமாறு உள்ளுர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- ஜப்பானின் தென் பகுதியிலுள்ள தீவுப் பகுதியான மியாகோவில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகியுள்ளது.

- இந்திய கடற்படை முன்னாள் அதிகாரி குல்பூஷன் ஜாதவ் மரண தண்டனையை நிறைவேற்ற சர்வதேச நீதிமன்றம் பாகிஸ்தானுக்கு தடை விதித்துள்ளது.

- அமெரிக்காவின் எரிசக்தி துறையில் முக்கிய அமைப்பாக திகழ்கிற மத்திய எரிசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் உறுப்பினராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நீல் சட்டர்ஜியை ஜனாதிபதி ட்ரம்ப் நியமனம் செய்துள்ளார்.

- குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் ஊடகத் தலைவராக இருந்த வேணு ராஜாமணி நெதர்லாந்து நாட்டுக்கான இந்தியத் தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## மே – 11

- உலகிலேயே மிகவும் பருமனான பெண்ணான எகிப்து நாட்டைச் சேர்ந்த இமான் அகமதுக்கு சமீபத்தில் மும்பையில் காஸ்ட்ரிக் பைபாஸ் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் சுமார் 500 கிலோவாக இருந்த அவரது உடல் எடை 177 கிலோவாக குறைந்தது குறிப்பிடத்தக்கது.

- ஆண்டுதோறும் சித்திரை பவுர்ணமி நாளில் புத்தர் பிறந்த தினம் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி இலங்கையில் 2 நாட்களுக்கு தேசிய விடுமுறை விடப்படுகிறது. இந்த ஆண்டின் புத்தர் பிறந்த தினம் நேற்றும் இன்றும் கொண்டாடப்படுகிறது.

- அதிக கொலைகள் ஏற்படும் நாடுகள் குறித்து லண்டனை தலைமையிடமாகக் கொண்டு ஐஐஎஸ்எஸ நிறுவனம் நடத்திய ஆய்வில் சிரியா முதலிடத்தையும் மெக்சிகோ இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

- மேற்கு மொசூலில் ஈராக் படைகள் நடத்திய தாக்குதலில் ஐ.எஸ் பயங்கரவாத இயக்கத்தின் தளபதி அபு அயோப் அல் ஷமி கொல்லப்பட்டார்.

- தெற்கு சூடான் நாட்டில் வலிமை வாய்ந்த ராணுவ தளபதி பால் மாலோங்கை அதிபர் சல்வா கீர் திடீரென பதவியை விட்டு நீக்கி விட்டார். புதிய தளபதியாக ஜேம்ஸ் அஜங்கோ மாவுத் நியமிக்கப்பட்டுள்ளார்.

- இந்தியா – ரஷ்யா இடையே அணுசக்தி, வர்த்தகம், முதலீடு உள்ளிட்டவற்றில் இரு தரப்பு ஒத்துழைப்புக்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் இந்தியா வந்துள்ள ரஷ்ய துணைப் பிரதமர் டிமித்ரி ரோகோசின், வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜை சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் இரு நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்த இரு தரப்பும் முடிவு செய்துள்ளதாக சுஷ்மா ஸ்வராஜ் தெரிவித்துள்ளார்.

- சிரியாவில் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்) பயங்கரவாதிகளுக்கு எதிராகப் போரிட்டு வரும் குர்து படையினருக்கு ஆயுதங்களையும், ராணுவ தளவாடங்களையும் வழங்கி உதவ அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

- மேற்கு சீனாவின் ஜின் ஜியாங் மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.4ஆக பதிவாகியுள்ளது.

## மே – 12

- கடந்த ஆண்டு சீனாவின் பொருளாதார வளர்ச்சி 6.7% மாறாக இந்தியாவின் ஒட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1% என சீனாவின் அரச நாளிதழ் குளோடல் டைம்ஸ் புள்ளி விவரம் கூறுகின்றது. மேலும் எர்ன்ஸ்ட் அண்ட யங் சர்வேயின் படி உலகின் முதலீட்டுக் கவர்ச்சி மிகுந்த இடமாக இந்தியாவே உள்ளது.

- வடகொரியா 6வது முறையாக அணு ஆயுத சோதனை நடத்த தயாராகி வருவது செயற்கைகோள் புகைபடங்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் அவ்வப்போது அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது. எனவே வடகொரியவை மிக தீவிரமாக கண்காணிக்க அமெரிக்கா உளவுப் பிரிவான சிஐஏவில் சிறப்பு படை உருவாக்கப்படுள்ளது.

- இந்தியப் பெருங்கடல் மற்றும் ஆசிய –பசிபிக் கடல் பகுதி பாதுகாப்பு விவகாரங்களில் ஒத்துழைப்பது குறித்து அமெரிக்காவின் ரோட் ஐலாண்ட் மாகாணத்தில் இந்திய அமெரிக்க உயர் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். அந்தக்கடல் பகுதி பாதுகாப்பில் இரு தரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

- கொழும்புவில் சர்வதேச புத்த பூர்ணிமா கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளவும், இந்திய நிதிஉதவியுடன் கட்டப்பட்டுள்ள திககோயர்

ஆஸ்பத்திரியை திறந்து வைக்கவும், தமிழர்களை சந்தித்து பேசவும் பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் இலங்கை பயணம் மேற்கொண்டுள்ளார்.

- சிரியாவின் ஐ.எஸ். பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து முக்கிய நகரமான தாப்காவை அமெரிக்காவின் ஆதரவு பெற்ற சிரிய ஜனநாயக படையினர் மீட்டனர்.

- ஆப்கானிஸ்தானில் தெற்கு காந்தஹார் பகுதியில் நேற்று நடந்த குண்டுவெடிப்பு, வன்முறைகளில் 17 தலீபான் பயங்கரவதிகள் உயிரிழந்தனர்.

- இந்திய பிரதமர் மோடி இலங்கை சுறறுப்பயணம் மேற்கொண்டுள்ள நிலையில் சீன நீர்முழ்கிப் க்ப்பலை கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைப்பதற்கு இலங்கை அனுமதி மறுத்துள்ளது.

## மே – 13

- புத்த மதத்தினரின் மிகப்பெரிய திருவிழாவான வெசாக் தினத்தில் சிறப்பு விருந்தினராக பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார் இதில் அவர் இந்தியாவின் வளர்ச்சி இலங்கைக்கு பயன் அளிக்கும் என கூறினார்.

- இந்தியாவில் தாக்குதல் நடத்த பாகிஸ்தான் பயங்கிரவாதிகள் சதித்திட்டம் தீட்டி உள்ளதாக அமெரிக்க உளவுத்துறை திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

- அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் இணையதள வழி குற்றங்களை தடுக்கும் வகையில் நிர்வாக உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளார்.

- ஆசியா ஐரோப்பிய நாடுகளை இணைக்கும் சீனாவின் பொருளாதார நெடுஞ்சாலை துவக்க விழாவில் அமெரிக்கா பங்கேற்காது என்று அதிரடியாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

- கம்போடியாவில் வருடாந்திர விதைப்பு திருவிழா மிக பிரம்மாண்டமாக அரங்கேறியது. இந்தாண்டு எந்த பயிரை பயிரிட்டால் விளைச்சல் இருக்கும் என்பதை கணிக்க அரசு எருதுகள் சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு அழைத்து வரப்பட்டன.

- இலங்கை மலையக மக்களுக்கு மேலும் 10 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்றும் கொழும்பு – வாரணாசி இடையே நேரடி விமான சேவை தொடங்கப்படும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்துள்ளார்.

## மே – 14

- உலகிலேயே உயரமான கட்டிடமான ஜெட்டா டவர் சவுதி அரேபியாவில் கட்டப்பட்டு வருகிறது. ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட இந்த கட்டிடத்தின் கட்டுமானப் பணி பொருளாதார நெருக்கடி காரணமாக தாமதாதமாகியுள்ளதாக அந்நாடு தெரிவித்துள்ளது.

- எகிப்து நாட்டில் கல்லறைகளுக்குள் 17 'மம்மிகள்' இருப்பதைத் தொல்பொருள் ஆராய்ச்சியின் போது ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

- அயல்நாடுகளில் பணி புரியும் போது இறந்து போகும் தொழிலாளர்களுக்கு காப்பீடு வசதி வழங்க அரசு முயற்சிக்கிறது என்று அயலுறவுத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங் கூறினார்.

- இந்திய முன்னாள் கடற்படை அதிகாரி குல்பூஷன் ஜாதவுக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கு சர்வதேச நீதிமன்றம் விதித்துள்ள இடைக்காலத் தடையை எதிர்த்து வாதிடுவதற்கான தீவிர செயல்திட்டத்தை பாகிஸ்தான் வகுத்து வருவதாக 'டான்' நாளிதழ் தெரிவித்துள்ளன.

- அரசியல் சூழல் சரியாக இருந்தால் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று வட கொரிய மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

- அமெரிக்க புலனாய்வு அமைப்பான எஃப்.பி.ஐக்குப் புதிய தலைவரை நியமிக்க அதிபர் டிரம்ப் பன்னிரண்டு பேர் பெயர்களை பரிசீலித்து வருவதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

- உலகம் முழுவதும் 99 நாடுகளில் இணைய வைரஸ் தாக்குதல் பாதிப்பு இருப்பதாக இணையப் பாதுகாப்பு ஆய்வு நிறுவனமான காஸ்பர்ஸ்கி லேப் தெரிவித்துள்ளது.

- போர்ச்சுக்கல் நாட்டில் பாத்திமா என்ற இடத்தில் 1917ல் மேரி மாதா ஆடுமேய்க்கும் 3 சிறார்களுக்கு காட்சி அளித்துள்ளார். இந்த ஆண்டு மேரி மாதா காட்சி அளித்து 100 ஆண்டுகள் ஆகிறது. இதை முன்னிட்டு போப் பிரான்சிஸ் போர்ச்சுக்கல் சென்றார். அப்போது மேரி மாதாவை பார்த்த பிரான்சிஸ்கோ மற்றும் ஜெசிந்தாவை புனிதராக அறிவித்தனர்.

- உலக வர்த்தகத்தை மையப்படுத்தி சீனாவில், 'ஒரே அமைப்பு ஒரே சாலை' என்ற பெயரில் இன்றும், நாளையும் மாநாடு நடக்க உள்ளது. இதில் இந்தியா உள்பட 29 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## மே – 15

- பாகிஸ்தான் உள்பட 29 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் 2 நாள் மாநாடு சீன தலைநகர் பீஜிங்கில் தொடங்கியது.

- ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வருகிற ஐ.எஸ்.பயங்கரவாதிகள் மீது உள்நாட்டு படைகளுடன், அமெரிக்க கூட்டுப்படைகளும் இணைந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

- வடகொரியா தனது ஆயத குவிப்பை கைவிட்டு ஏற்கனவே ஒப்புக்கொண்டபடி நடந்து கொள்ள வேண்டும என்று புதிய பிரஞ்சு அரசு கூறியுள்ளது.

- அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு முகமை (என்.எஸ்.ஏ) உருவாக்கிய, இணையவழி தாக்குதல் 'டூல்'களை (கருவிகளை) கொண்டு, உலகின் சுமார் 100 நாடுகளில் உள்ள நிறுவனங்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளின் கணினிகளில் 'ரான்சம்வேர்' வைரஸ் மூலம் இணைய தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

- கனடாவின் அல்பர்டா பகுதியில் 2011ம் ஆண்டு ஒரு டைனோசர் புதைப்படிமம் கண்டுபிடிக்கப்பட்டது. 6 ஆண்டுகள் அந்த டைனோசரை வைத்து தொல்லுயிரியலாளர்கள் ஆராய்ச்சி செய்த பிறகு, தற்போது அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். மேலும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட டைனோசர் புதைப் படிமங்களிலேயே இதுதான் ஓரளவு முழுமையானதாகும்.

- தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தி ஆரம்பித்த டால்ஸ்டாய் பண்ணையை புனரமைக்கும் பணிகளுக்கு இந்திய நிறுவனங்கள் உதவிக்கரம் நீட்டியுள்ளன. இதைத் தொடர்ந்து டால்ஸ்டாய் பண்ணை புத்துயிர் பெறுகிறது.

- அமெரிக்க போலீஸ் துறையில் சீக்கியர்கள் உட்பட பல இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆனால், சீக்கியர்கள் ஒருவரும் அதிகாரியாக இல்லை. இந்நிலையில், மிட்டன் கட்டோச் என்ற சீக்கியர் இண்டியானா போலீஸ் துறையில் அதிகாரி ஆகியுள்ளார்.

- உலக வர்த்தகத்தை மையப்படுத்தி, பட்டுச்சாலை எனப்படும் 'ஒரே பட்டை, ஒரே சாலை' திட்ட முயற்சியை கடந்த 2013ம் ஆண்டு சீனா பரிந்துரைத்தது. இதன்படி, ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா நாடுகளை இணைக்கும் வகையில் சாலை மற்றும் கடல் வழி பாதைகள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்கு பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா, ஜெர்மனி, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

- துர்க்மெனிஸ்தானை ஒட்டிய ஈரானின் எல்லைப் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கடியில் 12.5கி.மீ ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.8 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

## மே – 16

- அமெரிக்கா, தென் கொரியாவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் புதிய ஏவுகணை சோதனையை வடகொரியா வெற்றிகரமாக நடத்தி உள்ளது.

- இரு நாடுகளுக்கு இடையே நிலைமை சுமுகமாக இருந்தால் அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என்று வடகொரியா கூறியுள்ளது.

- ரான்சம்வேர் வைரஸ் தாக்குதலுக்கு அமெரிக்காவே காரணம் என ரஷ்ய அதிபர் விளாடிமர் புதின் குற்றம் சாட்டியுள்ளார்.

- ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் அமெரிக்கா சேகரித்த இரகசிய உளவுத் தகவல்களை அதிபர் டிரம்ப் வெளியிட்டார் என்று அமெரிக்காவின் பிரபல நாளேடான வாஷிங்டன் போஸ்ட் அறிக்கையில் வெளிவந்துள்ளது.

- புவி வெப்பமடைதல் பற்றிய பருவகால மாற்றம் குறித்த ஐநா அமைப்பிற்கு ஓவாய்ஸ் சர்மாட் எனும் 57 வயது மூத்த அதிகாரி ஒருவரை செயலர் குட்டரேஸ் நியமித்துள்ளார்.

- பல காலமாக இருந்து வரும் வழக்கத்திலிருந்து தனது கட்சியிலிருந்து பிரதமரை நியமிக்காமல் வலதுசாரி ஒருவரை பிரதமராக பிரஞ்சு அதிபர் மெக்ரான் நியமித்துள்ளார்.

- அமெரிக்க நாட்டின் சிறந்த அழகியை தேர்வு செய்யும் 'மிஸ் அமெரிக்கா' போட்டி நெவாடா மாகாணத்தின் லாஸ் வேகாஸ் நகரில் நடைபெற்றது. இதில் வாஷிங்டன் மாகாணத்தின் கொலம்பியா மாவட்டத்தை சேர்ந்த அமெரிக்க விஞ்ஞானி காரா மெக்கல்லோ மிஸ் அமெரிக்காவாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- வானாகிரை வைரஸ் இந்திய வங்கிகளின் நெட்வொர்க்கை விரைவில் பாதிக்கும் என்று சைபர் கிரைம் நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## மே – 17

- உலகம் முழுவதும் சண்டையை தடுத்து நிறுத்தி அமைதியை நிலைநாட்டும் பணிகளில் பெண்களின் பங்கு அதிகரிக்க வேண்டும். இதற்கான இலக்கை எட்டுவதற்காக இந்தியா பெண்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து வருகிறது என ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் இந்தியாவுக்கான நிரந்தர துணை பிரதிநிதி தன்மயா லால் தெரிவித்துள்ளார்.

- பூமியில் எங்கும் இல்லாத அளவுக்கு நியூலாந்து சிலி இடையே தெற்கு பசிபிக் கடலில் உள்ள தனித் தீவில் பிளாஸ்டிக் கழிவுகள் தேங்கி கிடப்பதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

- வட கொரியா ஏவுகணை சோதனைகளில் எதிர்பார்த்ததை விட வேகமாக முன்னேறி வருகிறது என்று தென் கொரியா அச்சம் தெரிவித்துள்ளது.

- அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் ரஷ்யாவிடம் எந்த ரகசிய தகவலையும் கூறவில்லை என்று ரஷ்ய அதிபர் புதின் விளக்கம் அளித்துள்ளார்.

- பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் குழந்தையை கடித்ததற்காக நாய்க்கு மரண தண்டனை விதித்து வித்தியாசமான தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

- சீனாவின் பட்டு சாலை திட்டத்தை அமல்படுத்த தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் உலக நாடுகளை போக்குவரத்து வசதி மூலம் இணைத்து சீனாவின் வர்த்தகத்தை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. இதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

- வடகொரியா மிகப்பெரிய அணுசக்தி திட்டத்தை தயாரிப்பதாக தென்கொரியா பாதுகாப்பு அமைச்சகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

- உலகம் முழுவதும் 10 முதல் 19 வயதுடைய இளம் பருவத்தினர் உயிரிழப்பதற்கு சாலை விபத்து தான் முதல் காரணமாக இருக்கிறது என உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- அந்தமான் தீவுகளில் நேற்று மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 4.4 அலகுகளாகப் பதிவாகியுள்ளது.

- ரேன்சம்வேர் கணினி வைரஸ் தாக்குதலில் வடகொரியாவுக்கு தொடர்பு இருப்பதை கூகுள் நிறுவனத்தில் பணியாற்றும் இந்திய வம்சாவளி பொறியாளர் நீல் மேத்தா கண்டுபிடித்துள்ளார்.

## மே – 18

- ஐ.எஸ் தீவிரவாதிகள் தொடர்பான ரகசிய தகவல்களை ரஷ்யாவுக்கு அளித்ததாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

- வடகொரியாவின் அணு ஆயுத ஏவுகணை சோதனைகள் பேரழிவுக்கானதாகவே பார்க்கப்படுகிறது என்று அமெரிக்க கடற்படை தளபதி கூறியுள்ளார்.

- கன மழையால் பூமியின் மேற்பரப்பை போன்று செவ்வாயின் மேற்பரப்பு கடின தன்மையுடன் மாறி உள்ளது என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்

- அமெரிக்க அதிபர் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற ரஷ்யா உதவி செய்ததா எனும் விவகாரத்தை விசாரிக்க சிறப்பு அதிகாரி ஒருவரை அமெரிக்க சட்டத்துறை நியமித்துள்ளது.

- இயற்கை மற்றும் உயிரினங்கள் பாதுகாப்புக்கு அரும்பணி ஆற்றியவர்களை பாராட்டும் வகையில், இங்கிலாந்தை சேர்ந்த ஒயிட்லி நிதியம், ஒயிட்லி விருதுகளை (பசுமை ஆஸ்கார் விருது) ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இந்நிலையில் இந்த ஆண்டுக்கான விருது இந்தியாவை சேர்ந்த சஞ்சய் குப்பி, பூர்ணிமா பர்மன் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.

- ஆஸ்திரேலியாவுக்கு வரும் விமானங்களில், மடிக் கணினிகளுக்குத் தடை விதிப்பது குறித்து பரிசீலித்து வருவதாக அந்நாட்டு பிரதமர் மால்கம் டர்ன்புல் தெரிவித்துள்ளார்.

- சீனாவை மையமாகக் கொண்டு புதிய பொருளாதார சாலை அமைக்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இந்த 'ஓபிஓஆர்' சாலை திட்டத்தில் பங்கு பெறும் இலங்கைக்கு கூடுதலாக ரூ.1.5 லட்சம் கோடி கடன் வழங்க சீனா முடிவு செய்துள்ளது.

## மே – 19

- சிரியாவின் ஹமா மாகாணத்தில் அரசு கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு கிராமங்களில் ஐ.எஸ் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

- இலங்கையில் நடந்த போரில் முள்ளிவாய்க்காலில் ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட 8 வது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இந்நிலையில் இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு பகுதியில் 1,50,000 ராணுவ வீரர்களை குவித்துள்ளனர்.

- கிழக்கு சீன கடல் மீது சர்வதேச வான் பரப்பில் கதிர்வீச்சை கண்டறியும் ஓர் முயற்சியில் அமெரிக்காவின் விமானம் ஒன்று ஈடுபட்டிருந்தது. அப்போது இரு சீன சுகோய் சு-30 ரக போர் ஜெட் விமானங்கள் அமெரிக்க விமானத்தை இடைமறித்து உள்ளது.

- அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ரஷியாவின் தலையீடு குறித்து விசாரிக்க உளவுத்துறை முன்னாள் இயக்குநர் ராபர்ட் முல்லர் நியமிக்கப்பட்டுள்ளார்.

- வானியல் ஆராய்ச்சித் துறையில் சிறப்பான பங்களிப்பு செய்ததற்காக இந்திய விஞ்ஞானி குல்கர்னி, வார்சா பல்கலைக்கழகத்தின் ஆனட்ரெஜ் உதால்ஸ்கை, நாசாவின் நீல் கேஹ்ரல்ஸ் ஆகிய 3 பேருக்கும் இஸ்ரேல் நாட்டின் 'டேன் டேவிட்' விருது வழங்கப்படுகிறது.

- பிரான்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் விண்வெளி மருத்துவம் மற்றும் உடலியலின் ஆராய்ச்சியாளர்கள் மனித உடலைப் பற்றி ஆராய்ச்சி செய்யவும், சர்வதேச விண்வெளி நிலையத்தில் மனிதனின் எடையற்ற தன்மையை மீண்டும் புதுப்பித்தல் தொடர்பாக ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக 3

மாதம் படுக்கையில் தூங்கிக்கிட்டே இருப்பவர்களை தேடி வருகின்றனர். அந்த வேலைக்காக சம்பளமாக 12 ஆயிரம் யூரோப் (இந்திய ரூபாய் மதிப்பில் ரூ.11.2 லட்சம்) வழங்கப்படும் என அறிவித்துள்ளனர்.

- குல்பூஷன் ஜாதவை இந்திய தூதரக அதிகாரிகள் சந்திக்க அனுமதி அளிக்க வேண்டும் எனவும் அடுத்த உத்தரவு வரும் வரையில் மரண தண்டனையை நிறைவேற்ற கூடாது எனவும் பாகிஸ்தானுக்கு சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

- உலகம் முழுவதும் 28000க்கு மேற்பட்ட மருத்துவக் குணம் வாய்ந்த தாவர இனங்கள் இருப்பதாக லண்டனில் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- கடல் பூங்காக்கள், ஆடம்பர வில்லாக்கள் மற்றும் மத்திய கிழக்கு நாட்டின் முதல் சிர்க் டு சோலில் நிகழ்ச்சி ஆகிய அம்சங்களுடன் மனிதர்களால் உருவாக்கப்படும் மார்ஸா அல் அரப் மற்றும் புர்ஜ் அல் அரப் என்ற இரண்டு புதிய தீவுகளை £ 1.3 பில்லியன் செலவில் கட்டமைக்க துபாய் திட்டமிட்டுள்ளது.

## மே – 20

- அமைதி நோக்கங்களுக்காக மற்ற நாடுகளிடம் இருந்து பெறப்படும் அணுசக்திக்கான மூலக்கூறுகளை அணு ஆயுதம் தயாரிக்க இந்தியா தவறாகப் பயன்படுத்துகிறது என்று பாகிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

- ஈரானில் புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப் பதிவு அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.

- அமைச்சரவையில் புதியதாக அறிவிக்கப்பட்ட இரண்டு அமைச்சர்கள் நியமனத்துக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்து உத்தரவிட்டுள்ளார்.

- சிரியாவின் கிழக்குப் பகுதியில் ஜோர்டானையொட்டிய எல்லைப் பகுதியில் சென்று கொண்டிருந்த ராணுவ வாகனங்கள் மீது அமெரிக்கப் போர் விமானங்கள் வான்வழித் தாக்குதல் நிகழ்த்தின.

- ஈரான் மேற்கொண்டு வரும் அணு ஆராய்ச்சி, ஏவுகணை ஆராய்ச்சி திட்டங்களின் மறு ஆய்வையடுத்து, அந்த நாட்டின் மீது அமெரிக்கா புதிய தடைகளை விதித்தது.

- தென் சீனக் கடல் பகுதியில் இந்தியா, சிங்கப்பூர் கடற்படை கூட்டாக இணைந்து 7 நாள் நடத்தவுள்ள போர் பயிற்சி மே.18ம் தேதி தொடங்கியது.

## மே – 21

- 'வான்னா கிரை வைரஸ்'சின் முதல் பதிப்பின் சில குறியீடுகள், வடகொரியாவின் லாசரஸ் குரூப் 'புரோகிராம்'களில் காணப்பட்டதாக இணைய பாதுகாப்பு நிறுவனங்கள் கண்டறிந்தன. இந்நிலையில் 'வான்னாகிரை' வைரஸ் தாக்குதலில் வடகொரியாவுக்கு தொடர்பு இருக்கக்கூடும் என்று இணைய பாதுகாப்பு ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

- மீண்டும் நான்காண்டுகளுக்கு அதிபராக தேர்வு செய்யப்பட்ட ரூஹானி "சீர்குலைவு சக்திகளுக்கு" கொடுத்து வரும் ஆதரவை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ரெக்ஸ் டில்லர்சன் கூறியுள்ளார்.

- சவுதி, இஸ்ரேல் உள்பட பல்வேறு நாடுகளுக்கு அமெரிக்க அதிபர் 8 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

- பாகிஸ்தானில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள இந்திய கடற்படை முன்னாள் அதிகாரி குல்பூஷன் ஜாதவுக்கு, இந்தியத் தூதரகம் உதவ அனுமதிக்கும்படி சர்வதேச நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என்று பாகிஸ்தான் உத்தரவிட்டுள்ளது.

- இந்தியா-சிங்கப்பூர் நாடுகளின் கடற்படைகள் கூட்டாக இணைந்து, தென் சீனக் கடற்பகுதியில் வருடாந்திர ஒத்திகையில் ஈடுபட்டுள்ளன. இந்த ஒத்திகையை விரைவில் நடத்துவதாக இந்திய கடற்படை முடிவு செய்துள்ளது.

- அமெரிக்காவின் "இன்டெல்" நிறுவனம் நடத்திய பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் போட்டியில், சுற்றுச்சூழல் பொறியியல் பிரிவில் இந்தியாவைச் சேர்ந்த பிரசாத் ரங்கநாதன் என்ற மாணவர் வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு சர்வதேச அறிவியல் விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மே – 22

- வடகொரியா மீண்டும் அதிரடியாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை நடத்தியது. இந்த ஏவுகணை சோதனை வெற்றி பெற்றுள்ளதாக வட கொரியா அறிவித்துள்ளது.

- ஆப்கானிஸ்தானில் ஜாபூல் மாகாணத்தில் உள்ள ஷாக் ஜாய் மாவட்டத்தில் பல்வேறு போலீஸ் சோதனை சாவடிகளை குறிவைத்து தலிபான் பயங்கரவாதிகள் தாக்குதல்களை நடத்தி உள்ளனர்.

- லண்டன் நகரில் நடந்த மாநகராட்சி தேர்தலில் இந்தியாவைச் சேர்ந்த ரோஹனா என்ற பெண் மாநகராட்சி உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- பணியின் போது உயிர்நீத்த அமைதிப் படையினருக்கு ஐ.நா சபை

ஆண்டுதோறும் விருது வழங்கி வருகிறது. அதன்படி காங்கோவில் இந்திய அமைதிப் படையில் பணியாற்றி உயர்நீத்த பிரிஜேஸ் தாப்பா மற்றும் லெபனானில் பணியாற்றிய ரவிக்குமார் ஆகியோருக்கு ஐ.நா அமைதிப் படையின் சர்வதேச தினமான 24ம் தேதி டேக் ஹம்மர்ஸ்க்ஜோல்ட் விருது வழங்கப்பட உள்ளது.

- ஆப்கானிஸ்தான், இலங்கை, மியான்மர் உள்ளிட்ட நாடுகளிலிருந்து ஆபத்தான கடல் பயணம் மேற்கொண்டு ஆயிரக்கணக்கோர் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்து வருகின்றனர். இந்நிலையில் முறையான காரணம் இல்லாமல் ஆஸ்திரேலியாவுக்கு வந்துள்ள சுமார் 7500 போலி அகதிகளை வெளியேற்ற அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

- அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் (நாசா) தனது அமைப்பு கண்டுபிடித்துள்ள புதிய நுண்ணுயிரிக்கு இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் பெயரைச் சூட்டி கௌரவித்துள்ளது.

## மே – 23

- வட கொரியா மேற்கொண்ட ஏவுகணை சோதனை வெற்றி பெற்றதையொட்டி, சக்தி வாய்ந்த புதிய ஏவுகணைகளை உற்பத்தி செய்ய அந்நாட்டின் தலைவர் கிம் ஜாங் உத்தரவிட்டுள்ளார்.

- மவுண்ட் எவரெஸ்ட்டில் இருந்த ஹிலாரி ஸ்டெப் என்ற 12 மீட்டர் அபாய நெடும்பாறை தற்போது இல்லை என்று எவரெஸ்ட் மலையேற்ற நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

- அணு ஆயத பரவல் தடைச் சட்டத்தில் கையெழுத்திடாத நிலையில் இந்தியா அணு எரிபொருள் விநியோக நாடுகள் குழுவில் இணைவதை சீனா அனுமதிக்காது என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

- தீவிரதத்தால் அதிகம் பாதித்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

- அமெரிக்க, ஐநா மற்றும் உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. இந்நிலையில் வடகொரியாவின் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக நடந்திருப்பதாகவும், அந்த ஏவுகணை உடனடியாக ராணுவத்தில் சேர்க்க தயாராக இருப்பதாகவும் அந்நாட்டு அரசு உறுதி செய்துள்ளது.

## மே – 24

- நேபாள நாட்டின் பிரதமர் புஷ்பகமல் பிரசண்டா தனது பதவியை திடீரென ராஜினாமா செய்தார்.

- வடகொரியா அடுத்தடுத்து சோதனைகளை நடத்தி வருகிறது. இந்நிலையில்

புதிதாக அணு ஆயுத சோதனை நடத்தவும் அந்த நாடு ஏற்பாடு செய்து வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

- இஸ்ரேல் நாட்டுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஈரான் தீவிரவாதிகளுக்கு பயிற்சி அளிக்கிறது என்றும், அந்நாட்டை அணு ஆயுதங்களை வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது என்றும் கூறியிருந்தார். அதற்கு தேவை ஏற்பட்டால் எங்கள் நாடு ஏவுகணை சோதனைகளை நடத்தும் என்று ஈரான் அதிபர் கூறினார்.

- அமெரிக்க அதிபர் சவூதி அரேபியா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே அமைதி நிலவச் செய்வதே எனது குறிக்கோள் என்று தெரிவித்தார்.

- உரிய ஆவணங்கள் இல்லாமல் பாகிஸ்தானில் கைது செய்யப்பட்ட இந்தியர் ஒருவருக்குத் தேவையான தூதரக உதவிகளை வழங்க அனுமதிக்குமாறு அந்நாட்டு அரசிடம் இந்திய வெளியுறவுத் துறை வலியுறுத்தியுள்ளது.

- வான்னாகிரை இணைய வைரஸையடுத்து, அதைவிட பயங்கரமான ''இடர்னல்ராக்ஸ்'' என்ற இணைய வைரஸ் கணினிகளைத் தாக்கும் அபாயம் உள்ளதாக அமெரிக்காவின் இதழான ஃபார்ச்சூன் தெரிவித்துள்ளது.

**மே – 25**

- இந்தியாவின் வளர்ச்சி உதவியை கணிசமாகக் குறைக்க டிரம்ப் நிர்வாகம் பரிந்துரை செய்துள்ளது.

- பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து 800 கி.மீ தொலைவில் உள்ள மாராவிவில் ஐஎஸ் ஆதரவு தீவிரவாதிகள் 100 பேர் ஊடுருவியுள்ளனர். இதைத் தொடர்ந்து அவர்களை வெளியேற்றுவதற்காக அப்பகுதியில் அதிபர் ரோட்ரிகா ராணுவ ஆட்சியை பிரகடனப்படுத்தி உள்ளார்.

- ஆசியாவிலேயே முதல் முறையாக ஓரினச் சேர்க்கையாளர் சட்டப்படி திருமணம் செய்து கொள்ள அந்நாட்டு நீதிமன்றம் அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

- வடகொரியா புக்குசோங்-2 என்ற ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இந்நிலையில் தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வரும் வடகொரியா தனது போக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும் இல்லையேல் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகள் அதிகரிக்கப்படும் என்று ஐநா எச்சரித்துள்ளது.

- லஷ்கர் இ தொய்பா, தலிபான், ஐஎஸ், அல்காய்தா, ஹக்கானி நெட்வொர்க் போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவி கிடைப்பதை தடுப்பதற்காக அமெரிக்கா மற்றும் 6 வளைகுடா நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் கையெழுத்தானதாக அமெரிக்க நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## மே – 26

- சிங்கப்பூரில் ஒரு வாரம் நடைபெற்ற 2017ம் ஆண்டுக்கான இந்திய –சிங்கப்பூர் கடற்படை கூட்டுப்பயிற்சி மே 24ல் நிறைவு பெற்றது. இந்தப் பயிற்சியில் சிங்கப்பூரின் எ.ஃ.ப்-15 விமானங்கள் முதல் முறையாகப் பங்கேற்றன. கடந்த 1994ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இந்த கூட்டுப் பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது.24வது முறையாக இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூட்டுப்பயிற்சி சிங்கப்பூரின் ஆர்எஸ்எஸ் சிங்கப்பூரா –சாங்கி கடற்படைத் தளத்திலும், தென்சீனக்கடல் பகுதியிலும் மேற்கொள்ளப் பட்டது. இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த பயிற்சியில் சிங்கப்பூரின் ஹெலிகாப்டருடன் கூடிய ஆர்எஸ்எஸ் ஃபர்மிடபிள், ஏவுகணை வீசும் திறன் கொண்ட ஆர்எஸ்எஸ் விக்டரி ஆகிய போர்க் கப்பல்கள் பங்கேற்றன.இந்திய தரப்பில், ஐஎன்எஸ் சஹ்யாத்ரி, ஐஎன்எஸ் சிவாலிக், ஐஎன்எஸ் காமோத்ரா, ஐஎன்எஸ் ஜோதி ஆகிய கப்பல்களும் பி8-1 ரக கண்காணிப்பு விமானமும் ஈடுபடுத்தப்பட்டன.

- பாகிஸ்தானுக்கு அளித்து வரும் ராணுவ உதவித் தொகையைக் குறைக்க அதிபர் டிரம்ப் தலைமையிலான அரசு திட்டமிட்டுள்ளது. பயங்கரவாதத் தடுப்பு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் கூட்டணி நாடுகள் மேற்கொண்ட செலவுகளை அந்நாடுகளுக்கு அமெரிக்கா திருப்பி அளித்து வருகிறது. “கூட்டுப்படை ஆதரவு நிதி” என்று அறியப்படும் இந்த நிதிக்கு மத்திய பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

- கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை நேபாளப் பிரதமாராகப் பொறுப்பு வகித்த பிரசாண்டா, 2016ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு இரண்டாவது முறையாக நேபாளப் பிரதமராகப் பொறுப்பேற்றார். இதன் மூலம் இரண்டு முறை பிரதமரான மாவோயிஸ்ட் தலைவர் என்ற பெருமையை பெற்றார். தற்போது கூட்டணிக் கட்சிகளுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், தனது பதவியை ராஜினாமா செய்தார்.

- காங்கோ ஜனநாயகக் குடியரசு நாட்டின் கசாய் பகுதிக்கு உணவுப் பொருள்களை வழங்குவது தடைப்பட்டுள்ளதால், அங்கு 4 லட்சம் குழந்தைகள் பட்டினியால் சாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யுனிசெ.ஃப் தெரிவித்துள்ளது.

- ஓரினச் சேர்க்கையாளர்கள் இடையேயான திருமணத்துக்கு அங்கீகாரம் வழங்க தைவான் நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது அமலுக்கு வந்தால் ஓரினத் திருமணங்களை சட்டபூர்வமாக்கிய முதல் ஆசிய நாடு என்ற பெருமையை தைவான் பெறும்.

- சாக்லெட்டை தங்கள் தினசரி உணவுடன் சேர்த்துக் கொண்டவர்களின் ரத்த ஓட்டம் சீரானதாகவும், மேலும் இதயத்திலுள்ள அதிகப்படியான கொழுப்புகளைக் குறைக்கும் பணியிலும் சாக்லெட் ஈடுபடுவது லண்டன் மருத்துவ ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வு 50 முதல் 64 வயதுள்ள சுமார் 55000

பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் வெளியிடப் பட்டுள்ளது. இதன் மூலம் மாரடைப்பு இதயம் சார்ந்த நோய்களுக்கு சாக்லெட் மருந்தாக மாறியுள்ளதாக விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

- மத்திய கிழக்கு நாடுகளில் புகழ்பெற்ற செய்தி நிறுவனமான கத்தாரைத் தலைமையடமாக கொண்டு செயல்படும் அல்-ஜசீரா உள்பட 21 செய்தி நிறுவனங்களில் இணையதளங்களை எகிப்து தடை செய்துள்ளது.

## மே – 27

- பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தினால் அமெரிக்காவின் பொருளாதார வளர்ச்சி முடங்கும் நிலை ஏற்படும் என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

- அமெரிக்க மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமுல் தாப்பர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் அவரது நியமனத்துக்கு அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் செனட் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

- சிலி நாட்டில் அடகாமா பாலைவனத்தில் உலகின் மிகப்பெரிய தொலைநோக்கி அமைக்கும் பணி துவங்கியது. இத்தொலைநோக்கி அடகாமா பாலைவனத்தின் மத்தியிலுள்ள 3000 மீட்டர் உயரமுள்ள மலையில் அமைக்கப்படுகிறது. மேலும் இது 2024ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வரும் என்று சிலி நாட்டு அதிபர் மிஷேலே பாஷேலெட் கூறியுள்ளார்.

- அமெரிக்காவில் கிடங்குகளில் புதைக்கப்பட்டுள்ள அணுக்கழிவுகளால் ஆபத்து ஏற்படலாம் என்று அறிவியல் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

- சூரிய மண்டலத்தின் மிகப்பெரிய கோளான ஜூபிடர் எனும் வியாழன் கிரகத்தை ஆராய்வதற்காக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு நாசா கடந்த 2011ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5ம் தேதி ஜூனோ என்ற விண்கலத்தை 'அட்லஸ் வி-551' ராக்கெட் மூலம் விண்ணில் ஏவியது. இந்நிலையில் வியாழன் கிரகத்தில் சூறாவளி காற்றும், அமோனியா ஆறும் உள்ளது என நாசா தெரிவித்துள்ளது.

- 2017ம் ஆண்டுக்கான இந்திய-சிங்கப்பூர் கடற்படை கூட்டுப் பயிற்சி புதன் கிழமை நிறைவடைந்தது. இந்தப் பயிற்சியில் ஹெலிகாப்டருடன் கூடிய ஆர்எஸ்எஸ் ஃபர்மிடபிள், ஏவுகணை வீசும் திறன் கொண்ட ஆர்எஸ்எஸ் விக்டரி ஆகிய போர்க்கப்பல்கள் பங்கேற்றன.

## மே – 28

- தெற்காசியாவில் இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றம் நிலவுகிறது. தற்போதைய பதற்றத்தை தணிக்க இரு நாடுகளுக்கும் இடையே சமரச பேச்சுவார்த்தை நடத்த தயார் என ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

- அமெரிக்காவில் பிஎச்டி படிக்கும் மாணவர்களுக்கு குடியேற்ற உரிமையுடன் எச் 1 பி விசா வழங்க புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

- சீனாவின் மிகப்பெரிய இ-காமர்ஸ் நிறுவனமான ஜேடி.காம், பின் தங்கிய கிராமப்புறங்களில் பொருட்களை சப்ளை செய்ய ஆளில்லா விமானங்களை பயன்படுத்தி வருகிறது. தற்போது கிலோ கணக்கில் பொருட்களை கொண்டு செல்லும் இந்த ஆளில்லா விமானங்கள், 1000 கிலோவுக்கு அதிகமான வேளாண் பொருட்களை கொண்டு செல்லும் வகையில் மேம்படுத்த இருப்பதாக அந்நிறுவனம் கூறியுள்ளது.

- உலகின் முன்னணி விமான சேவை நிறுவனமான பிரிட்டிஷ் ஏர்வேஸின் கணினி முடக்கத்தால் லண்டன் ஹீத்ரு, காட்விக் மற்றும் பெல் ஃபாஸ்ட் விமான நிலையங்களிலிருந்து புறப்பட வேண்டிய விமானங்கள் புறப்பட முடியாமல் நிறுத்தப்பட்டன.

- இணையதளம் மூலமாகவும் சமூக வலைதளங்கள் மூலமாகவும் பயங்கரவாதக் கருத்துகள் பரவுவதை இணையதள சேவை நிறுவனங்கள் தடுக்க வேண்டும் என்று ஜி7 நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

- தென்சீனக் கடல் பகுதியில் பறந்த அமெரிக்க உளவு விமானத்தை சீன போர் விமானங்கள் இடைமறித்து விரட்டியுள்ளன.

## மே – 29

- ஈரானிய அரசு ஆதரவு பெற்ற ஷியா துணை இராணுவம் இஸ்லாமிய அரசுப்படைகளை பின் தள்ளி மேற்கு மோசூல் நகரில் முன்னேறி ஈராக் எல்லையை சென்றடைந்தது.

- இந்திய கடற்படை முன்னாள் அதிகாரி குல்பூஷன் ஜாதவை விரைவில் தூக்கில் போட வேண்டும் என்று பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தாக்குதல் செய்துள்ளது.

- விமானங்களில் மடிக்கணினி எடுத்துச் செல்வதற்கு அமெரிக்கா விரைவில் தடை விதிக்கும் என்று உள்நாட்டு பாதுகாப்பு செயலர் ஜான் கெல்லி தெரிவித்துள்ளார்.

- கம்ப்யூட்டர் கோளாறு காரணமாக பிரிட்டிஷ் ஏர்வேஸ்-இன் அனைத்து சேவைகளையும் இயக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதால் எவ்வித பணிகளையும் மேற்கொள்ள முடியாது என விமான போக்குவரத்து நிபுணரான ஜூலியன் பிரே தெரிவித்துள்ளார்.

- பிலிப்பைன்ஸில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதியில் பதுங்கியுள்ள இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்து வரும் மோதலில் 61 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக

அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மே – 30

- ஆன்லைன் சேவை நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்களை பெற சீன அரசு தடை விதித்துள்ளது. சைபர் சட்டங்களில் பெரும் மாற்றங்களை சீன அரசு கடந்த சில மாதங்களாக மேற்கொண்டு வருகிறது. இந்த மாற்றங்கள் உள்ளடக்கிய திருத்தப்பட்ட சைபர் பாதுகாப்பு சட்டத்தை சீன அரசு நிறைவேற்றியுள்ளது. இந்த சட்டம் ஜூன் 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

- ஜெர்மனி, ஸ்பெயின், ரஷியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு பிரதமர் மோடி 6 நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அதன் முதல் கட்டமாக மே 29, ஜெர்மனி தலைநகர் பெர்லினை சென்றடைந்தார்.

- ஐ.நா தடைகளை மீறி வடகொரியா புதிய ஏவுகணை சோதனையில் நேற்று ஈடுபட்டது. சுமார் 450 கிமீ தூரம் பறந்த அந்த ஏவுகணை ஜப்பான் கடல்சார் பொருளாதார எல்லைப் பகுதிக்குள் விழுந்ததால் பதற்ற நிலை அதிகரித்துள்ளது. கடந்த 3 வார கால அளவில் அந்நாடு மேற்கொள்ளும் மூன்றாவது ஏவுகணை சோதனை இது என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்தோனேசியாவில் பலுவின் தென்மேற்குப் பகுதியான சுலவேசி தீவில் 80 கிமீ தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.9 அலகுகளாகப் பதிவானது.

- மான்செஸ்டர் தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு பிரிட்டனில் 23 ஆயிரம் தீவிரவாதிகள் பதுங்கி இருக்கலாம் என பிரிட்டன் உளவு அமைப்பு தெரிவித்துள்ளது.

- வங்க கடலில் உருவான மோரா புயல் 117 கி.மீ வேகத்தில் பலத்த காற்றுடன் வங்கதேச கடற்கரையை தாக்கியுள்ளது.

## மே – 31

- ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள இந்திய தூதரகம் அருகே சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததாக ஆப்கானிஸ்தான் ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளது.

- உலக நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனை மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடிய ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது. இந்நிலையில் வடகொரியாவை சமாளிக்கும் வகையில் ஏவுகணைகளை இடைமறித்து தாக்கி அழிக்கும் பாதுகாப்பு பரிசோதனையை அமெரிக்கா வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

- ஆன்லைன் சேவை நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட

தகவல்களை பெற சீன அரசு தடை விதித்துள்ளது. மேலும் ஜூன் 1ம் தேதி அமல்படுத்தப்பட உள்ள புதிய சட்டத்தின் மூலம் இந்த விதி அமலுக்கு வருகிறது.

- வெள்ளை மாளிகையில் தகவல்தொடர்பு இயக்குநராக பணிபுரிந்து வந்த மைக் டப்கி தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

- இந்தியா-ஜெர்மனி இடையே இணையவழிக் கொள்கை, வளர்ச்சி முன்முயற்சிகள், நீடித்த நகர வளர்ச்சி, திறன் மேம்பாடு, ரயில்வே பாதுகாப்பு, தொழிற்பயிற்சியை மேம்படுத்துதல் உள்ளிட்ட துறைகளில் 12 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

- பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறை பயணமாக ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். முதல்கட்டமாக நேற்று முன்தினம் ஜெர்மனி தலைநகர் பெர்லினை சென்றடைந்தார்.

- வங்க கடலில் உருவான மோரா புயல் கோக்ஸ் பஜார்-சிட்டகாங்க் கடற்பகுதியில் கரையை கடந்தது. மேலும் இந்த புயல் வடக்கு நோக்கி நகரும் என வங்கதேச வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## விளையாட்டு செய்திகள்

### மே – 1

- 26வது அஸ்லான் ஷா ஹாக்கி போட்டி மலேசியாவின் இபோக் நகரில் நடந்து வருகிறது. இதில் கடைசி முடிவில் 5 முறை சாம்பியனான இந்திய அணி 30 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வீழ்த்தியது. இந்திய நட்சத்திர வீரர் 27 வயதான எஸ்.வி.சுனிலுக்கு இது 200வது சர்வதேச போட்டியாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

- இந்த ஆண்டுக்கான பார்முலா 1 கார்பந்தயம் உலகம் முழுவதும் 20 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 4வது சுற்றான ரஷிய கிராண்ட்பிரி பந்தயம் அங்குள்ள சோச்சி நகரில் நேற்று நடந்தது. 4 சுற்று முடிவில் செபாஸ்டியன் வெட்டல் 86 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஹாமில்டன் 73 புள்ளிகளுடம் 2வது இடத்திலும், வால்டெரி போட்டாஸ் 63 புள்ளிகளுடன் 3 வது இடத்திலும் உள்ளனர். 5வது சுற்று போட்டி வருகிற 14ம் தேதி ஸ்பெயினில் நடக்கிறது.

- 19வது ஆசிய தனிநபர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் சென்னையைச் சேர்ந்த தீபிகா பலிக்கல், ஜோஸ்னா சின்னப்பாவை வீழ்த்தி மகுடம் சூடி புதிய சரித்திரம் படைத்தார்.

- டலஹாஸீ ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில்

இந்தியாவின் லியாண்டர் பயஸ் அமெரிக்காவின் ஸ்காட் லிப்ஸ்கி ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.

- புதுச்சேரியில் நடைபெற்ற தென் மண்டல சீனியர் வாலிபால் போட்டியின் ஆடவர் பிரிவில் தமிழகமும், மகளிர் பிரிவில் கர்நாடகமும் சாம்பியன் பட்டம் வென்றன.

## மே – 2

- சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடர் வரும் ஜுன் 1ம் தேதி லண்டனில் நடைபெற உள்ள நிலையில் சர்வதேச ஒருநாள் போட்டிக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி நேற்று வெளியிட்டது. இதில் இந்திய அணி 5 புள்ளிகள் பெற்று 3-வது இடத்துக்கு முன்னேறி உள்ளது.

- அஸ்லான்ஷா ஹாக்கி தொடரில் இந்திய அணி தனது 3வது ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ஆஸ்திரேலியாவுடன் இன்று மோதுகிறது.

- ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் மும்பை அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் பெங்களூருவை வீழ்த்தி 8வது வெற்றியை அடைந்தது.

- சிலி ஓபன் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டி சான்டியாகோவில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டியில் இந்திய வீரர் சவுமியஜித் கோஷ் சக நாட்டு வீரர் அந்தோணி அமல்ராஜை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் சர்வதேச டேபிள் டென்னிஸ் சங்க உலக டூர் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற 3வது இந்திய வீரர் என்ற பெருமையை பெற்றார்.

## மே – 3

- ஐசிசி-யின் டி20 தரவரிசை பட்டியலில் இந்தியாவுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. 2007ல் நடைபெற்ற டி20 உலகக் கோப்பையில் சாம்பியன் பட்டத்தை வென்ற இந்திய அணி 6 புள்ளிகளை இழந்து 4-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

- இந்தியா, தென் ஆப்பிரிக்கா, அயர்லாந்து, ஜிம்பாப்வே மகளிர் அணிகள் மோதும் ஒருநாள் போட்டித் தொடர், தென் ஆப்பிரிக்காவின் பாட்செப்ஸ்ட்ரும் நகரில் மே 7ம் தேதி தொடங்கி நடைபெற உள்ளது. ஒவ்வொரு அணியும் மற்ற 3 அணிகளுடன் தலா 2 முறை ரவுண்ட் ராபின் லீக் சுற்றில் மோதவுள்ளன.

- ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீரர்கள் சிவ தாபா, சுமித் சங்வான் ஆகியோர் தங்களது எடைப் பிரிவில் கால்இறுதிச் சுற்றுக்கு முன்னேறினர்.

- கால்பந்து வீரர்கள் ஜீஜீ லால்பெக்லுவா, குர்பிரீத் சாந்து, வீராங்கனை ஒய்னம் பெம்பெம் தேவி ஆகியோருக்கு அர்ஜுனா விருதுகள் வழங்க அகில இந்திய

கால்பந்து சம்மேளனம் (ஏஐஎ∴ப்எ∴ப்) பரிந்துரை செய்துள்ளது.

➢ உஸ்பெகிஸ்தானில் நடைபெற்று வரும் ஆசிய பாக்சிங் சாம்பியன்ஷிப் தொடரின் கால்இறுதியில் விளையாட இந்தியாவின் விகாஸ் கிருஷ்ணன், கவுரவ் பிதூரி, அமித் பான்கல் ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

## மே – 4

➢ ஆசிய சாம்பியன்ஷிப் குத்துச்சண்டை போட்டியில் அரை இறுதிக்கு முன்னேறி உள்ள இந்திய வீரர்களான விகாஸ் கிருஷ்ணன், சிவா தபா, சுமித் சங்வான், அமித் பன்கல் ஆகியோர் வரும் ஆகஸ்ட் மாதம் ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் நடைபெற உள்ள உலக சாம்பியன்ஷிப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளனர்.

➢ லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான 9வது அகில இந்திய ஹாக்கி போட்டி, கோவில்பட்டியில் நாளை (மே 5) தொடங்குகிறது. இந்த தொடரில் கோவில்பட்டி லட்சுமி விளையாட்டு அகாடமி உள்பட 16 அணிகள் பங்கேற்கின்றன.

➢ சாம்பியனஸ் லீக் கால்பந்து தொடரின் முதல் கட்ட அரை இறுதியில் ரியல் மாட்ரிட் அணி அட்லெடிகோ மாட்ரிட் அணியை வீழ்த்தியது. ரியல் மாட்ரிட் அணியின் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ ஹாட்ரிக் கோல் அடித்து அசத்தினார்.

➢ கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மிக உயரிய விம்பிள்டன் டென்னிஸ் போட்டி ஜூலை 3ம் தேதி முதல் 16ம் தேதி வரை லண்டனில் நடக்கிறது. இந்த ஆண்டுக்கான மொத்த பரிசுத்தொகை ரூ.29 கோடி உயர்த்தப்பட்டு ரூ.262 கோடி வழங்கப்படும் என்று போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

➢ ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்றிரவு நடந்த ஆட்டத்தில் கொல்கத்தாவை வீழ்த்தி புனே சூப்பர் ஜெயன்ட் அணி 7வது வெற்றியை பதிவு செய்தது.

➢ 19வயதுக்குட்பட்டோருக்கான மாநில அளவிலான செஸ் போட்டி ஏப்ரல் 29 முதல் தொடங்கியது. இதில் மே 2 ம் தேதி நடைபெற்ற 9வது சுற்றின் முடிவில் மகளிர் பிரிவில் கோவையைச் சேர்ந்த பிரியங்கா என்பவரும், ஆடவர் பிரிவில் சென்னையைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவரும் சாம்பியன் பட்டம் வென்றனர்.

➢ சென்னையில் உள்ள ஹிந்துஸ்தான் பல்கலைக்கழகத்தில் விளையாட்டு ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கை நடைபெற உள்ளது. அதற்கான தேர்வு முகாம் வரும் 5,6 ஆகிய தேதிகளில் சென்னை படூரில் உள்ள பல்கலைக்கழக வளாகத்தில் காலை 9.30 மணி முதல் நடைபெறுகிறது.

➢ தென்கொரியாவின் ஜிம்சியோன் நகரில் நடைபெற்று வரும் ஜிம்சியோன் ஏடிபி சேலஞ்சர் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் ராம்குமார் வெற்றி பெற்று

அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

## மே – 5

- இந்திய கிரிக்கெட் அணியின் புதிய சீருடையை மும்பையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பிசிசிஐ தலைமைச் செயல் அதிகாரி ராகுல் ஜோஹ்ரி அறிமுகம் செய்துவைத்தார். வரும் ஜூன் 1ம் தேதி இங்கிலாந்தில் நடைபெற உள்ள ஐசிசி சாம்பியன் டிராபி தொடரில் இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள், இந்த புதிய சீருடை அணிந்து விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

- எஸ்டோரில் ஓபன் டென்னிஸ் தொடரின் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், பிரேஸின் ஆன்ட்ரே சா மற்றும் இந்தியாவின் திவிஜ் சரண், புரவ் ராஜா ஜோடி கால் இறுதிக்கு முன்னேறியது.

- சீனாவில் நடைபெற்ற சர்வதேச பாட்மிண்டன் தரவரிசையில் இந்திய வீராங்கனைகளான பி.வி.சிந்து 4வது இடத்துக்கும், சாய்னா நெவால் 9வது இடத்துக்கும் பின்தங்கி உள்ளனர்.

- உஸ்பெகிஸ்தான் தலைநகர் தாஷ்கண்டில் நடைபெற்று வரும் ஆசிய குத்துச் சண்டை போட்டியின் காலிறுதியில் இந்திய வீரர் சதீஷ் குமார் கஜகஸ்தானின் கம்ஷிபெக்கிடம் தோல்வியடைந்தார்.

- சர்வதேச கால்பந்து தரவரிசையில் இந்திய அணி 100 வது இடத்தைப் பிடித்துள்ளது.

- அஸ்லான் ஷா கோப்பை ஹாக்கிப் போட்டியில் இன்று நடைபெறும் லீக் ஆட்டத்தில் இந்தியாவும், மலேசியாவும் மோதுகின்றன.

- இந்திய குத்துச்சண்டை வீராங்கனைகள் சவீதி பூரா (81 கிலோ எடைப் பிரிவு), சோனியா (57 கிலோ), சர்ஜுபால தேவி (51 கிலோ) ஆகியோரின் பெயர்களை இந்திய குத்துச்சண்டை சம்மேளனம் அர்ஜுனா விருதுக்கு பரிந்துரைத்துள்ளது.

## மே – 6

- ஆசிய குத்துச்சண்டை போட்டியில் இந்திய வீரர்களான சிவா தாபா, சுமித் சங்வான் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினர்.

- மலேசியாவில் நடைபெறும் சுல்தான் அஸ்லான் ஷா ஹாக்கி தொடரில் இந்தியா மலேசியாவிடம் தோல்வியடைந்தது.

- குஜராத்துக்கு எதிராக 9 சிக்சருடன் 97 ரன்கள் விளாசிய டெல்லி வீரர் ரிஷாப் பான்ட்டை சச்சின் தெண்டுல்கர் பாராட்டி புகழாரம் சூட்டினார்.

- தமிழ்நாடு பிரீமியர் லீக் (டி.என்.பி.எல்) 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த

ஆண்டு வெற்றிகரமாக நடந்தது. இந்த ஆண்டுக்கான 2-வது தமிழ்நாடு பிரீமியர் லீக் போட்டி ஜூலை மற்றும் ஆகஸ்டு மாதங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் 2-வது தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் வீரர்கள் பதிவுக்கான விண்ணப்பம் இன்று முதல் வினியோகம் செய்யப்படுகிறது.

- பன்னாட்டு கிரிக்கெட் வாரியம் கிரிக்கெட் உலகக்கோப்பைக்கான பரிசுத் தொகையை பத்து மடங்கு அதிகரிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

## மே – 7

- ஐ.பிஎல் கிரிக்கெட்டில் ஐதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர் உனட்கட்டின் ‘ஹாட்ரிக்’ சாதனையால் புனே அணி 12 ரன்கள் வித்தியாசத்தில் 8-வது வெற்றியை பெற்றது.

- ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இந்திய அணி தேர்வு நாளை நடைபெறக்கூடும் என தகவல்கள் வெளியாகி உள்ளது.

- மலேசியாவில் உள்ள இபோவில் நடைபெற்ற வெண்கலப் பதக்கத்திற்கான சுல்தான் அஸ்லான் ஷா ஹாக்கி போட்டியில் நியூசிலாந்து அணியை இந்திய அணி வென்று 3-ம் இடம் பிடித்தது.

- ஐ.பி.எல் கிரிக்கெட்டில் டெல்லியை 66 ரன்களில் சுருட்டிய மும்பை இந்தியன்ஸ் அணி அதிகாரப்பூர்வமாக முதல் அணியாக பிளே-ஆப் சுற்றுக்குள் அடியெடுத்து வைத்தது.

- புதுச்சேரி இந்திரா காந்தி விளையாட்டு மைதானத்தில் கால்பந்து போட்டிகள் கடந்த 2ம் தேதி தொடங்கி நடந்து வருகின்றன. இன்று இறுதிப் போட்டி நடக்க இருக்கிறது. இதில் ஆண்கள் பிரிவில் புதுவை நகராட்சி அணி, மாகி அணி மோதுகின்றன. பெண்கள் பிரிவில் உழவர்கரை நகராட்சி அணி வில்லியனூர் அணி மோதுகின்றன.

- ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் நேற்று நடந்த ஆண்களுக்கான 60 கிலோ உடல் எடைப் பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீரர் ஷிவதபா வெள்ளிப்பதக்கம் வென்றார். மேலும் ஆசிய குத்துச்சண்டையில் தொடர்ச்சியாக 3 முறை பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

## மே – 8

- ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் பெங்களூருவில் நேற்று நடந்த ஆட்டத்தில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின. இதில் 6 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணி வெற்றியைப் பெற்றது.

- சாம்பியன்ஸ் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் ஜுன் 1ம் தேதி தொடங்குகிறது. இப்போட்டியில் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலில் முதல் 8 இடங்களில் இருக்கும் சர்வதேச அணிகள் கலந்து கொள்கின்றன. இதில் பங்கேற்கும் விராட் கோலி தலைமையிலான இந்திய அணியை பிசிசிஐ இன்று வெளியிட்டுள்ளது.

- கோவில்பட்டியில் நடைபெற்று வரும் லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான 9வது அகில இந்திய ஹாக்கி போட்டியின் 3 வது நாளில் ஒடிஸா அணி வெற்றி பெற்றது.

- ஸ்பெயினில் நடைபெற்று வரும் லா லிகா கால்பந்து சாம்பியன்ஷிப் லீக் ஆட்டத்தில் பார்சிலோனா அணி வில்லாரியல் அணியை வீழ்த்தியது.

- அஸ்லான் ஷா கோப்பை இறுதிப்போட்டியில் இங்கிலாந்து அணி 43 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

- அமெரிக்காவை சேர்ந்த முன்னாள் நீச்சல் ஜாம்பவானான அடோல்ப் கீபெர் நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

## மே – 9

- இந்தியன் பவுண்டேசன் பனிச்சறுக்கு மற்றும் ரோலர் ஸ்கேட்டிங் கழகம் சார்பில் ஹிமாச்சல பிரதேசம் சிம்லாவில் 6-வது தேசிய அளவிலான ரோலர் ஸ்கேட்டிங் போட்டிகள் கடந்த 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை நடைபெற்றன. இதில் கும்பகோணத்தைச் சேர்ந்த தர்னேஷ் மற்றும் விஸ்வலட்சுமி முதல் மற்றும் இரண்டாம் இடங்களைப் பிடித்து சாதனை படைத்தனர்.

- சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டியில் விளையாடவுள்ள 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான முகமது சமி, தொடக்க வீரர் ரோஹித் சர்மா, முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் ஆகியோர் மீண்டும் அணிக்குத் திரும்பியுள்ளனர்.

- கோவில்பட்டியில் நடைபெற்று வரும் லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான 9வது அகில இந்திய ஹாக்கி போட்டியின் 4வது நாள் ஆட்டத்தில் பெங்களுரு, ஒடிஸா, செகந்திராபாத் அணிகள் வெற்றி பெற்றன.

- பிரேசில் ஓபன் டேபிள் டென்னிஸ் போட்டியின் இறுதிச் சுற்றில் இந்தியாவைச் சேர்ந்த அமல்ராஜ் தோல்வியடைந்தார்.

- தஞ்சாவூர் கமலா சுப்பிரமணியம் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் 17 வயதுக்குள்பட்டோருக்கான 28வது மாநில அளவிலான செஸ் போட்டி தொடங்குகிறது. இதில் சென்னை, காஞ்சிபுரம், கோவை, சேலம், கன்னியாகுமரி உள்பட 29 மாவட்டங்களைச் சேர்ந்த 23சிறுவர்கள் மற்றும் 90 சிறுமிகள்

பங்கேற்றுள்ளனர்.

## மே – 10

- உலக குத்துச்சண்டை சாம்பியம்ஷிப் போட்டியில் விளையாட இந்திய வீரர் விகாஸ் கிருஷ்ணனுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

- மாட்ரிட் ஓபன் டென்னிஸ் போட்டியின் 2வது சுற்றில் ரஷ்ய வீராங்கனையான மரியா ஷரபோவா அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

- இந்திய மகளிர் ஹாக்கி அணி நியூசிலாந்து அணிக்கு எதிராக 5 போட்டிகளில் ஆடவுள்ளது. இப்போட்டிகள் வரும் 14ம் தேதி தொடங்குகிறது. இதில் கலந்து கொள்ளும் இந்திய வீராங்கனைகள் நேற்று நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளனர்.

- தமிழக மீனவ இளைஞர்கள் 100 பேருக்கு நீச்சல் பயிற்சி கொடுத்து, சர்வதேச அளவிலான சான்றிதழ் கொடுக்கும் திட்டத்தை தமிழக கடலோர பாதுகாப்பு குழுமம் தொடங்கியுள்ளது.

- தென் ஆப்பரிக்கா, ஜிம்பாப்வே, இந்தியா, அயர்லாந்து ஆகிய 4 நாடுகள் இடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடர் தென் ஆப்பிரிக்காவில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் தென் ஆப்பிரிக்கா இந்தியா அணிகள் மோதின. இதில் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்திய வீராங்கனை ஜூலன் கோஸ்வாமி சாதனைப் படைத்துள்ளார்.

- ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி டெல்லியில் இன்று முதல் 14ம் தேதி வரை நடக்கிறது. இதில் ஈரான், உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ஜப்பான், கொரியா, சீனா உள்பட பல்வேறு நாடுகள் கலந்து கொள்கின்றன.

- அமெரிக்காவில் மிகவும் பிரபலமான தேசிய கூடைப்பந்து சங்கம் சார்பில் டெல்லியை அடுத்த நொய்டாவில் கூடைப்பந்து அகாடமி தொடங்கப்பட்டு இருக்கிறது. தேசிய கூடைப்பந்து சங்கம் சார்பில் இந்தியாவில் ஆரம்பிக்கப்படும் முதல் அகாடமி இதுவாகும்.

## மே – 11

- ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி தொடரில் அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவேன் என இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரரான யுவராஜ் சிங் தெரிவித்தார்.

- ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் டெல்லி அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத்தை தோற்கடித்து 5வது வெற்றியை பெற்றது.

- 11 வயதுக்குட்பட்ட இந்திய கால்பந்து அணி, உலக கோப்பை போட்டிக்கு தயாராகும் வகையில் ஐரோப்பிய கண்டத்தில் சுற்றுப்பயணம் செய்து

அங்குள்ள ஜூனியர் கிளப் அணிகளுடன் விளையாடி வருகிறது. லிஸ்பானில் நடந்த ஆட்டம் ஒன்றில் இந்திய ஜூனியர் அணி, போர்ச்சுகல் கிளப் அணியிடம் தோல்வி கண்டது.

- ஐரோப்பிய சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் அரை இறுதியில் யுவெண்டஸ் அணி, மொனாக்கோ அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

- கோவில்பட்டியில் நடைபெற்று வரும் லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான 9வது அகில இந்திய ஹாக்கி போட்டியில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஒடிசா கிழக்கு கடற்கரை ரயில்வே அணியும், டெல்லி ஓஎன்ஜிசி அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சமநிலையில் இருந்ததால் ஆட்டம் டிராவில் முடிந்தன.

- ஏடிபி கர்ஷி சாலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டி தொடரில் இந்திய வீரர் யூகி பாம்ப்ரி கால் இறுதிக்கு முன்னேறினார்.

- மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் 2வது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தர வரிசையில் 5வது இடத்தில் இருக்கும் சுலோவக்கியா வீராங்கனை சிபுல்கோவா அதிர்ச்சி தோல்வி கண்டு வெளியேறினார்.

- சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலைவர் பதவியில் ஷஷாங்க் மனோகர் 2018 ஜூன் வரை நீடிப்பார் என ஐசிசி அறிவித்துள்ளது.

## மே – 12

- கர்ஷி ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- தில்லியில் நடைபெற்று வரும் ஆசிய மல்யுத்த சாம்பியன் ஷிப் போட்டியில் இந்தியாவின் அனில் குமார் (85 கிலோ கிரேக்கோ – ரோமன் பிரிவு), இந்திய வீராங்கனை ஜோதி (மகளிர் 75 கிலோ எடைப்பிரிவு) ஆகியோர் வெண்கலம் வென்றனர்.

- வரும் மே 30ம் தேதி தொடங்கவுள்ள தாய்லாந்து ஓபன் கிராண்டர் கோல்டு பாட்மிண்டன் போட்டியிலிருந:த இந்தியாவின் பி.வி.சிந்து விலகியுள்ளார்.

- ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 51வது லீக் ஆட்டத்தில் 7 ரன்களை வித்தியாசத்தில் மும்பை இண்டியன்களை கிங்ஸ் லெவன் பஞ்சாப் தோற்கடித்து 7வது வெற்றியை பெற்றது.

- மாநில அளவிலான வலுதூக்கும் போட்டியில் மன்னார்குடி வீரர்கள் முதலிடம் பெற்றுள்ளனர். இதில் மாநிலம் முழுவதுமிருந்து 350க்கும் மேற்பட்டோர் கலந்து

கொண்டனர். மேலும் இந்த ஆண்டுக்கான இரும்பு மனிதர் என்ற பட்டம் மன்னார்குடி வீரர் வி.எஸ் யோகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டது.

## மே – 13

- ஸ்பெயினில் நடைபெற்று வரும் மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் கால் இறுதியில் விளையாட உள்ளுர் வீரர் ரபேல் நடால் தகுதி பெற்றுள்ளார்.

- ஆஸ்திரேலிய அணி முன்னாள் கேப்டன் ரிக்கி பான்டிங் தேர்வு செய்த கனவு ஐபிஎல் அணியின் கேப்டனாக எம்.எஸ்.டோனி நியமக்கப்பட்டுள்ளார்.

- தில்லியில் நடைபெற்று வரும் ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனைகள் சாக்ஷி மாலிக், வினேஷ் போகத், திவ்யா காக்ரன் ஆகியோர் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

- தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் நடைபெற்று வரும் லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான 9 வது அகில ஹாக்கிப் போட்டியில் கபுர்தலா ஆர்.சி.ப், செகந்திராபாத் தெற்கு மத்திய ரயில்வே, தில்லி ஓ.என்.ஜி.சி அணிகள் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

- தென் ஆப்பிரிக்க டெஸ்ட் மற்றும் டி20 அணியின் கேப்டனான டுபிளெஸ்ஸி 2019 உலகக் கோப்பையுடன் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.

- மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அரை இறுதிப்போட்டியில் சிமோனா ஹாலெப், அமஸ்டாஸ்ஜியா செவாஸ்டாவோவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ளார்.

## மே – 14

- ஐபிஎல் தொடரில் நேற்று குஜராத் லயன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

- டெல்லியில் நடைபெற்று வரும் ஆசிய மல்யுத்த போட்டியில் ஆடவருக்கான 65 கிலோ எடைப் பிரிவு இறுதியில் இந்திய வீரர் பஜ்ரங் பூனியா தங்கப் பதக்கமும், மகளிருக்கான 58 கிலோ எடைப் பிரிவின் இறுதியில் இந்திய வீராங்கனை சரிதா வெள்ளிப் பதக்கமும் வென்றுள்ளனர்.

- கோவில்பட்டியில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய ஹாக்கி மைதானத்தில் லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கி போட்டி நடந்து வருகிறது. இதில் அரையிறுதியில் ஓ.என்.ஜி.சி அணி ஆர்.சி.எப் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. மற்றொரு



We Shine Academy TM

அரையிறுதியில் தெற்கு மத்திய ரெயில்வே அணி ராணுவ லெவன் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

- இந்திய கராத்தே சங்கம் சார்பில் 21 வயதுக்கு உட்பட்ட மாணவ மாணவிகளுக்கான அகில இந்திய கராத்தே போட்டி டெல்லியில் 3 நாட்கள் நடைபெற்றது. இதில் தமிழகத்தை சேர்ந்த 5 வீரர்கள் தங்கப்பதக்கம் வென்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு இந்திய கராத்தே சங்க தலைவர் ஆர்.தியாகராஜன், பொதுச்செயலாளர் பரத்சர்மா ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

- ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 54வது லீக் ஆட்டத்தில் 9 ரன்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியைத் தோற்கடித்து மும்பை இந்தியன்ஸ் அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் 10 வது வெற்றியைப் பெற்ற மும்பை அணி 20 புள்ளிகளைப் பெற்று புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

## மே – 15

- ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் புனே அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப்பை தோற்கடித்து 9 வெற்றியைப் பெற்றதுடன், அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

- 10வது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் பெங்களுரு அணி 10 ரன் வித்தியாசத்தில் டெல்லி அணியை வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றது.

- மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டியில் உலக தர வரிசையில் 8 வது இடத்தில் இருக்கும் சிமோனா ஹாலெப் கிறிஸ்டினாவை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார். மேலும் இந்த போட்டியில் தொடர்ந்து ஒற்றையர் சாம்பியன் பட்டத்தை வென்ற முதல் வீராங்கனை என்ற பெருமையை சிமோனா ஹாலெப் பெற்றார்.

- நியூசிலாந்து இந்தியா பெண்கள் ஹாக்கி அணிகள் இடையிலான முதலாவது ஹாக்கி போட்டி புகெகோக்கில் நேற்று நடந்தது. இதில இந்திய அணி நியூசிலாந்திடம் தோல்வி கண்டது.

- இந்த ஆண்டுக்கான பார்முலா1 கார்பந்தயம் உலகம் முழுவதும 20 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதன் 5வது சுற்று பந்தயமான ஸ்பெயின் கிராண்ட்பிரீ போட்டி பார்சிலோனாவில் நேற்று நடந்தது. இதில் இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் 1மணி 35நிமிடம் 56.497 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து முதலிடம் பிடித்து வெற்றி பெற்றுள்ளார்.

- ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டி டெல்லியில் நடந்தது. இதன்

பிரீஸ்டைல் ஆண்கள் 125 கிலோ உடல் எடைப்பிரிவில் இந்திய வீரர் சுமித், ஈரான் வீரர் யடோல்லா முகமத் கசிமை சந்தித்தார். இதில் இந்திய வீரர் சுமித் வெள்ளிப்பதக்கம் வென்றார். மேலும் இந்த போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 5வெள்ளி, 4 வெண்கலம் என மொத்தம் 10 பதக்கம் வென்றுள்ளது.

- சாம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை 28.7கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## மே – 16

- இந்திய கிரிக்கெட் அணியின் முக்கியமான வீரராக ரிஷப் பந்த் திகழ்வார் என ராகுல் திராவிட் கூறியுள்ளார்.

- கோவில்பட்டியில் கே.ஆர் மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளை சார்பில், லட்சுமி அம்மாள் நினைவு கோப்பைக்கான 9வது அகில இந்திய ஹாக்கி போட்டி நடைபெற்றது. இதில் செகந்திராபாத் தெற்கு மத்திய ரயில்வே அணி வெற்றி பெற்று சாம்பின் பட்டத்தை வென்றது.

- தென்ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, இந்தியா, அயர்லாந்து ஆகிய 4 நாடுகள் இடையிலான பெண்கள் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி தென் ஆப்பிரிக்காவில் நடந்து வருகிறது. இதில் இந்திய அணி தொடக்க விக்கெட்டுக்கு 320 ரன்கள் குவித்து உலக சாதனையை படைத்தது.

- பாகிஸ்தான் - வெஸ்ட்இண்டீஸ் அணிகள் இடையிலான கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி டோமினிகாவில் நடந்தது. இதில் பாகிஸ்தான் அணி 101 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது.

- ஸ்பெயினில் புகழ்பெற்ற லா லிகா கால்பந்து லீக் போட்டி நடந்து வருகிறது. இதில் மாட்ரிட்டில் நடந்த லீக் ஆட்டம் ஒன்றில் ரியல் மாட்ரிட் அணி வெற்றி பெற்றது. இது ரியல் மாட்ரிட் அணிக்கு 27வது வெற்றியாகும்.

- மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்தது. இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதிப்போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

- புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் அருகேயுள்ள வேம்பங்குடியில் நடைபெற்ற இருபாலருக்கான மாநில வாலிபால் போட்டியின் ஆடவர் பிரிவில் சென்னை இந்தியன் வங்கியும், மகளிர் பிரிவில் ஜேப்பியார் பொறியியல் கல்லூரியும் சாம்பியன் பட்டம் வென்றன.

## மே – 17

- களிமண் தரை ஆடுகளத்தில் நடைபெறும் பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் இருந்து 5ம் நிலை வீரரான 18 முறை கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்ற சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் விலகி உள்ளார்.

- இந்திய ஓபன் அலைச்சறுக்கு போட்டி கர்நாடக மாநிலத்தில் உள்ள மங்களூர் சசிஹித்லு கடற்கரையில் வரும் 26ம் தேதி வரை நடைபெறுகிறது.

- முதலாவது அனைத்து இந்திய ஓபன் ரேட்டிங் செஸ் போட்டி கொடைக்கானலில் வரும் 18ம் தேதி முதல் 21ம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் சர்வதேச மாஸ்டர்ஸ் பட்டம் வென்ற வீரர்கள் கலந்து கொள்கின்றனர்.

- கடந்த ஆண்டு ரியோடிஜெனீரோவில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற இந்திய பேட்மிண்டன் வீராங்கனை சிந்துவுக்கு உதவி கலெக்டர் பதவியை வழங்க ஆந்திர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

- 11வது பெண்கள் உலக கோப்பை (50 ஓவர்) கிரிக்கெட் போட்டி இங்கிலாந்தில் ஜூன் 24ம் தேதி முதல் ஜூலை 23ம் தேதி வரை நடக்கிறது. இதில் 6 முறை சாம்பியனான ஆஸ்திரேலியா, 2முறை சாம்பியனான இங்கிலாந்து, 2000ம் ஆண்டு சாம்பியனான நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், தென்ஆப்பரிக்கா, இலங்கை , வெஸ்ட் இண்டீஸ் ஆகிய 8 அணிகள் கலந்து கொள்கின்றன.

- சர்வதேச அளவிலான மல்யுத்தப் போட்டிகளில் ஏராளமான பதக்கங்களைக் குவிக்க விரும்புகிறேன் என இந்திய வீரர் பஜ்ரங் பூனியா தெரிவித்துள்ளார்.

## மே – 18

- 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான (ஜூனியர்) உலக கோப்பை கால்பந்து போட்டி இந்தியாவில் அக்டோபர் மாதம் நடக்கிறது. இந்த போட்டிக்கு தயாராகும் வகையில் இந்திய ஜூனியர் கால்பந்து அணி, ஐரோப்பிய கண்டத்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

- உலக லீக் போட்டிக்கு தயாராகும் வகையில் இந்திய பெண்கள் ஹாக்கி அணி, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து அந்த நாட்டு அணிக்கு எதிராக 5 ஆட்டங்கள் கொண்ட போட்டி தொடரில் விளையாடி வருகிறது. இதில் நேற்று நடந்த ஆட்டத்தில் இந்திய அணி நியூசிலாந்திடம் தோல்வி கண்டது.

- இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்று வரும் ரோம் மாஸ்ட்ரஸ் டென்னிஸ் தொடரில் நடப்பு சாம்பியனான முதல் நிலை வீரரான இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே 2வது சுற்றில் அதிர்ச்சி தோல்வியடைந்தார். மகளிர் ஒற்றையர் பிரிவில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா காயம் காரணமாக 2வது சுற்றின் பாதியிலேயே வெளியேறினார்.

- ஐபிஎல் தொடரில் ரைசிங் புனே சூப்பர்ஜெயன்ட் - மும்பை இந்தியன்ஸ் அணிக்கு இடையே நடைபெற்ற பிளே ஆப் சுற்றின் முதல் தகுதி சுற்று ஆட்டத்தில் புனே அணி மும்பை அணியை வீழ்த்தி இறுதி போட்டிக்கு முன்னேறியது.

- நட்பு ரீதியிலான கால்பந்து போட்டியில் இந்தியாவுடன் விளையாட லெபனான் அணி மறுத்துள்ள நிலையில் மாற்று அணியாக நேபாள அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- இந்திய கிரிக்கெட் அணி ஜூன் மாத இறுதியில் மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டி மற்றும் ஒரே ஒரு டி20 ஆட்டம் கொண்ட தொடரில் விளையாட உள்ளது.

- மகளிர் ஹாக்கியில் நியூசிலாந்து அணிக்கு எதிரான 3வது ஆட்டத்திலும் இந்திய அணி தோல்வியடைந்ததால் இந்திய அணி தொடரை இழந்தது.

## மே – 19

- ஸ்பெயினில் நடந்து வரும் கிளப் அணிகளுக்கு இடையிலான புகழ்பெற்ற லா லிகா கால்பந்து போட்டி இறுதி கட்டத்தை எட்டி விட்டது.

- ஜெர்மனியில் அடுத்த மாதம் நடைபெற உள்ள 3 நாடுகள் ஹாக்கி தொடர் மற்றும் அதை தொடர்ந்து இங்கிலாந்தில் நடைபெற உள்ள உலக ஹாக்கி லீக் அரை இறுதி தொடரில் பங்கேற்கும் இந்திய ஆடவர் அணியின் கேப்டனாக மன்பிரித் சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

- இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்று வரும் ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் 2வது சுற்றில் ரபேல் நடால் நிக்கோலஸ் அல்மேக்ரோவை வீழ்த்தி 3வது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- பிஎஸ்ஏ சார்பில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங், அகான்ஷா ஆகியோர் காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

- பிரெஞ்சு லீக் 1 கால்பந்து போட்டியில் மொனாக்கோ அணி, கடந்த 17 ஆண்டுகளில் முதல்முறையாக சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.

- உலக அளவில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில், இந்தியா 123 புள்ளிகளுடன் முதலிடத்தினை பிடித்திருக்கிறது.

## மே – 20

- ஐ.பி.எல் கிரிக்கெட்டில் இறுதிப் போட்டிக்கான தகுதி சுற்றில் கொல்கத்தாவை வீழ்த்தி மும்பை அணி வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

- இந்தியா, தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, அயர்லாந்து ஆகிய பெண்கள் அணிகள் இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் தென் ஆப்பரிக்காவில் நடந்து வருகிறது. இதில் இந்திய அணி நேற்று நடந்த கடைசி லீக்கில்

ஜிம்பாப்வேயை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

- இத்தாலி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் பிரிவில் நேற்று நடந்த கால் இறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா அணி இத்தாலியின் சாரா எர்ரானி – மார்ட்டினா டிரெவிசான் இணையை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது.

- நியூசிலாந்து சென்றுள்ள இந்திய பெண்கள் ஹாக்கி அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் முதல் 3 ஆட்டங்களில் தோல்வியடைந்துள்ளது.

- உலகக் கோப்பை வில்வித்தை போட்டி சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இந்திய ஆடவர் அணி அமெரிக்க அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

- எஸ்எஸ்எப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஜெர்மனியில் உள்ள முனிச் நகரில் நேற்று தொடங்கியது. இதில் இறுதிப் போட்டியில் ரஷ்யாவைச் சேர்ந்த செர்ஜி கமென்ஸ்ஸ்கி உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார். மேலும் இந்தியாவைச் சேர்ந்த ரவி குமார் 5 வது இடத்தைப் பிடித்துள்ளார்.

- இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டித் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று நடந்த கால் இறுதியில் ரோமானிய வீராங்கனை சிமோனா ஹாலெப் வெற்றி பெற்று அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

- பிரான்ஸில் உள்ள போர்டியாக்ஸ் நகரில் நடைபெற்று வரும் ஏடிபி சேலஞ்சர் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த பூரவ் ராஜா – திவிஜ் சரண் ஜோடி இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

## மே – 21

- ஜூனியர் உலக கோப்பை கால்பந்து போட்டிக்கு இந்திய இளம் அணி ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இதில் நேற்று முன்தினம் அரிஜோ நகரில் நடந்த ஆட்டத்தில் முதல் முறையாக இத்தாலியை வீழ்த்தி இந்திய அணி வரலாறு படைத்துள்ளது.

- இத்தாலி ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் இரட்டையர் அரை இறுதியில் இந்தியாவின் சானியா மிர்சா அணி மார்ட்டினா ஹிங்கிஸ் அணியிடம் தோல்வியடைந்தது.

- உலக கோப்பை வில்வித்தை போட்டி ஷாங்காய் நாட்டில் நடந்து வருகிறது. இதில் இந்திய அணி கொலம்பியாவை எதிர்கொண்டது. இறுதியில் இந்திய அணி கொலம்பியாவை வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்றது.

- பசுபதி மற்றும் டாக்டர் அப்துல் சாதிக் நினைவு ஹாக்கி கழகம் சார்பில் 12ஆம் ஆண்டு மாநில அளவிலான ஹாக்கி போட்டி அரியலூரில் நடைபெற்றது. இதில்

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அணி சுழற்கோப்பையை வென்றது.

- மலேசியாவின் மாலாகாவில் நடைபெற்ற சர்வதேச அளவிலான பள்ளி மாணவிகளுக்கான ஸ்கேட்டிங் போட்டியில் விருதுநகர் மாவட்டத்தை சேர்ந்த மாணவி சுபஸ்ரீ 1000 மீட்டர் தூரத்தை 2 நிமிடங்களில் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

- முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் அயர்லாந்து தலைநகர் டப்ளின் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் 4வது லீக் ஆட்டத்தில் வங்கதேசம் அயர்லாந்தைத் தோற்கடித்தது.

- நியூசிலாந்தின் ஹாமில்டன் நகரில் நடைபெற்று வரும் மகளிர் ஹாக்கித் தொடரில் இந்திய அணி நியூசிலாந்து அணியிடம் தோல்வி கண்டது.

## மே – 22

- ஐ.பி.எல். கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் புனே அணியை ஒரு ரன் வித்தியாசத்தில் தோற்கடித்து மும்பை இந்தியன்ஸ் அணி 3 வது முறையாக சாம்பியன்ஸ் பட்டத்தை வென்றது.

- இந்தியா, தென் ஆப்பிரிக்கா, அயர்லாந்து, ஜிம்பாப்வே ஆகிய 4 நாடுகள் இடையிலான பெண்கள் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய பெண்கள் அணி வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

- இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடைபெற்று வருகிறது. இதன் பெண்கள் பிரிவின் இறுதி ஆட்டத்தில் உக்ரைன் வீராங்கனை ஸ்விடோலினா, ருமேனியாவைச் சேர்ந்த ஹாலெப்பை வீழ்த்தி பட்டத்தை வென்றார்.

- பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற மகதி ஓபன் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய வீரர் ஹரிந்தர் பால் சந்து மலேசியாவின் முகமது சயபிக் கமாலை வீழ்த்தி கோப்பையை வென்றார்.

- சுதிர்மான் கோப்பை பாட்மிண்டன் தொடர் ஆஸ்திரேலியாவின் கோல்டு கோஸ்ட் நகரில் நேற்று தொடங்கியது. இதில் இன்று இந்தியா தனது முதல் ஆட்டத்தில் டென்மார்க்குடன் மோதுகிறது.

- ஆசிய பிளிட்ஸ் செஸ் போட்டி சீனாவின் செங்டு நகரில் நடைபெற்றது. இதில் மகளிர் பிரிவில் இந்திய வீராங்கனை வைஷாலி தங்கப் பதக்கம் வென்றார்.

- பிரான்ஸின் போர்டியாக்ஸ் நகரில் நடைபெற்ற போர்டியாக்ஸ் ஏடிபி சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திவிஜ் சரண்-பூரவ் ராஜா ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.

- மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச முதியோர் தடகள சாம்பியன்ஷிப்

போட்டியில் திருச்சியைச் சேர்ந்த அண்ணாவி 3 தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

- பி.டி.சிதம்பர சூரியநாராயணன் நினைவு சுழற்கோப்பைக்கான 58ம் ஆண்டு அகில இந்திய கூடைப்பந்துப் போட்டி, பெரியகுளம் பிஎஸ்டி நினைவரங்கத்தில் மே 15ம் தேதி தொடங்கியது. இதில் தில்லி விமானப்படை அணி சாம்பியன் பட்டம் பெற்றது.

## மே – 23

- உலகின் 2-ஆம் நிலை டென்னிஸ் வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சுக்கு பிரெஞ்சு ஓபனின் முன்னாள் வீரர் ஆன்ட்ரே அகஸ்லி பயிற்சியளிக்கிறார்.

- அக்வா விளையாட்டுக் கழகம் சார்பில் பெரியநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற ஆர்.ராமசாமி நினைவு 49 வது மாநில அளவிலான வாலிபால் போட்டியில் சென்னை எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழக அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.

- ஸ்பெயினில் நடந்த லா லிகா கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரில், ரியல் மாட்ரிட் அணி 93 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து கோப்பையை வென்றது.

- ரோம் நகரில் நடைபெற்ற இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில், ஜெர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரவ் சாம்பியன் பட்டத்தை வென்றார்.

- ஏ கிரேடு வழங்கப்பட்டுள்ள வீரர்களுக்கான ஊதியத்தை ஆண்டுக்கு ரூ.2 கோடியில் இருந்து ரூ.5 கோடியாக அதிகரிக்க வேண்டும் என இந்திய அணி கேப்டன் விராத் கோஹ்லி வலியுறுத்தி உள்ளார்.

- ஆஸ்திரேலியாவின் கோல்டு கோஸ்ட் நகரில் நடைபெற்ற சுதிர்மான் கோப்பை பேட்மின்டன் தொடரில் இந்திய அணி டென்மார்க் அணியிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தது.

## மே – 24

- திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில், மாவட்ட விளையாட்டு ஆணையம் மற்றும் வாடகை சைக்கிள் உரிமையாளர்களின் சார்பில் குழந்தைகள், ஆண்கள், பெண்களுக்கான மெதுவாக சைக்கிள் ஓட்டும் போட்டி ஏரிச்சாலையில் நடைபெற்றது. இதில் சிறுமிகளுக்கான போட்டியில் தஞ்சாவூரைச் சேர்ந்த பத்மஜா முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

- சுதிர்மான் கோப்பை பேட்மிண்டன் போட்டி ஆஸ்திரேலியாவின் கோல்டு கோஸ்ட் நகரில் நடந்து வருகிறது. இதில் இந்திய அணி இந்தோனேஷியாவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

- 5வது புரோ கபடி லீக் போட்டி ஜூன் மாதம் தொடங்குகிறது. இந்த ஆண்டில் முதல் முறையாக தமிழக அணி உள்பட 12 அணிகள் பங்கேற்கின்றன.

- சர்வதேச சதுரங்க போட்டியில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி 50 போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெற்றுள்ளார். இப்போட்டியில் வெற்றி பெற்றதால் சர்வதேச சதுரங்க ரேட்டிங் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

- தாய்லாந்து நாட்டில் உள்ள பாங்காக் நகரில் 2வது ஆசிய இளைஞர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது. இதில் வட்டு எறிதல் போட்டியில் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த அபேய் குப்தா 56.47 மீட்டர் தூரம் எறிந்து தங்கப் பதக்கம் வென்றார்.

- ஐஎஸ்எஸ்எப் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஜெர்மனியின் முனிச் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் ஜிது ராய் இறுதி சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தார்.

- கரூர் கூடைப்பந்து கழகம் சார்பில் எல்.ஆர்.ஜி நாயுடு நினைவு சுழற்கோப்பைக்கான 59ம் ஆண்டு அகில இந்திய கூடைப்பந்து போட்டி கரூர் திருவள்ளுவர் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் சென்னை ஐஓபி அணி 2 போட்டிகளில் வெற்றி பெற்றது.

- பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தகுதி சுற்றில் இந்திய வீரர்களான ராம் குமார் ராமநாதன், யூகி பாம்ப்ரி ஆகியோர் தோல்வியடைந்தனர்.

## மே – 25

- சுதிர்மான் கோப்பை பேட்மிண்டன் போட்டி ஆஸ்திரேலியாவின் கோல்டு கோஸ்ட் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இந்திய அணி நாக் அவுட் சுற்றுக்கு முன்னேறியது. நாளை கால் இறுதியில் சீனாவுடன் மோதுகிறது.

- இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான அஸ்வினுக்கு ஆண்டின் சிறந்த வீரர் விருதை சியெட் நிறுவனம் வழங்கியது.

- நாச்சிமுத்துக் கவுண்டர் கோப்பைக்கான 52வது தேசிய ஆடவர் கூடைப்பந்துப் போட்டி கோவை வ.உ.சி பூங்கா மைதானத்தில் நாளை முதல் தொடங்குகிறது.

- தாய்லாந்து நாட்டில் அண்மையில் நடைபெற்ற ஆசிய-பசிபிக் யோகாசனப் போட்டியில் கும்மிடிப்பூண்டியைச் சேர்ந்த யோகா மாணவர்கள் ஆர்.லோகேஷ், டி.பிரவீன்குமார் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

- அமெரிக்காவில் நடைபெற்ற டபுள்யு.டபுள்யு.இ உலக பொழுது போக்கு மல்யுத்த போட்டியில் இந்திய வீரர் ஜிந்தர் மகால் WWE சாம்பியன் பட்டத்தை வென்றார்.

## மே – 26

- டப்ளின் நகரில் நடைபெற்ற 3 நாடுகள் கிரிக்கெட் தொடரில் நியூசிலாந்து அணியை வங்கதேச அணி வென்றது. இதன் மூலம் வங்கதேச அணி ஐசிசி ஒரு நாள் போட்டி தரவரிசையில் 6வது இடத்தைப் பிடித்துள்ளது.

- இந்திய அணியின் பயிற்சியாளராக உள்ள அனில் கும்ப்ளேவின் பதவிக் காலம் முடிவடைய உள்ளது. இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளருக்கான விண்ணப்பங்களை விநியோகித்து அதற்கான தேர்வுப் பணிகளைத் தொடங்கியுள்ளதாக பிசிசிஐ வெளியிட்டுள்ளது.

- இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளரான அஸ்வினுக்கு ஆண்டின் சிறந்த வீரர் விருதை சியெட் நிறுவனம் வழங்கியது.

- தமிழ்நாடு பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் விளையாடும் திருவள்ளூர் வீரன்ஸ் அணியின் ஆலோசகராக இலங்கை முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

- பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் அடுத்த தலைவராக நஜம் சேத்தியை நியமிப்பதென பொதுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. தற்போது சஹாரியார் கான் தலைவராக உள்ளது குறிப்பிடத்தக்கது.

- கரூரில் நடைபெற்ற எல்ஆர்ஜி நாயுடு கோப்பைக்கான தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டியில் புதுதில்லி ஏர்போர்ஸ் அணி, சென்னை கஸ்டம்ஸ் அணியை வென்றது.

- ஆஸ்திரேலியாவின் கோஸ்டு கோஸ்ட் நகரில் நடைபெற்று வரும் சுதிர்மான் கோப்பை பாட்மிண்டன் தொடரின் கால்இறுதியில் இந்திய அணி இன்று சீன அணியுடன் மோதுகிறது.

## மே – 27

- சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியையொட்டி பயிற்சி ஆட்டங்கள் நேற்று தொடங்கின. இதில் முதல் பயிற்சி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா அணி இலங்கையை வீழ்த்தி வெற்றி பெற்றது.

- பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில நாளை முதல் தொடங்குகிறது. இதில் முதல் சுற்றில் ஸ்பெயினின் ரபெல் நடால் பிரான்ஸ் வீரர் பெனோய்ட் பேருடன் மோதுகிறார்.

- 2015ம் ஆண்டு கேரளாவில் நடைபெற்ற 35வது தேசிய விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்ற தமிழகத்தைச் சேர்ந்த 66 வீரர்-வீராங்கனைகள் மற்றும் 42 பயிற்சியாளர்கள் ஆகியோருக்கு 4 கோடியே 9 லட்சத்து 11 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர்

வழங்கினார்.

- சுதிர்மான் கோப்பை பேட்மிண்டன் போட்டி ஆஸ்திரேலியாவின் கோல்டு நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த கால்இறுதி ஆட்டத்தில் இந்திய அணி சீனாவிடம் தோல்வியடைந்தது.

- 15வது பெடரேஷன் கோப்பைக்கான தேசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி அடுத்த மாதம் 10ம் தேதி முதல் 12ம் தேதி வரை நடக்கிறது.

- இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன், தமிழ்நாடு பிரிமியர் லீக் டி 20 தொடரில் பங்கேற்றுள்ள திருவள்ளூர் வீரன்ஸ் அணியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- கரூர் கூடைப்பந்து கழகம் சார்பில் எல்.ஆர்.ஜி நாயுடு நினைவு சுழற்கோப்பைக்கான 59ம் ஆண்டு ஆடவருக்கான அகில இந்திய கூடைப்பந்து போட்டி கரூர் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் கடந்த 21ம் தேதி தொடங்கியது. இதில் டெல்லி ஏர்போர்ஸ் அணி சுழற்கோப்பையை வென்றது.

## மே – 28

- இந்திய ஓபன் அலைச்சறுக்கு போட்டி கர்நாடக மாநிலம் மங்களூருவில் உள்ள சசிஹிதுலு கடற்கரை பகுதியில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த போட்டியில் சென்னையை சேர்ந்த மணிவண்ணன், சூர்யா, அஜித் கோவிந்த், ராகுல் கோவிந்த், சதீஷ் மற்றும் கேரளாவை சேர்ந்த ரமேஷ் ஆகியோர் அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

- ஆசிய இளையோர் தடகள போட்டியில் வெள்ளி பதக்கம் வென்ற இந்திய வீரர் ரோகித் யாதவ் ஊக்க மருந்து சோதனையில் சிக்கினார்.

- 9வது பீச் தேசிய கபடி சாம்பியன்ஷிப் போட்டி ஆந்திராவில் அடுத்த மாதம் (ஜூன்) 1ம் தேதி முதல் 4ம் தேதி வரை நடக்கிறது. இந்த போட்டிக்கான தமிழக ஆண்கள் மற்றும் பெண்கள் பீச் கபடி அணி தேர்வு சென்னை நேரு ஸ்டேடியத்தில் இன்று நடக்கிறது.

- தமிழ்நாடு பேட்மிண்டன் சங்கம் சார்பில் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் லீக் போட்டி ஆகஸ்ட் மாதம் தொடங்குகிறது. இதில் சென்னை, திருப்பூர் உள்பட 6 அணிகள் கலந்து கொள்கின்றன.

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், ஆணைய கோப்பைக்கான மாநில ஹாக்கி போட்டி, பாளையங்கோட்டையில் நேற்று தொடங்கியது. இப்போட்டியில் பங்கேற்க மதுரை, சிவகங்கை, திருநெல்வேலி, ராமநாதபுரம், சேலம், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபரி, அரியலூர், காஞ்சிபுரம் ஆகிய 10 அணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

- கோவையில் நடைபெற்று வரும் தேசிய அளவிலான கூடைப்பந்துப் போட்டியின் 2வது நாள் ஆட்டத்தில் ஆடவர் பிரிவில் சென்னை வருமான வரித்துறை அணி மற்றும் மகளிர் பிரிவில் சத்தீஸ்கர் மாநில அணி வெற்றி பெற்றன.

- அரசுப் பணியாளர்களுக்கான மாநில அளவிலான கபடிப் போட்டிகள் திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் தொடங்கியது. இதில் பெண்கள் பிரிவில் தஞ்சாவூர், திண்டுக்கல், ஈரோடு அணிகளும் மற்றும் ஆண்கள் பிரிவில் திருச்சி, சென்னை, சிவகங்கை, கன்னியாகுமரி உள்ளிட அணிகளும் பங்கேற்றுள்ளனர்.

## மே – 29

- சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட்டில் நேற்று நடந்த பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி நியூசிலாந்து அணியை 189 ரன்னில் வீழ்த்தி வெற்றி பெற்றது.

- ஸ்பெயினில் ஆண்டுதோறும் கோபா டெல்ரே கோப்பைக்கான கால்பந்து போட்டி நடத்தப்படுகிறது. இதில் 2016-17ம் ஆண்டு சீசனுக்கான இறுதி ஆட்டத்தில் பார்சிலோனா 31 என்ற கோல் கணக்கில் ஆலாவ்ஸ் அணியை வீழ்த்தி கோப்பையை கைப்பற்றியது.

- கிராண்ட்ஸ்லாம் பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நேற்று தொடங்கியது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பர் ரஷ்யாவின் மகரோவாவிடம் தோல்வி அடைந்தார்.

- ஐஸ்லாந்து நாட்டில் சாட்டிலைட் சர்வதேச வாள்வீச்சு போட்டி நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதி சுற்றில் இந்திய வீராங்கனை பவானி தேவி இங்கிலாந்தின் சாரா ஜேன் ஹாம்சனை 1513 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி தங்கப்பதக்கத்தை வென்றார். மேலும் சர்வதேச வாள்வீச்சில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையையும் படைத்தார்.

- 2017ம் ஆண்டுக்கான பார்முலா 1 கார்பந்தயத்தின் 6வது சுற்றான மொனாக்கோ கிரான்ட்பிரி பந்தயம் மான்ட்கார்லோ ஓடுதளத்தில் நேற்று நடந்தது. இதில் ஜெர்மனி வீரர் செபாஸ்டியன் வெட்டல் 129 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்தார்.

- சுதிர்மான் கோப்பை பாட்மிண்டன் போட்டியின் இறுதிச் சுற்றில் தென்கொரியா சீனாவை 3-2 என்ற கணக்கில் வென்று சாம்பியன் பட்டத்தை வென்றது.

- கோவையில் நடைபெற்று வரும் தேசிய அளவிலான கூடைப்பந்து போட்டியின் 3வது நாள் ஆட்டத்தில் ஆடவர் பிரிவில் இந்தியன் ரயில்வே அணியும், மகளிர் பிரிவில் கேரள மின் வாரிய அணியும் வெற்றி பெற்றன.

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் திருநெல்வேலி பிரிவு சார்பில் மாநில அளவிலான ஹாக்கி லீக் போட்டி பாளையங்கோட்டை அண்ணா விளையாட்டு மைதானத்தில் தொடங்கியது. இதில் திருநெல்வேலி உள்பட 4

மாவட்ட அணிகள் சூப்பர் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

- தொன்போஸ்கோ இளையோர் இயக்கம் சார்பில் 18வது மாநில அளவிலான கால்பந்தாட்ட போட்டி மதுரையில் மே 23ம் தேதி தொடங்கியது. இதன் இறுதி சுற்றில் சென்னை ரயில் இணைப்பு பெட்டி தொழிற்சாலை அணி சாம்பியன் ஆனது.

## மே – 30

- செக் குடியரசில் கடந்த 4 நாள்களாக நடைபெற்ற ஜூனியர்களுக்கான சர்வதேச துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவுக்கு தங்கம் உள்பட 11 பதக்கம் கிடைத்துள்ளது.

- இந்திய தடகள வீரர் வீராங்கனைகளுக்காக உலகின் சிறந்த பயிற்சியாளர்கள் மற்றும் துணை ஊழியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் விஜய் கோயல் வலியுறுத்தினார்.

- கோவையில் நடைபெற்று வரும் தேசிய அளவிலான கூடைப்பந்துப் போட்டியின் 4வது நாள் ஆட்டத்தில் ஐ.ஓ.பி, வருமான வரித்துறை அணிகள் வெற்றி பெற்றன.

- ஐஸ்லாந்தில் நடைபெற்ற சர்வதேச வாள்வீச்சு போட்டியில் தமிழக வீராங்கனை பவானி தேவி தங்கம் வென்று சாதனை படைத்தார். இதன் மூலம் சர்வதேச வாள்வீச்சில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்தார்.

- பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் ர.ஃபேல் நடால் வெற்றி பெற்றனர்.

- சுதிர்மான் கோப்பை பாட்மிண்டன் போட்டியின் இறுதிச்சுற்றில் சீனாவை வீழ்த்தி தென்கொரியா சாம்பியன் பட்டம் வென்றது.

## மே – 31

- சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி 240 ரன்கள் வித்தியாசத்தில் வங்காள தேசத்தை தோற்கடித்து அபார வெற்றி பெற்றது.

- பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் இங்கிலாந்து வீரர் ஆன்டி முர்ரே, சுவிட்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா வெற்றி பெற்றனர்.

- உலான்பாத்தர் கோப்பைக்கான குத்துச்சண்டை போட்டி மங்கோலியா தலைநகரான உலான்பாத்தரில் வரும் 20ம் தேதி முதல் 26ம் தேதி வரை நடைபெறகிறது. இந்த தொடரில் இந்தியா சார்பில் ஆடவர் பிரிவில் தேவேந்திர

சிங் உள்ளிட்ட 7 வீரர்களும், மகளிர் பிரிவில் மேரி கோம் உள்ளிட்ட 3 வீராங்கனைகளும் கலந்து கொள்கின்றனர்.

- ஐசிசி வெளியிட்டுள்ள ஒருநாள் கிரிக்கெட் பேட்டிங் மற்றும் பவுலிங் தரவரிசையில் இந்தியா சார்பில் கேப்டன் விராத் கோஹ்லி 3ம் இடம் பிடித்துள்ளார். மேலும் தென் ஆப்பிரிக்காவின் டிவில்லியர்ஸ், ரபாடா ஆகியோர் முதலிடம் வகித்துள்ளனர்.

- புரோ கபடி லீக் போட்டியில் பிளே ஆ.்.ப் சுற்றுக்கு முன்னேறுவதே சென்னை அணியின் இலக்கு என்று அதன் பயிற்சியாளர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

- கோவையில் நடைபெற்று வரும் தேசிய அளவிலான கூடைப்பந்துப் போட்டியின் ஆடவர் பிரிவில் சென்னை வருமான வரித்துறை அணி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும், மகளிர் பிரிவில் சத்தீஸ்கர் மாநில அணி மற்றும் செகந்திராபாத்-தெற்கு மத்திய ரயில்வே அணியும் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

- ஐரோப்பிய கால்பந்து போட்டியில் அதிக கோல் அடித்த வீரர்களுக்கான தங்கக் காலணி விருதை, பார்சிலோனா அணி நட்சத்திர வீரர் லியோன்ஸ் மெஸ்ஸி 4வது முறையாக பெற்றுள்ளார்.

## வர்த்தக செய்திகள்

### மே – 1

- வரி ஏய்ப்பு செய்த 2 லட்சம் நிறுவனங்களுக்கு வருமான வரித்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. கருப்பு பணத்தை ஒழிக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

- பண மதிப்பிழப்பு நடவடிக்கைகளுக்குப் பிறகு, ரொக்கமற்ற பணப் பரிவர்த்தனையை ஊக்குவிக்க வேண்டும் என்பது மத்திய அரசின் உண்மையான நோக்கமாக இருந்தால். வங்கி வாடிக்கையாளர்கள் மீது இத்தகைய சேவைக் கட்டணங்கள் என்ற தண்டனை – அபராதங்களை சுமத்துவதை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என அந்த அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

- அமெரிக்காவின் முன்னணி ஆலோசனை நிறுவனமான மெக்கென்ஸி இந்திய தகவல் தொழில்நுட்ப துறை குறித்து ஆய்வு நடத்தியது. அதில், அடுத்த 3-4 ஆண்டுகளில் சுமார் 50 சதவீத ஊழியர்கள் குறைக்கப்படலாம் எனத் தெரிவித்துள்ளது.

- மும்பை பங்குச் சந்தைக் குறியீட்டு எண்ணான சென்செக்ஸ் கடந்த ஒரு மாதத்தில் 1.70 சதவீதம் உயர்ந்துள்ளது. இதே போன்று ஓராண்டில் 16.90

சதவீதம் உயர்ந்துள்ளது. மொத்தத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சென்செக்ஸ் 32.20 சதவீதம் ஏற்றம் பெற்றுள்ளது.

- கடந்த 2015-16ம் நிதி ஆண்டில் ஓலா நிறுவனத்தின் தினசரி நஷ்டம் ரூ.6 கோடி என தெரியவந்துள்ளது. கடந்த 2015-16ம் ஆண்டில் மொத்தம் ரூ.2311 கோடி அளவுக்கு நஷ்டத்தை ஓலா நிறுவனம் சந்தித்திருக்கிறது. அதிக விளம்பரங்கள், சலுகைகள் மற்றும் பணியாளர்கள் கட்டணங்களால் இந்த நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக தெரிய வந்துள்ளது.

- இந்திய தொலைபேசி சந்தாதாரர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. கடந்த பிப்ரவரி மாத இறுதியில் மொபைல் மற்றும் லேண்ட்லைன் இணைப்பு 118 கோடியாக அதிகரித்திருக்கிறது. ஜனவரி மாதத்தில் 117 கோடியாக இருந்ததாக தொலைத் தொடர்பு ஒழுங்கு முறை ஆணையம் (டிராய்) தெரிவித்திருக்கிறது.

- சர்வதேச அளவில் இந்திய சாக்லேட் சந்தை வேகமாக வளர்ந்து வருவதாக ஆய்வில் தெரிய வந்திருக்கிறது. லண்டனைச் சேர்ந்த மின்டெல் நிறுவனம் இந்த தகவலை வெளியிட்டிருக்கிறது. மேலும் 2016ம் ஆண்டில் சாக்லேட் சந்தை 13 சதவீதம் இந்தியாவில் வளர்ச்சி அடைந்திருப்பதாக இந்நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

## மே – 2

- ரிலையன்ஸ் கேபிடல் அசட் மேனேஜ்மெண்ட் நிறுவனத்தின் ரிலையன்ஸ் குரோத் பண்ட் பிரிவில் ஓப்பன் எண்டட் ஈக்விட்டி திட்டத்தின் நிகர சொத்து மதிப்பு (என்ஏவி) ரூ.1,000-ஐ எட்டியிருக்கிறது. “இந்த மியூச்சுவல் பண்ட் திட்டம் தொடங்கப்பட்ட போது ரூ.1லட்சம் முதலீடு செய்திருந்தால் அதன் மதிப்பு இன்றைய நிலையில் ரூ.1 கோடியாக இருக்கும்” என ரிலையன்ஸ் மியூச்சுவல் பண்ட் சிஇஓ சுந்தீப் சிக்கா தெரிவித்துள்ளார்.

- நுகர்வோர் பொருட்களை தயாரித்து விற்பனை செய்யும் வெளிநாட்டு நிறுவனங்களை 5 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து விரட்டுவோம் என்று பதஞ்சலி நிறுவனத்தின் நிறுவனர் யோகா குரு பாபா ராம் தேவ் தெரிவித்துள்ளார்.

- எஸ்பிஐ வங்கி டேர்ம் டெபாசிட்களுக்கான வட்டி விகிதங்களை குறைத்துள்ளது. நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான எஸ்பிஐ, பல்வேறு பிக்ஸட் டெபாசிட் திட்டங்களுக்கான வட்டி விகிதங்களில் 0.50 சதவீதம் வரை குறைத்துள்ளது. இந்த புதிய வட்டி விகித முறை புதிதாக மேற்கொள்ளப்படும் டெபாசிட்டுகளுக்கும், புதுப்பிக்கப்படும் டெபாசிட்டுகளுக்கும் ஏப்ரல் 29ம் தேதியிலிருந்து நடைமுறைபடுத்தப்படும் என வங்கி அறிவித்துள்ளது.

- மொபைல் டவர்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சால் பாதிப்பு ஏற்படுகிறது என சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தொடர்ந்து கூறுகின்றனர். இதனால் வீட்டுக்கு அருகில் உள்ள மொபைல் டவரில் இருந்து வெளியாகும் கதிர்வீச்சு அளவு

பற்றி பொதுமக்களே தெரிந்து கொள்ள இணையதளம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- இந்திய தொழிலகக் கூட்டமைப்புக்க (சிஐஐ) புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளர். இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் தலைவராக, அப்பல்லோ ஹாஸ்பிட்டல்ஸ் என்டர்பிரைஸஸ் நிறுவனத்தின் நிர்வாகத் துணைத் தலைவரான ஷோபனா காமினேனி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேலும் கோட்டக் மஹிந்திரா வங்கியின் நிர்வாகத் துணைத் தலைவரான உதய் கோட்டக், சிஐஐ கூட்டமைப்பின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் மற்றும் இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் நியமனத் தலைவராக பார்தி எண்டர்பிரைஸஸின் துணைத் தலைவரான ராகேஷ் பார்தி மித்தல் தேர்வு தேர்வு செய்யப்பட்டுள்ளார் என்று சிஐஐ தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இந்தியாவில் வாகன விற்பனையில் முதலிடத்தில் உள்ள மாருதி சுஸுகி நிறுவனம் சென்ற ஏப்ரலில் 1,51,215 கார்களை விற்பனை செய்துள்ளது. கடந்த ஆண்டின் இதே கால அளவில் விற்பனையான 1,26,569 கார்களுடன் ஒப்பிடுகையில் இது 19.5 சதவீதம் அதிகமாகும்.

## மே – 3

- ஐசிஐசிஐ வங்கி 100 நாட்களில் 100 டிஜிட்டல் கிராமங்களை உருவாக்கியுள்ளது. இதன் அடுத்த கட்டமாக இந்த ஆண்டு இறுதிக்குள் 500 கிராமங்களுக்கு தொழில்நுட்ப சேவைகளை கொண்டு செல்ல உள்ளோம் என்று வங்கியின் தலைவர் சாந்தா கொச்சார் கூறினார்.

- இந்தியன் வங்கி ‘ஐபி ஹோம் என்ரிச்’ என்ற புதிய கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, பழைய வீட்டை புதுப்பிக்கவும், பழுதுபார்க்கவும் வீட்டை அடமானம் வைக்காமல் கடன் வழங்கும் புதிய திட்டத்தை இந்தியன் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

- பிஎஸ் 3 வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட தடையால் இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனங்களுக்கு ரூ.600 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் தடை விதித்த மூன்று நாட்களுக்குள் வழங்கிய சலுகைகளால் இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது என ஐசிஆர்ஏ தர நிறுவனம் கூறியுள்ளது.

- ஸான்டெர் குழுமத்துடன் ஸ்ரீராம் பிராப்பர்டீஸ் ரூ.2290 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இது ரியல் எஸ்டேட் துறையில் நடந்துள்ள பெரிய ஒப்பந்தமாகும்.

- இன்றைய வர்த்தக சந்தையில் அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 10காசுகள் உயர்ந்து ரூ.64.11 காசுகளாக உள்ளது.


We Shine Academy™

## மே – 4

- அமெரிக்காவைச் சேர்ந்த குளோபல் பைனான்ஸியல் இன்டெகரிட்டி என்னும் நிறுவனம் ஒரு ஆய்வு மேற்கொண்டது. இந்த ஆய்வில் கடந்த 2005ம் ஆண்டு முதல் 2014ம ஆண்டு வரை 77,000 கோடி டாலர் கறுப்புப் பணம் இந்தியாவுக்குள் வந்திருப்பது தெரிய வந்துள்ளது.

- முன்னணி விமான சேவை நிறுவனமான ஜெட் ஏர்வேஸ், சென்னை பாரிஸ் மற்றும் பெங்களூரு – ஆம்ஸ்டர்டாம் இடையே நேரடி விமான போக்குவரத்தை தொடங்கியது. வரும் அக்டோபர் 29ம் தேதி முதல் இந்த நேரடி விமான சேவை தொடங்கும் என ஜெட் ஏர்வேஸ் அறிவித்திருக்கிறது.

- குறைந்த விலை வீடுகளுக்கான வீட்டுக்கடன் பிரிவில் வங்கிகளுக்கு சிறந்த வளர்ச்சி வாய்ப்புகள் உள்ளன என்று சிபில் கூறியுள்ளது. மேலும் கடந்த ஐந்து ஆண்டுகளில் கடன் வளர்ச்சி விகிதம் 23 சதவீதமாக உள்ளது என்றும் வாராக்கடன் அளவு 1சதவீதத்துக்கும் குறைவான அளவிலேயே உள்ளது என்றும் சிபில் கூறியுள்ளது.

- இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 9காசுகள் சரிந்து ரூ.64.24 காசுகளாக உள்ளது.

- கடந்த ஜனவரி முதல் இயற்கை ரப்பர் விலை படிப்படியாக அதிகரித்து வருகிறது. இதற்கு ஏற்ப டயரின் விலையையும் உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக டயர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

- ஜூலை 1ம் தேதி முதல் ஸ்பைஸ் ஜெட் நிறுவனம் மூலம் புதுச்சேரி-ஹைதராபாத் இடையே விமான சேவை இயக்கப்பட உள்ளது.

## மே – 5

- தாமாக முன்வந்து வெளியேறும் திட்டத்தை காக்னிசென்ட் நிறுவனம் நேற்று அறிவித்தது. இந்த திட்டம் இயக்குநர், மூத்த துணைத்தலைவர் உள்ளிட்ட பணியாளர்களுக்கு (டி பிரிவு பணியாளர்) அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரிவில் உள்ள பணியாளர்கள் தாமாக முன்வந்து வெளியேறும் பட்சத்தில் 6மாதம் முதல் 9 மாதம் வரையில் அவர்களுக்கு சம்பளம் வழங்க நிறுவனம் முடிவெடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

- கடந்த மூன்று ஆண்டுகளில் எஸ்ஐபி மூலமாக முதலீடு செய்யும் முதலீட்டாளர்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. இதுவரை இல்லாத அளவு கடந்த ஏப்ரல் மாதத்தில் ரூ.4200 கோடியை எஸ்ஐபி முறை மூலமாக மியூச்சுவல் பண்டில் முதலீடு செய்திருக்கின்றனர்.

- பொதுத்துறை நிறுவனமான செயில் மற்றும் ஆர்சிலர் மிட்டல் இணைந்து 5000

கோடி ரூபாய் முதலீட்டில் உருக்கு ஆலை அமைக்க திட்டமிட்டுள்ளன. இம்மாத இறுதிக்குள் இது குறித்து நல்ல முடிவு அறிவிக்கப்படும் என உருக்கு அமைச்சர் பிரேந்திர சிங் தெரிவித்தார்.

- ரிசர்வ் வங்கிக்கு கூடுதல் அதிகாரம் வழங்குவதற்கான அவசரச் சட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி இருக்கிறது. இந்த அவசரச் சட்டம் குடியரசுத்தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. குடியரசுத்தலைவர் அனுமதி கிடைத்த பிறகு இந்த அவசரச் சட்டம் குறித்த விரிவான தகவல்கள் வெளியிடப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்தார்.

- சென்னை – பாரீஸ் மற்றும் பெங்களூரு – ஆம்ஸ்டர்டாம் இடையே நேரடி விமான சேவையை ஜெட் ஏர்வேஸ் நிறுவனம் தொடங்க உள்ளது. இந்த நேரடி சேவை வரும் அக்டோபர் 29ம் தேதி தொடங்குகிறது.

- நடப்பு ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான முதல் காலாண்டில் இந்தியாவில் தங்கத்துக்கான தேவை 15 சதவீதம் அதிகரித்து 1223.5டன்னாக இருந்தது என்று உலக தங்க கவுன்சில் (டபிள்யூ.ஜி.சி) தெரிவித்துள்ளது.

## மே – 6

- கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு 43.76 டாலராக சரிந்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள அச்சத்தின் காரணமாக பங்குச் சந்தையில் சரிவு ஏற்பட்டதாக சந்தை வல்லுநர்கள் கூறியுள்ளனர். இதன் காரணமாக எண்ணெய் மற்றும் எரிவாயு பங்குகள் சரிவைக் கண்டன.

- பிஎஸ்இ நிறுவனத்தின் நான்காம் காலாண்டு நிகர லாபம் 3 மடங்கு உயர்ந்து ரூ.72.66 கோடியாக இருக்கிறது. கடந்த ஆண்டு இதே காலத்தில் ரூ.20.24 கோடியாக நிகர லாபம் இருந்தது. ஆனால் மொத்த வருமானம் சிறதளவு உயர்ந்திருக்கிறது

- ஐஷர் மோட்டார் நிறுவனத்தின் நிகர லாபம் 34.5 சதவீதம் உயர்ந்து ரூ.460 கோடியாக உள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் ரூ.342 கோடியாக நிகர லாபம் இருந்தது.

- பொதுத்துறை நிறுவனமான ஹட்கோவின் பொதுப்பங்கு வெளியீடு (ஐபிஓ) வரும் 8ம் தேதி முதல் தொடங்குகிறது. 11ம் தேதி வரை இந்த நிறுவன பங்குகளுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த ஐபிஓ மூலம் ரூ.1224 கோடி திரட்ட முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. 2,04,058,747 பங்குகளை விலக்கிக்கொள்ள மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- யோகா குரு பாபா ராம்தேவ் நிறுவனமான பதஞ்சலி நடப்பு நிதி ஆண்டில் வருவாயை ரூ.20000 கோடியாக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது. நாடு முழுவதும் சங்கிலித் தொடர் உணவகங்களை அமைக்கவும் அந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

- பொதுத்துறையைச் சேர்ந்த பொதுக் காப்பீட்டு நிறுவனமான நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் நான்காம் காலாண்டு லாபம் 22% அதிகரித்தது.

- உள்நாட்டில் கலப்பட பஞ்சு விற்பனையால் இறக்குமதி பஞ்சு வரத்து 3 மடங்கு அதிகரித்துள்ளது.

## மே – 7

- போஷ் நிறுவனத்தின் பெங்களூரு ஆலை தற்காலிகமாக மூடப்பட்டது. கர்நாடக மாசு கட்டுப்பாட்டு வாரியம் அனுப்பிய நோட்டீஸ் காரணமாக இந்த ஆலையை மூடுவதாக நிர்வாகம் அறிவித்திருக்கிறது.

- ஜிஎஸ்டி அமல்படுத்துவதற்கு முன்னர் இடைக்கால வெளி வர்த்தகக் கொள்கைகள் வெளியிடப்படும் என்று அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

- ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் வறுமையை அகற்றுவதை நோக்கமாக கொண்டு ஆசிய வளர்ச்சி வங்கி (ஏடிபி) செயல்பட்டு வருகிறது. இதனுடன் நகர்ப்புற மேம்பாடு, எரிசக்தி ஆகிய துறைகளில் ஆசிய வளர்ச்சி வங்கி கவனம் செலுத்த வேண்டும் என்று நிதியமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

- கடந்த ஜனவரி முதல் மார்ச் வரையான காலாண்டு வர்த்தகச் செயல்பாடு விவரங்களை, ஃபேஸ்புக் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதில் லாபம் முந்தைய ஆண்டின் இதே காலத்தில் இருந்ததைவிட 76.6% உயர்ந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

- நடப்பு நிதி ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான மூன்றாவது காலாண்டில் புராக்டர் & கேம்பிள் நிறுவனம் ரூ.624.28 கோடி வருவாய் ஈட்டியது.

## மே – 8

- அமெரிக்காவில் பணிபுரிய தற்காலிகமாக அனுமதிக்கப்படும் பிற நாட்டு திறன்மிகு பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஹெச்1பி விசாவை ஏப்ரல் 3 முதல் நிறுத்திவைக்க அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். டிரம்பின் இந்த அதிரடி நடவடிக்கை உலக அளவில் பெரும் பரபரப்பையும் சர்ச்சையையும் ஏற்படுத்தி இருக்கிறது.

- இன்று காலை வர்த்தக தொடக்கத்தில் சென்செக்ஸ் 78 புள்ளிகள் உயர்ந்து காணப்பட்டது. கடந்த வர்த்தகத்தில் குறியீடு 267.41 புள்ளிகளாக சரிந்துள்ளதை அடுத்து, இன்று மும்பை பங்கு சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 78.22 புள்ளிகள் உயர்ந்து 29937.02 புள்ளிகளாக உள்ளது.

- இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய

ரூபாயின் மதிப்பு 13 காசுகள் உயர்ந்து ரூ.64.25 காசுகளாக உள்ளது.

- மொபைல் அழைப்புகள் தரமாக உள்ளதா, இல்லையா என தரத்தை பதிவு செய்ய மொபைல் ஆப் அறிமுகம் செய்ய டிராய் முடிவு செய்துள்ளது.

- தெற்காசிய நாடுகளுக்காக டெல்லியில் ஆசிய மேம்பாட்டு வங்கியின் கிளை ஏற்படுத்த வேண்டும் என்று ஆசிய மேம்பாட்டு வங்கியிடம் (ஏ.டி.பி) இந்தியா வலியுறுத்தியுள்ளது.

- ஜப்பான் நிறுவனங்கள் இந்தியாவில் உற்பத்தி ஆலைகளை அமைக்க வேண்டும், இந்தியாவில் உற்பத்தியை தொடங்க வேண்டும் என்று நிதியமைச்சர் அருண் ஜேட்லி அழைப்பு விடுத்துள்ளார்.

## மே – 9

- இன்றைய வர்த்தக தொடக்கத்தில் சென்செக்ஸ் 76 புள்ளிகள் உயர்ந்து காணப்பட்டது. கடந்த வர்த்தகத்தில் குறியீடு 67.35 புள்ளிகளாக உயர்ந்துள்ளதை அடுத்து, இன்று மும்பை பங்கு சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 76.39 புள்ளிகள் உயர்ந்து 30002.54 புள்ளிகளாக உள்ளது.

- இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அந்நிய செலவாணி சந்தையில் அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 20 காசுகள் சரிந்து ரூ.64.51 காசுகளாக உள்ளது.

- அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, ஆப்பிள் உள்ளிட்ட அந்நாட்டின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களின் செயல் அதிகாரிகளை சந்தித்து தன்னுடைய மாநிலத்தில் முதலீடு செய்ய வருமாறு அழைப்பு விடுத்தார்.

- மத்திய அரசின் புதிய திட்டங்கள் அடிப்படையில் ரூ.30 லட்சத்துக்குள் வங்கிக் கடன் பெறும் நடுத்தர மக்களுக்கான வீட்டுக்கடன் வட்டி விகிதம் 0.25 சதவீதத்தை ஸ்டேட் பாங்க் குறைத்துள்ளது.

- புதிதாக தொடங்கவுள்ள தொழிற்சாலைகளுக்கான அனுமதியை ஆன்-லைனில் வழங்கும் முறையை தமிழக அரசு செயல்படுத்தியுள்ளது.

- கடந்த நிதியாண்டில் 3.20 கோடி டன் சரக்குகள் கையாண்டு ரூ.681 கோடி மொத்த வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது. இதில் ரூ.460 கோடி நிகர லாபமாக இருக்கும்.

- இந்தியாவில் அமலாக உள்ள சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விதிப்பு முறையால் பொருள்களின் விலை உயராது என்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.


We Shine Academy™

## மே – 10

- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) முறை இந்த ஆண்டு ஜூலை 1ம் தேதி முதல் அமலாக உள்ளது. இந்நிலையில் ஜிஎஸ்டி நெட்வொர்க்கில் பதிவு செய்வதற்கான முறை அடுத்த சில வாரங்களில் தொடங்கும் என்று நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது.

- நுகர்பொருள் தயாரிப்பில் மிகப் பெரிய குழுமமாக விளங்கும் கோத்ரேஜ் குழுமத்தின் தலைவராக நிசாபா பதவியேற்றார்.

- சேமநல நிதிக்கான வட்டி குறைக்கப்பட்டதை தொடர்ந்து பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்துக்கான வட்டியும் 8.5 சதவீதத்தில் இருந்து 7.9 சதவீதமாக குறைக்கபட்டுள்ளது.

- பொதுத் துறையைச் சேர்ந்த யூனியன் பேங்க் ஆ∴ப் இந்தியா நான்காவது காலாண்டில் ரூ.108.22 கோடி லாபம் ஈட்டியுள்ளது.

- பயணிகள் கார் விற்பனை உள்நாட்டு சந்தையில் சென்ற ஏப்ரல் மாதத்தில் 14.68 சதவீதம் அதிகரித்துள்ளது.

- இன்று காலை வர்த்தக தொடக்கத்தில் சென்செக்ஸ் 160 புள்ளிகள் உயர்ந்து காணப்பட்டது. கடந்த இரண்டு நாள் வர்த்தகத்தில் குறியீடு 74.45 புள்ளிகளாக உயர்ந்துள்ளதை அடுத்து, இன்று மும்பை பங்குச்சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 159.62 புள்ளிகள் உயர்ந்துள்ளது.

## மே – 11

- இந்திய பங்குச்சந்தைகள் தொடர் உச்சத்தில் இருக்கின்றன. முதல் முறையாக நிப்டி 9400 புள்ளிகளுக்கு மேலே உயர்ந்து முடிந்தது. நேற்றைய வர்த்தகத்தில் அதிகபட்சமாக 9414 புள்ளிகளைத் தொட்டது. வர்த்தகத்தின் முடிவில் 90 புள்ளிகள் உயர்ந்து 9407 புள்ளிகளில் நிப்டி முடிவடைந்தது.

- பணமதிப்பு நீக்கத்தின் போது மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளைப் பற்றிய விவரங்களை அளிக்க முடியாது என ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. மேலும் விவரங்களை வெளியிட்டால் நாட்டின் பொருளாதார நலனுக்கு தீங்காக அமையும் எனவும் ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

- மத்திய அரசின் மலிவு வீடு வழங்கும் திட்டத்தால் திறன்மிகு ஊழியர்களின் தேவை கட்டுமானத் துறையில் 7 சதவீதமும், ரியல் எஸ்டேட் துறையில் 6 சதவீதமும் உயர்ந்துள்ளது என்று டைம்ஸ் ஜாப்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளது.

- ஜப்பானைச் சேர்ந்த முதலீட்டு நிறுவனமான சாப்ட்பேங்க், இந்திய ஸ்டார்அப் நிறுவனங்களான ஓலா, ஸ்நாப்டீல் உள்ளிட்ட நிறுவனங்களில் முதலீடு செய்திருக்கிறது.

- வீடியோகான் குழுமத்தைச் சேர்ந்த வீடியோகான் டிடீஹெச் நிறுவனத்தை ஜீ குழுமத்தைச் சேர்ந்த டிஷ் டிவி உடன் இணைப்பதற்கு போட்டி ஒழுங்குமுறை ஆணையம் ஒப்புதல் (சிசிஐ) வழங்கி இருக்கிறது.

- மும்பை பங்கு சந்தையான சென்செக்ஸ் 76 புள்ளிகள் உயர்ந்து 30324 என்ற அளவிலும், தேசிய பங்குச் சந்தையான நிப்ஃடி 29 புள்ளிகள் உயர்ந்து 9437 என்ற அளவிலும் வர்த்தகமாகிறது.

- வறட்சியால் தென்னை சாகுபடியும், கொப்பரை உற்பத்தியும் பாதிக்கப்பட்டதால் தேங்காய் எண்ணெய் வரத்து குறைந்து டின்னுக்கு (15கிலோ) 300 அதிகரித்துள்ளது.

## மே – 12

- இசூஸீ மோட்டார்ஸ் இந்தியா நிறுவனம் "எம்யு – எக்ஸ்" என்ற புதிய வகை சொகுசு காரை அறிமுகம் செய்தது. இதன் விலை மாடல்களுக்கு ஏற்ப ரூ.23.99 லட்சம் முதல் ரூ.25.99 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மாடல்கார்கள் ஆந்திர மாநிலம் ஸ்ரீசிட்டியில் நிறுவனத்துக்கு சொந்தமான ஆலையில் தயாரிக்கப்படும்.

- நாட்டின் நான்காவது பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான ஹெச்.சி.எல். நான்காம் காலண்டு நிகர லாபம் 27% அதிகரித்துள்ளது.

- ஆன்லைன் வர்த்தக நிறுவனமான ஸ்நாபபீலை ஃப்ளிக்கார்ட் நிறுவனத்துக்கு விற்பனை செய்வது தொடர்பாக நெக்லஸ் வென்ச்சர் பார்ட்னர்ஸ் நிறுவனத்தின் அனுமதியை ஸாப்ட்பேங்க பெற்றுள்ளது.

- இந்திய அரசு ஸ்திரமான வரிவிதிப்பு முறைகளை அமல்படுத்த வேண்டும் மேலும் அநாவசிய கெடுபிடிகளை தவிர்ப்பதன் மூலம் அந்நிய முதலீடுகளை இந்தியா அதிகளவில் ஈர்க்க முடியும் என டெல்டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரி டாம் ஸ்வீட் தெரிவித்தர்

## மே – 13

- இந்தியா 2030-ம் ஆண்டுக்குள் ஒரு ஜிகா டன் கார்பன் உமிழ்வை சேமிக்க வேண்டுமென்றால் பேட்டரி வாகனங்கள் பயன்பாட்டை அதிகரிக்க வேண்டும் என்று நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையில் தெரியவந்துள்ளது.

- எப்எம்சிஜி துறையின் முக்கியமான நிறுவனமான நெஸ்லேவின் மார்ச் காலாண்டு நிகர லாபம் 6.8 சதவீதம் உயர்ந்து ரூ.306 கோடியாக இருக்கிறது.

- இந்தியாவின் அந்நிய செலாவணி கையிருப்பு புதிய உச்சத்தை எட்டியுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு இதுவரை இல்லாத அளவுக்கு 37571 கோடி

டாலராக உயர்ந்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

- ஸ்நாப்டீல் நிறுவனத்தை பிளிப்கார்ட்டுக்கு விற்க முதலீட்டு நிறுவனமான நெக்ஸஸ் ஒப்புதல் வழங்கி இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

- சில்லரை விலை பண வீக்கம் கடந்த மாதத்தில் 3 சதவீதத்துக்கு கீழ் சரிந்தது. கடந்த ஏப்ரல் மாதத்துக்கான சில்லரை பணவீக்கம் 2.99 சதவீதமாக சரிந்துள்ளது.

## மே – 14

- சீனா, ஜப்பான், தென் கொரியா, ரஷ்யா மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து உருக்குப் பொருள்கள் மிகவும் குறைவான விலைக்கு இறக்குமதி செய்யப்படுகிறது. இதனால் உள்நாட்டில் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு மத்திய அரசு இறக்குமதி செய்யப்படும் உருக்குப் பொருள்கள் இறக்குமதிக்கு பொருள் குவிப்பு வரி விதிக்கப்பட்டுள்ளது.

- மருந்து துறையைச் சேர்ந்த டாக்டர் ரெட்டீஸ் லேபரட்டரீஸ் நிறுவனத்தின் நான்காம் காலாண்டு லாபம் 3 மடங்கு அதிகரித்துள்ளது. நிகர லாபம் ரூ.12.6 கோடியிலிருந்து 3 மடங்கு வளர்ச்சி கண்டு ரூ.337.6 கோடியாக காணப்பட்டுள்ளது.

- எல் ரூ டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் சென்ற நிதி ஆண்டில் ரூ.1042 கோடி லாபம் ஈட்டியது. 2016-17 நிதி ஆண்டின் நான்காவது காலாண்டில் நிறுவனம் நிர்வகிக்கும் சராசரி சொத்து மதிப்பு ரூ.25945 கோடியிலிருந்து 51 சதவீதம் அதிகரித்து ரூ.39300 கோடியாக காணப்பட்டுள்ளது.

- மும்பை பங்குச் சந்தையில் கடந்த வாரம் நடைபெற்ற வர்த்தகத்தின் இடையே சென்செக்ஸ் எப்போதும் இல்லாத வகையில் 30366 புள்ளிகளைத் தொட்டது. அதேபோன்று வரலாற்றில் முதல் முறையாக நிஃப்டியும் 9450 புள்ளிகள் வரை சென்றது.

## மே – 15

- பான் அட்டை மற்றும் ஆதார் அட்டைகளில் தவறான விவரங்கள் இருந்தால் ஆன்லைன் மூலமாக சரிசெய்து கொள்ளும் வசதியை வருமான வரித்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் ஆதார் எண்ணையும் பான் எண்ணையும் இணைத்து கொள்ளும் வசதியையும் தொடங்கியுள்ளது.

- ரூபாய் நோட்டுகள் வைத்திருக்கும் பண இருப்பு வங்கிகளின் (கரன்ஸி செஸ்ட்) பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ரிசர்வ் வங்கி எடுத்து வருகிறது. மேலும் ரூபாய் நோட்டுகளை எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பு அம்சங்களையும் பலப்படுத்தி வருகிறது.

- மியூச்சுவல் பண்ட்களுக்கு வரும் முதலீடுகள் இந்தியாவின் பெரிய 15 நகரங்களில் இருந்தே வருகிறது. இந்த நகரங்களைத் தாண்டி, மியூச்சுவல் பண்டில் முதலீடு செய்பவர்களின் எண்ணிக்கை 41 சதவீதம் உயர்ந்து ரூ.3.09 லட்சம் கோடியாக இருக்கிறது.

- உலகின் சிறந்த 100 வென்ச்சர் கேபிடல் முதலீட்டாளர்கள் பட்டியலை போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டிருக்கிறது. இதில் 11 இந்திய வம்சாவளிகள் இடம் பிடித்திருக்கின்றனர்.

- இன்று வர்த்தக தொடக்கத்தில் சென்செக்ஸ் 165 புள்ளிகள் உயர்ந்து காணப்பட்டது. கடந்த வர்த்தகத்தில் குறியீடு 62.83 புள்ளிகளாக உயர்ந்துள்ளதை அடுத்து, இன்று மும்பை பங்குச்சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 165.90 புள்ளிகள் உயர்ந்து 30354.05 புள்ளிகளாக உள்ளது.

- இன்றைய வர்த்தகநேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 23 காசுகள் உயர்ந்து ரூ.64.08 காசுகளாக உள்ளது.

- மத்திய அரசு கடந்த 74ம் ஆண்டு, கைத்தறித் துறைக்கு தேவையான நூல் இருப்பை உறுதிப்படுத்துவதற்காக சிட்டா நூல் கொள்கையை அறிமுகப்படுத்தியது. இதன்படி ஸ்பின்னிங் மில்களில் 50 சதவீதம் சிட்டா நூல் கட்டாயம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று அறிவித்துள்ளது.

- ஸ்டென்ட் விலை கட்டுப்பாட்டை தொடர்ந்து, 19 மருத்துவ கருவிகளின் விலையை குறைக்க மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணையம் திட்டமிட்டுள்ளது. இதற்காக அவற்றின் விலை விவரங்களை கண்காணித்து வருகிறது. இந்த மாத இறுதிக்குள் பட்டியலை சமர்ப்பிக்க நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

- ஒற்றை ஓடும்பாதை கொண்ட மும்பை விமான நிலையத்தில் 65 விநாடிகளுக்கு ஒரு விமானம் என்ற வகையில் தினமும் 837 விமானங்களை கையாண்டு வருகிறது. அதற்கு அடுத்தபடியாக லண்டன் கேட்விக் விமான நிலையம் பயணிகளைக் கையாளும் எண்ணிக்கையிலும் மும்பை விமான நிலையமே முதலிடத்தில் உள்ளது.

## மே – 16

- மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஆபரண தங்கத்தின் தேவை அதிகரித்து வருவதால் இந்திய ஏற்றுமதி நடப்பாண்டில் 4200 கோடி டாலர் அளவுக்கு உயரும் என்று இந்திய ஆபரண நகை ஏற்றுமதியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

- வர்த்தக முடிவில் இந்திய பங்குச்சந்தையில் சென்செக்ஸ் 260 புள்ளிகள் உயர்ந்து 30582 புள்ளிகளாக உள்ளது. நிப்டி 66 புள்ளிகள் உயர்ந்து 9512 புள்ளிகளாக உள்ளது.

- இன்று வர்த்தக தொடக்கத்தில் சென்செக்ஸ் 181 புள்ளிகள் உயர்ந்து காணப்பட்டது. கடந்த வர்த்தகத்தில் குறியீடு 134 புள்ளிகளாக உயர்ந்துள்ளதை அடுத்து, இன்று மும்பை பங்குசந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 181.36 புள்ளிகள் உயர்ந்து 30503.48 புள்ளிகளாக உள்ளது.

- இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 6 காசுகள் சரிந்து ரூ.64.11 காசுகளாக உள்ளது.

- தமிழகத்தில் விளைச்சலே இல்லாத போதும், இந்த ஆண்டு தேசிய அளவில் அபாரமான மகசூல் இருக்கும் என மத்திய அரசு கணித்துள்ளது.

- நாடு முழுவதும் பெண்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நிதி உதவி வழங்க, 1000 கோடியில் நிர்பயா நிதியம் கடந்த 2013ம் ஆண்டு மத்திய அரசு உருவாக்கியது. ஒவ்வொரு ஆண்டும் நிர்பயா நிதியத்துக்கு 1000 கோடி ஒதுக்கப்படுகிறது. இந்நிலையில், நிர்பயா நிதி உதவியுடன், 983 ரயில் நிலையங்களில் சிசிடிவி கேமராக்களை பொருத்த ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

- சென்ற ஏப்ரல் மாதத்தில் ஜவுளி, பொறியியல் சாதனங்கள், ஆபரணங்கள், பெட்ரோலிய பொருள்களின் ஏற்றுமதி குறிப்பிடும்படியான அளவில் அதிகரித்தது. அதன் காரணமாக, நாட்டின் ஏற்றுமதி 19.77% அதிகரித்து 2463 கோடி டாலரை எட்டியுள்ளது.

## மே – 17

- தகவல் தொழில்நுட்பத் துறையில் மிகப்பெரும் அளவுக்கு வேலை இழப்பு ஏற்படாது என்று மத்திய அரசுக்கு ஐடி நிறுவனங்கள் உத்திரவாதம் அளித்துள்ளதாக தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் அருணா சுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடுகளை ஈர்ப்பதில் உலக அளவில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது.

- தகவல் தொழில்நுட்பத் துறையின் முன்னணி நிறுவனமான டிசிஎஸ், தனது பங்குகளை திரும்ப வாங்கும் முடிவினை பிப்ரவரி மாதம் அறிவித்தது. அதன்படி முதலீட்டாளர்களிடம் உள்ள ரூ.16000கோடி மதிப்பிலான பங்குகளை திரும்ப வாங்க உள்ளது.

- நோக்கியா பிராண்ட் செல்லிடப்பேசிகளை வடிவமைத்து உலகம் முழுவதும் விற்பனை செய்வதற்கான உரிமத்தை எச்.எம்.டி குளோபல் பெற்றுள்ளது. மேலும், நோக்கியா கார்ப்பரேஷன் மேம்படுத்திய தொழில்நுட்பங்களையும் பயன்படுத்திக் கொள்ள அனுமதி வாங்கப்பட்டுள்ளது.

- மாம்பழம் விலை குறைந்துள்ளதால் சில்லறை வியாபாரிகளும், பொதுமக்களும் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். மல்கோவா, அல்போன்சா பழங்கள் இன்னும் 10 நாட்களுக்கும், குதாதத், செந்தூரா மாம்பழங்கள் 1மாதம் வரையும் சீசன் இருக்கும் என்று வியாபாரிகள் கூறியுள்ளனர்.

- நாடு முழுவதும் ஒரே வரி விதிப்புக்கு வகை செய்யும் சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) ஜுலை 1ம் தேதியில் இருந்து அமல்படுத்தப்பட இருக்கிறது.

- இந்தியர்களிடையே தங்கத்தின் மீதான மோகத்தை குறைக்கவும், நகை முதலீட்டை குறைத்து பத்திரத்தில் முதலீடு செய்யும் வழக்கத்தை கொண்டு வரவும் தங்க பத்திரம் திட்டத்தை 2015ம் ஆண்டு நவம்பரில் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். ஆனால் தங்க பத்திர திட்டம் தங்க மோகத்தை குறைக்க உதவவில்லை என ஆய்வில் தெரியவந்துள்ளது.

## மே – 18

- சர்வதேச அளவில் பல்வேறு பிரச்சனைகள் இருந்தாலும் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்து வருகிறது என்று நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- இன்று காலை வர்த்தக தொடக்கத்தில் சென்செக்ஸ் 222 புள்ளிகள் சரிந்து காணப்பட்டது. கடந்த மூன்று நாள் வர்த்தகத்தில் குறியீடு 470.62 புள்ளிகளாக உயர்ந்துள்ளதை அடுத்து, இன்று மும்பை பங்குச்சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 222.21 புள்ளிகள் சரிந்து 30436.56 புள்ளிகளாக உள்ளது.

- இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 27 காசுகள் சரிந்து ரூ.64.42 காசுகளாக உள்ளது.

- மக்கள் அதிகம் பயன்படுத்தும் மருந்துகள் பல, அத்தியாவசிய மருந்துகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றின் விலையை தேசிய மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணையம் நிர்ணயித்து வருகிறது.

- டிரக் மற்றும் பஸ் ரேடியல் டயர்கள் கடந்த நிதியாண்டில் சராசரியாக மாதத்துக்கு 1.2 லட்சம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதற்கு முந்தைய ஆண்டை விட இது 9 சதவீதம் அதிகம். ரேடியல் டயர் இறக்குமதி கடந்த 4 ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது.

- நியூசிலாந்து நாட்டின் '.:.பேர்.:.பாக்ஸ் மீடியா' என்ற அச்சுப் பத்திரிக்கையும் 'நியூசிலாந்து மீடியா என்டர்டெய்ன்மென்ட்' என்ற பத்திரிக்கையும் இணையக் கூடாது என்று அந்நாட்டு வர்த்தக ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

- பேமெண்ட் வங்கி சேவை செயல்பாடுகளை மே மாதம் 23ம் தேதி முதல் பேடிஎம் நிறுவனம் தொடங்க இருக்கிறது. பேமெண்ட் வங்கி செயல்பாடுகளை

பேடிஎம் நிறுவனம் தொடங்க இருக்கிறது.

- உலக தொலைத்தொடர்பு தினத்தை முன்னிட்டு பிஎஸ்என்எல் நிறுவனம் எஸ்டிவி 333 திட்டத்துக்கு சிறப்புச் சலுகையை அறிவித்துள்ளது.

## மே – 19

- பாரத ஸ்டேட் வங்கியின் 4ம் காலாண்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் வங்கியின் நிகர லாபம் 123% அதிகரித்துள்ளது.

- வீட்டு உபயோகப் பொருட்களை தவணை முறையில் வாங்குவதற்கு சிறப்பு கடன் அட்டையை (இஎம்ஐ கார்டு) விவேக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து பஜாஜ் பின்சர்வ் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- ஹெச் 1பி விசா நடைமுறைகளால் ஹெச்சிஎல் நிறுவனத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று நிறுவனத்தின் துணைத் தலைவர் ஸ்ரீமதி சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

- நடப்பாண்டுக்கு பிறகு இந்தியாவில் கார்களை விற்கும் திட்டம் இல்லை என ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

- கல்வி மற்றும் சுகாதாரம் சேவை துறைகள் என்பதால் அவைகளுக்கு ஜிஎஸ்டியில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

- இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 16 காசுகள் உயர்ந்து ரூ.64.68 காசுகளாக உள்ளது.

## மே – 20

- காதி துறை மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 5 கோடி பேருக்கு வேலை வழங்கப்படும் என்று மத்திய சிறு, குறு நடுத்தர தொழில்துறை அமைச்சர் கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

- கோடக் மஹிந்திரா வங்கி மற்றும் டாடா மோட்டார்ஸ் டிவிஆர் ஆகியவை பிஎஸ்இ சென்செக்ஸ் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இது ஜூன் 19ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- முருகப்பா குழுமத்தின் சந்தை மதிப்பு 43 சதவீதம் உயர்ந்து 800 கோடி டாலராக உயர்ந்திருப்பதாக குழுமத் தலைவர் ஏ.வெள்ளையன் தெரிவித்துள்ளார்.

- ஜிஎஸ்டி வரி விதிப்பில் கார்களுக்கு ஒரே சீரான வரி விதிக்கப்படும் நிலையில்

We Shine Academy™

சிறிய ரக காரின் விலை உயர்வதற்கும், எஸ்யுவி விலை குறைவதற்கும் வாய்ப்பு உள்ளது.

- தொழிலாளர், மூலப்பொருள் பற்றாக்குறையால் வார்ப்படங்கள் உற்பத்தி 3 மடங்கு சரிந்துள்ளது.

- 2016-17ம் நிதி ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான நான்காம் காலாண்டில் ஆதித்ய பிர்லா குழுமத்தைச் சேர்ந்த கிராஸிம் நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.1055.26 கோடியிலிருந்து ரூ.1063.62 கோடியாக அதிகரித்துள்ளது.

## மே – 21

- வடகிழக்கு மாநிலங்களில் தொழில் வளர்ச்சியை அதிகப்படுத்துவதற்கு புதிய தொழில் கொள்கையை உருவாக்கி வருவதாக மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

- அந்நிய செலாவணி கையிருப்பு தொடர்பான புள்ளி விவரங்களை ரிசர்வ் வங்கி ஒவ்வொரு வாரமும் வெளியிட்டு வருகிறது. இதில் நாட்டின் அந்நிய செலாவணி மே 12ம் தேதி நிலவரப்படி 44 கோடி டாலர் சரிந்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

- குறைந்த வரி விதிப்பால் லாபமடையும் நிறுவனங்கள் நுகர்வோர்களுக்கு அந்த பலனைக் கொண்டு செல்ல வேண்டும். அப்படி செய்யாமல் அதீத லாபமீட்டும் நோக்கில் நிறுவனங்கள் செயல்பட்டால் நிறுவனத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு எச்சரித்துள்ளது.

- புதிய ஜிஎஸ்டி வரி விகிதங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு எகானமி வகுப்பு விமான கட்டணம் குறையும். மேலும் நடுத்தர மக்களும் விமானத்தில் பயணம் செய்வதற்கு ஏதுவாக வரி விகிதங்கள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்று துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

- பொதுத் துறையைச் சேர்ந்த கார்ப்பரேஷன் வங்கி சென்ற நிதி ஆண்டின் ஜனவரி முதல் மார்ச் வரையிலான நான்காவது காலாண்டில் ரூ.5730.48 கோடி வருவாய் ஈட்டியுள்ளது.

## மே – 22

- சரக்கு மற்றும் சேவை வரியை (ஜிஎஸ்டி) அமல்படுத்துவதால் நாட்டின் பணவீக்கம் 2 சதவீதம் குறையும் என்று மத்திய வருவாய்த் துறை செயலாளர் ஹஷ்முக் ஆதியா தெரிவித்துள்ளார்.

- பிரதமர் மோடி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சந்தை மதிப்பு ரூ.50 லட்சம் கோடி உயர்ந்திருக்கிறது. மேலும் டாடா, பிர்லா, அம்பானி மற்றும் பஜாஜ் குழுமங்களின் சந்தை மதிப்பு தலா 1லட்சம் கோடி ரூபாய் உயர்ந்திருக்கிறது.


We Shine Academy

➢ 2014-2015ம் ஆண்டில் சர்வதேச அளவில் முதல் 100 இடங்களில் இருக்கும் சொகுசு பிராண்ட்களின் விற்பனையை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டியலில் மூன்று இந்திய நிறுவனங்கள் இடம் பிடித்திருக்கின்றன.

➢ இன்று வர்த்தக தொடக்கத்தில் சென்செக்ஸ் 227 புள்ளிகள் உயர்ந்து காணப்பட்டது. மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 227.44 புள்ளிகள் உயர்ந்து 30692.36 புள்ளிகளாக உள்ளது.

➢ அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 15 காசுகள் உயர்ந்து ரூ.64.49 காசுகளாக உள்ளது.

➢ ஜிஎஸ்டி வரி விதிப்பு அமலுக்கு வந்த பிறகும், மொபைல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை தொடர்ந்து கிடைக்கும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

➢ வர்த்தகம் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்த விசாகப்பட்டினம் முதல் சென்னை வரை கடற்கரை சாலை அமைக்கப்படும் என ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

➢ உள்நாட்டு விமான சேவையை 91லட்சம் மக்கள் பயன்படுத்தியதால், கடந்த ஏப்ரல் மாதத்தில், விமான பயணிகளின் எண்ணிக்கை 15.15 சதவீதம் அதிகரித்துள்ளது என விமான போக்குவரத்து பொது இயக்குநரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரியவந்துள்ளது.

## மே – 23

➢ பேடிஎம் நிறுவனம் பேமெண்ட் வங்கியை இன்று முதல் தொடங்கியது. மேலும் 2020ஆம் ஆண்டில் 500 மில்லியன் வாடிக்கையாளர்களைப் பெற வேண்டும் என்பதை இலக்காக கொண்டு வங்கி சேவையைத் தொடங்க இருப்பதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

➢ ஜாகுவார் லாண்ட் ரோவர் நிறுவனம் புதிய ஜாகுவார் எக்ஸ்இ செடான் டீசல் காரை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ இந்தியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிடையேயான ஒப்பந்தம் காரணமாக இரு நாடுகளுக்கும் ஏராளமான வாய்ப்புகள் உருவாகும் என்று மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்துள்ளார்.

➢ இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 23 காசுகள் சரிந்து ரூ.64.78 காசுகளாக உள்ளது.

➢ இன்று வர்த்தக நேர தொடக்கத்தில் சென்செக்ஸ் 85 புள்ளிகள் சரிந்து

காணப்பட்டது. மும்பை பங்கு சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 85.17 புள்ளிகள் சரிந்து 30485.80 புள்ளிகளாக உள்ளது.

- ஜிஎஸ்டியில் தங்கத்துக்கு 5 சதவீத வரி விதிக்க பெரும்பாலான மாநிலங்கள் ஒப்புக்கொண்டுள்ளதாக கேரள அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மே – 24

- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) விதிப்பு முறையால் பல பொருள்களின் விலை குறையும். குறிப்பாக பேக் சிமெண்ட், மருத்துவ கருவிகள், ஸ்மார்ட்போன்கள் உள்ளிட்டவற்றின் விலை குறையும் என மத்திய நிதி அமைச்சர் அருண் ஜேட்லி கூறினார்.

- இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி விஷால் சிக்காவின் சம்பளம் 67 சதவீதம் சரிந்திருக்கிறது.

- டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் நான்காம் காலாண்டு லாபம் ரூ.4336.43 கோடியாக உள்ளது.

- மும்பை பங்குச் சந்தையில் நடைபெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் 205 புள்ளிகள் வீழ்ச்சியடைந்து 30365 புள்ளிகளாக நிலைத்தது.

- உள்நாட்டில் சென்ற ஏப்ரல் மாதத்தில் 29.30 லட்சம் டன் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டின் இதே கால அளவில் உற்பத்தியான 29.50 லட்சம் டன் கச்சா எண்ணெய் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது 0.6% குறைவாகும்.

- இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (எல்.ஐ.சி) மேற்கொண்ட முதலீடுகள் மூலம் அந்நிறுவனம் சென்ற நிதி ஆண்டில் ரூ.1.80 லட்சம் கோடி வருவாய் ஈட்டியது.

- வாடகைக் கார் சேவையில் ஈடுபட்டுள்ள உபேர் இந்தியா நிறுவனம் புதிதாக வடிவமைத்துள்ள செயலியை (ஆப்) 29 நகரங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.

## மே – 25

- சீனாவின் பொருளாதார மதிப்பீட்டை மூடிஸ் குறைத்துள்ளது. தற்போது ஏ1 என்ற தர மதிப்பீட்டை சீனாவுக்கு மூடிஸ் வழங்கியுள்ளது.

- ஜிஎஸ்டி சட்டத்தினால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) அதிகரிக்கும் என ஹெச்எஸ்பி அறிக்கை கூறியுள்ளது.

- இந்தியாவின் நான்காவது மிகப்பெரிய நிறுவனமான ஹெச்சிஎல் டெக்னாலஜீஸ் ரூ.3500 கோடிக்கு பங்குகளை திரும்ப வாங்குவதாக அறிவித்திருக்கிறது.

- இந்தியாவில் உள்ள அனைத்து வங்கிகளின் மொத்த வாராக்கடன் 2016-17ம் நிதியாண்டில் 29.1 சதவீதம் அதிகரித்துள்ளது.

- இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் காரணமாக பங்குச்சந்தைகள் வெகுவாக சரிந்து வர்த்தகம் காணப்பட்டது. வர்த்தக நேர முடிவில் மும்பை பங்குச்சந்தையின் குறியீட்டு எண் சென்செக்ஸ் 63.61 புள்ளிகள் சரிந்துள்ளது.

- இந்திய பங்குச் சந்தைகள் சாதனை உச்சத்தை தொட்டுள்ளது. வர்த்தக முடிவில் இந்திய பங்குச்சந்தையில் சென்செக்ஸ் 430 புள்ளிகள் உயர்ந்து 307332 புள்ளிகளாக உள்ளது.

- பிஎஸ்என்எல் நிறுவனத்தின் சாட்டிலைன் போட் சேவையை மத்திய தொலைத்தொடர்பு துறை அமைச்சர் மமோஜ் சின்ஹா புதுடெல்லியில் நேற்று தொடங்கி வைத்தார்.

## மே – 26

- தற்போதைய சேவை வரி மூன்று சதவீதம் அதிகரிப்பதால் மியூச்சுவல் பண்ட்களின் செலவு விகிதம் அதிகரிக்கும் வாய்ப்பு உருவாகி இருக்கிறது.

- சர்வதேச தர மதிப்பீட்டு நிறுவனமான மூடிஸ் பொதுத்துறை வங்கியான ஐடிபிஐ வங்கியின் தர மதிப்பீட்டை குறைத்திருக்கிறது. பிஏஏ3 என்னும் நிலையிலிருந்து பிஏ2 என்னும் நிலைக்கு குறைத்திருக்கிறது.

- விஸ்டாரா நிறுவனத்தின் விமான சேவையில் முதலாவது ஏ320நியோ ரக விமானம் புதன்கிழமை இணைத்துக் கொள்ளப்பட்டது.

- பொதுத் துறையைச் சேர்ந்த இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் (ஐ.ஓ.சி) நிறுவனம் நான்காவது காலாண்டில் ரூ.3721 கோடி லாபம் ஈட்டியது.

- இயக்குநர்கள், துணைத் தலைவர்கள் உள்ளிட்டோரும் தாமாக முன்வந்து பதவி விலகும் திட்டத்தை முதல் முறையாக இந்தியா மற்றும் அமெரிக்காவில் காக்னிஸன்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

## மே – 27

- தனியார் துறையைச் சேர்ந்த கரூர் வைஸ்யா வங்கி சென்னை மாநகரில் 42வது கிளையை மந்தவெளியில் தொடங்கியுள்ளது.

- ஐடிசி நிறுவனத்தின் மார்ச் காலாண்டு நிகர லாபம் 12 சதவீதம் உயர்ந்து ரூ.2669 கோடியாக இருக்கிறது. கடந்த ஆண்டு இதே காலத்தில் நிகர லாபம் ரூ.2380 கோடியாக இருந்தது.

- இந்திய பங்குச்சந்தைகள் நேற்று புதிய உச்சத்தை தொட்டது. நிப்டி முதல் முறையாக 9600 புள்ளிகளும், மற்றும் சென்செக்ஸ் முதல் முறையாக 31000 புள்ளிகளையும் கடந்தது.

- மருந்து துறை நிறுவனமான சன் பார்மாவின் மார்ச் காலாண்டு நிகர லாபம் 14 சதவீதம் சரிந்து ரூ.1223 கோடியாக உள்ளது.

- நிறுவனம் தொடங்கி 7 ஆண்டுகளுக்குள் உள்ள நிறுவனங்கள் ஸ்டார்ட் அப் இந்தியா திட்டங்களை பெறலாம் என்று புதிய விதிமுறைகளை மத்திய அரசு அறிவித்துள்ளது.

- நாட்டிலேயே மிக நீளமான ஆற்றுப் பாலமான சதியா பாலம் கட்டுவதற்கு தேவையான 90 சதவீத ஸ்டீலை பொதுத்துறை நிறுவனமான செயில் வழங்கியுள்ளது.

- பல்வேறு துறைகளின் வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் ஐ.டி.சி நிறுவனம் கடந்த நிதி ஆண்டின் நான்காம் காலாண்டில் ரூ.2669.47 கோடி லாபம் ஈட்டியது.

## மே – 28

- ஐசிஐசிஐ வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியான சாந்தா கொச்சாரின் மொத்த சம்பளம் கடந்த நிதியாண்டில் 64 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

- டாடா குழுமத்தைச் சேர்ந்த இந்தியன் ஹோட்டல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) ராகேஷ் சர்னா தனது பதவியை ராஜினாமா செய்தார்.

- டிஎஸ்பி பிளாக்ராக் மியூச்சுவல் பண்ட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை முதலீட்டு அதிகாரியான எஸ்.நாகநாத் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

- சூரிய சக்தியை மட்டும் பயன்படுத்தி உலகம் முழுவதும் எந்தவித நிறுத்தமில்லாமல் விமான பயணத்தை மேற்கொள்வதற்கு ரஷ்ய தொழிலதிபர் விக்டர் விக்ஸல் பெர்கின் நிறுவனமான ரெனெவோ குழுமம் திட்டமிட்டு வருகிறது.

- சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே உள்ள கொங்கணாபுரத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் 200 மூட்டைகள் ரூ.3 லட்சத்துக்கு ஏலத்திற்கு போனது.

- தனியார், அரசு உள்பட அனைத்து வங்கிகளும், 2011-16 வரையிலான 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ.2.2லட்சம் கோடி வாராக்கடனை தள்ளுபடி செய்துள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

## மே – 29

- பொருளாதார விவகாரங்களுக்கான செயலாளராக இருக்கும் சக்திகாந்த் தாஸ் பதவி காலம் வரும் 31ம் தேதியுடன் முடிவடைகிறது. இதனை அடுத்து இந்த பொறுப்புக்கு தபன் ராய் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

- அதிக சந்தை மதிப்பு கொண்ட 10 நிறுவனங்களில் எஸ்பிஐ மற்றும் ஓஎன்ஜிசி நிறுவனங்கள் தவிர மற்ற 8 நிறுவனங்களின் மொத்த சந்தை மதிப்பு ரூ.93225.53 கோடி உயர்ந்துள்ளது.

- தனியார் நிறுவனங்களுக்கு போர் விமானங்கள், பீரங்கிகள், போர் கப்பல்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் தயாரிப்பதற்கான அனுமதி வழங்க வர்த்தக அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

- மும்பை பங்குசந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் 154.11 புள்ளிகள் சரிந்து 30874.10 புள்ளிகளாக உள்ளது.

- இன்றைய வர்த்தக நேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு 13 காசுகள் சரிந்து ரூ64.57 காசுகளாக உள்ளது.

- ஜி.எஸ்.டி.யில் ஆயுர்வேத தயாரிப்புகள் மற்றும் அது சார்ந்த மருந்துப் பொருள்களுக்கு 7 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

## மே – 30

- பொதுத்துறை தொலைத் தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல், அடுத்த 2 ஆண்டுகளில் அனைவருக்கும் சாட்டிலைட் போன் சேவை வழங்க திட்டமிட்டுள்ளது. இந்த சேவை அடுத்த 18 முதல் 24 மாதங்களில் படிப்படியாக செயல்படுத்தப்படும் என பிஎஸ்என்எல் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான அனுபம் வாஸ்தவா தெரிவித்துள்ளார்.

- ஜிஎஸ்டி அமல்படுத்திய பிறகு 9 மாதங்களில் கூடுதல் வரி மூலம் ரூ 55000 கோடி வருவாய் ஈட்ட முடியும் என மத்திய அரசு கணித்துள்ளது.

- நடப்பாண்டில் நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக ரூ 80 கோடி முதலீடு செய்ய இருப்பதாக வீல்ஸ் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

- லார்சன் & டூப்ரோ நிறுவனம் சென்ற நிதியாண்டில் ரூ 6041 கோடி லாபம் ஈட்டியது.

- சிட்டி யூனியன் வங்கியின் நிகர லாபம் கடந்த ஆண்டைவிட 13% உயர்ந்து ரூ

503 கோடியாக உள்ளது என வங்கியின் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயலதிகாரியுமான என்.காமகோடி கூறினார்.

- நடப்பாண்டில் நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக ரூ80 கோடி முதலீடு செய்ய இருப்பதாக வீல்ஸ் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

## மே – 31

- தெற்காசிய நாடுகளை நேரடியாக இணைக்கும் மேகாலயா-மியான்மர் தேசிய நெடுஞ்சாலை திட்டப்பணிகள் அடுத்த மாதத்தில் தொடங்கப்படும் என்று மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி உறுதியளித்துள்ளார்.

- ஐ.டி பணியாளர்களுக்கு சங்கம் தேவையில்லை என்று இன்ஃபோசிஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிதி அதிகாரி பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

- இந்திய வங்கிகளின் பிரச்சனைக்கு உடனடி தீர்வு கிடையாது என்றும் மேலும் 2018 மார்ச் மாதத்திற்குள் இந்திய வங்கிகளின் வாராக்கடன் விகிதம் அதிகரிக்கும் என்றும் தர மதிப்பீட்டு நிறுவனமான ஸ்டாண்டர்டு அண்ட் பூர் அறிக்கை கூறியுள்ளது.

- பொதுத்துறை தொலைத் தொடர்பு நிறுவனமான பி.எஸ்.என்.எல் அடுத்த இரண்டு ஆண்டுகளில் அனைவருக்கும் சாட்டிலைட் போன் சேவை வழங்க திட்டமிட்டுள்ளது.

- மும்பை பங்குச் சந்தையில் கடந்த நான்கு நாட்களாக சென்செக்ஸ் தொடர்ந்து முன்னேறி 31000 புள்ளிகளைக் கடந்து சாதனை படைத்துள்ளது

- இன்றைய வர்த்தகநேர துவக்கத்தில் அந்நிய செலாவணி சந்தையில், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்ப 13 காசுகள் உயர்ந்து ரூ.64.53 காசுகளாக உள்ளது.

- ஜவுளி, ஆபரணம், வேளாண் விளை பொருட்கள் உட்பட இந்தியா முத்திரை பதித்த பல்வேறு ஏற்றுமதி பொருட்களில் தனக்குரிய இடத்தை இந்தியா நழுவ விட்டது.